ஆக்காட்டி

ஒக்டோபர் - டிசம்பர் 2017 | 15

கடந்த இருபதாண்டுகளில் புனைவின் உள்ளார்ந்த வெளி சிதைக்கப்பட்டு, கதை கூறலின் புதிய சாத்தியங்கள் பின்-நவீனத்துவ உரையாடலை முன்வைத்தவர்களால் தீவிரமாக முயன்று பார்க்கப்பட்டன. அவற்றின் சிதைந்த கூறுகளை உட்செரித்த நவீனத்துவத்தின் கதைகூறல் முறை புதிர்வட்ட மீள் சுழற்சியில் இங்கு முன்மொழியப்படுகின்றது. இலக்கியத்தின் புனிதவுரு சிதைக்கப்பட்டு, அதன் அதிகாரம் கேள்விக்குள்ளானதில், இலக்கியத்தை அதீத விளையாட்டாக, கலகமாக, புனிதங்களைக் கவிழ்க்கும் செயற்பாடாகக் கைக்கொள்ள முடிகிறது. பெருங்கதையாடல்களின் தகர்வும், புனிதங்களின் தலைகீழ்க் கவிழ்ப்பும் புனைவுகளை உப-வரலாறுகளாக வாசிக்கும் புனைவுசார் வெளியைத் தந்திருக்கிறது.

கடந்த முப்பதாண்டுகளின் போர்ப் புனைவுகளுள் அதிகமானவை போராளிகளால் எழுதப்பட்டவை. அவை போருக்கான தம்மளவிலான நியாயப்பாடுகளுடன் இருந்தன அல்லது இயக்கங்களின் உள்ளார்ந்த வீழ்ச்சியின் விசனங்களாக இருந்தன. ஆயுத வன்முறைகளின் குற்றமொப்பும் பிரதிகளாகச் சொற்பப் புனைவுகளையே வாசிக்க முடியும். போரின் புனிதப்படுத்தல்சார் உளவியலிலிருந்து வாசிக்கப்பட்ட, எழுதப்பட்ட புனைவுகளிலிருந்து விலகுபவையாகப் போரினுள் பிறந்தவர்களின் புதிய புனைவுகளை வாசிக்கலாம். அவர்களுக்கு முந்தைய தலைமுறை அணுகிய 'சாகச' நோக்கிலிருந்து விலகி, புதிய அலைப் புனைவுகள் போரை அதிகாரங்களால் பலியிடப்பட்ட உடல்களாகப் முன்வைப்பதில் தொடங்குகின்றன.

போர் நினைவுகளும், வெளிப்பாடுகளும், அணுகுமுறையும் தன்னிலைசார்ந்தவை. அவற்றைப் பொதுமைப்படுத்தல்களுக்குள் அடைபட முடியாத விலகல்களின் தொகுப்பாக மட்டுமே வாசித்து, உரையாட முடியும். யதார்த்தனின் புனைவுகளில் திரளும் போர்த் தன்னிலை, போரை உள்ளிருந்து அணுகிய சுயமாகவே இருக்கிறது. அதற்குப் போர் குறித்த புனிதக் கதையாடல்களைத் தக்க வைத்திருக்க வேண்டிய தேவை இருப்பதில்லை. போரை இரத்துச் செய்யும் போக்கே புனைவில்

உருவாகி வருகிறது. முள்ளிவாய்க்கால் வரை போரோடு இழுபட்டவனின், போரை மீந்திருக்கும் உடல்களின் வலியாக உரையாடும் புனைவுகளாக வாசிப்பின் வசதிக்காகவகைப்படுத்தலாம்.

நினைவில் அழியாத காலக்கோடுகளாகும் கதைகளில், முகாம்கள் துயர்சார் குறியீடாகி மீந்திருக்கும் உடல்களின் வலிகளைப், போரில் இலக்குகளாக முன்நிறுத்தப்பட்ட மக்கள்சார் உளவியலில் இருந்து புனைவாக்குகிறார். யதார்த்தன் போரின் உள்ளார்ந்த அழிவை, வீழ்ச்சியை துயரங்களாக முன்வைத்துக் கழிவிரக்கத்தைக் கோருவதில்லை. அவர் போரின் கொடூர எதார்த்தத்தைப் புனைவுகளாக்கும் போது, நாம் இதுகாறும் ஆதுரமாக நம்பி வந்த 'போரின் புனிதவுடல்' அழுகி நம்மைத் தொந்தரவு செய்வதாக உருமாறி விடுகிறது. போரின் / போராட்டத்தின் உள்ளார்ந்த அழிவுகளை உரையாடும் புதிய அலைப் படைப்புகள், இன்னொரு முரண் உரையாடல்சார் வெளியைத் திறந்திருக்கிறது. இப்புதிய அலைப் புனைவுகளின் தொடக்க உரையாடலாக – 'மெடூசாவின் கண்களின்முன் நிறுத்தப்பட்ட காலம்' – கதைகளின் தொகுப்பை வெளியிடுகிறோம்.

•

ஆக்காட்டி

காலாண்டிதழ்

aakkaddi@gmail.com

இதழ் - *15* | டிசம்பர் | *2017*

தொகுப்பும், வடிவமைப்பும் :

தர்மு பிரசாத்

உதவி - **தர்மினி**

சாதனா

உள்கோட்டு ஓவியங்கள் - ஓவியம் - ஷமீலா யூசுப் அலி

அட்டைப்படம் - எஸ்.பி.புஸ்பகாந்தன்

வடிவமைப்பு : **லியோ dpworksfr@gmail.com**

மக்ஸ்டரில் வாசிக்க :

http://www.magzter.com/FR/akkaddi/Aakkaddi/Art/

Mail.: ***aakkaddi@gmail.com*** | *www.facebook.com/aakkaddi*

தமிழகத்தில் கருப்புப்பிரதிகள் : *+91 9444272500*

karuppupiradhigal@gmail.com

கட்டுரைகள்

அ.முத்துலிங்கமும் வெள்ளாளச் சாதி உளவியலும் • தர்மு பிரசாத்

மலையக இலக்கியமும் வரலாறு எழுதியலும்:
மலையக நவீன இலக்கிய வரலாற்றாக்க எழுத்துக்கள் • சுதர்சன் செல்லத்துரை

கதைகளின் அழகியலும், புதிய கதை சொல்லிகளும் • அனோஜன் பாலகிருஷ்ணன்

இந்திய மண்ணில் ஈழ அகதிகளின் முகாம்களும் வீடுகளும் - தொ.பத்தினாதன்

ஆணென்றும் பெண்ணென்றும்... • சி.புஷ்ராபணி

நான் உன்னை மீண்டும் சந்திப்பேன் • யோகி

கதைகள்

பொட்டு • தக்ஷிலா ஸ்வர்ணமாலி - தமிழில் : எம்.ரிஷான் ஷெரீப்

ஓ! தாவீது ராஜாவே • சாதனா

தனிமையின் நூறு ஆண்டுகள் • தர்மு பிரசாத்

மரியாள் • நசீஹா முகைதீன்

விமர்சனம்

சாதியமும், ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டமும் • பிருந்தன்

இருள் மிதக்கும் பொய்கை • உமா

கவிதைகள்

• இமாம் அத்னான் • ஷமீலா யூசப் அலி • தர்மினி • ***மின்ஹா*** • *கோ.நாதன்*

அ.முத்துலிங்கமும்

வெள்ளாளச் சாதி

உளவியலும்.

தடம் கேள்வி: ஈழத் தமிழர்கள் மத்தியில் தமிழகத் தமிழர்களிடம் உள்ளதைப் போலவே சாதி என்பது மிக ஆழமாகப் பதிந்துள்ளது. அது புலம்பெயர்ந்தோர் மத்தியிலும்கூட உயிர்த்திருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

அ.முத்துலிங்கம் : உங்களுக்கு தவறான செய்தி கிடைத்திருக்கிறது. ஈழத் தமிழர்கள் மத்தியில் சாதி வித்தியாசம் இருந்தது உண்மைதான். ஆனால் அது ஒருபோதும் வெறியாக மாறியது இல்லை. புலம் பெயர்ந்தபோது சாதியும் புலம் பெயர்ந்தது. ஆனால் ஒரு தலைமுறை கடந்த நிலையில் சாதி வித்தியாசம் எங்காவது அபூர்வமாகவே தென்படுகிறது

ஈழத்தில் சாதிய 'வித்தியாசம்' மட்டுமே இருக்கிறது, அது வெறியாக மாறிவிடவில்லை என்கிறார் அ.முத்துலிங்கம். ஈழத்தின் சாதி வெறி மிக வெளிப்படையானது; அதை நாம் வலிந்து நிறுவவேண்டியதில்லை. கே.டானியலின் நாவல்கள், நந்தினி சேவியரின் சிறுகதைகள், தெணியானின் படைப்புகள், என். கே.ரகுநாதனின் 'ஒரு பனஞ்சோலைக் கிராமத்தின் எழுச்சி' மற்றும் யோகரட்ணம் எழுதிய 'தீண்டாமைக்கொடுமைகளும் தீ மூண்ட நாட்களும்' போன்ற பிரதிகளில் யாழ்ப்பாணச் சாதிய வெறி மிக வலிமையாகப் பதிவாகியுள்ளன. அவை நிணமும் சதையுமான உள்ளிருந்து ஒலித்த படைப்புக்குரல்கள். அதை உணர்ந்து கொள்ள விரும்பாத சாதி மனநிலை மிக நுட்பமாகத் தகவமைந்துள்ளது. 'இந்திய மனம் என்று அறியப்படும் ஒன்று முற்றிலும் சாதி வர்ணம் என்பதால் மட்டும் அமைந்தது' என்பதைப் புரிந்துகொண்டால் சாதியத்தின் இருப்பையும், வெறியையும் நாம் புரிந்து கொள்ளலாம். ஈழத்தில் பலரும் சாதியம் குறித்து இப்படியான மேம்போக்கான கருத்துக்களைக் காவித்திரிபவர்களாகவே இருக்கிறார்கள். தங்கள் நம்பிக்கையைக் குலைக்கும், கலைத்துப் போடும் உண்மைகளை வாசிக்கவோ, புரிந்துகொள்ளவோ முயற்சிப்பதில்லை. தலித்தியம் குறித்து முன்வைக்கப்படும் கருத்துகளை, உரையாடல்களை ஒவ்வாமையுடன் கடந்து சொல்ல முயற்சிக்கிறார்கள் அல்லது 'தலித்' என்ற சொல்லை மட்டும் பிடித்து அது அந்நியச் சொல்

எனத் தொங்குகிறார்கள். தலித்திய உரையாடல்கள் உள் முரண்பாடுகளைக் கூர்தீட்டும், பிளவுபடுத்தும் வேலை என்பவர்கள் தேசியத்திற்கு நேரெதிராகக் கற்பிதமும் செய்பவர்கள் வசதியாக ஒன்றைப் பேசுவதில்லை. யாழ்ப்பாணச் சிவில் சமூகம் என்பது பொதுச்சுடுகாடுகளோ, பொதுப்பள்ளிக்கூடங்களோ, பொது அதிபர் நியமனங்களோ, பொது வழிபாட்டிடங்களோ, பொது வேட்பாளார்களோ இல்லாத பிளவுண்ட சமூகங்களாகச் செயற்படுகிறது. அவர்களிடம் இப்படிச் சாதியாகப் பிளந்திருக்கும் சிவில் சமூகத்தின் வன்முறையற்ற பொது இணைப்பாக எதை முன்வைப்பதென்றால் அவர்களிடமிருந்து உடைக்கமுடியாத மௌனமே பதிலாகக் கிடைக்கிறது. அது தமிழ்மொழி என்பவர்களுக்கு இணைப்பு மொழியின் போதாமைகளை நம் சூழலில் சலிப்புற உரையாடப்பட்டிருக்கிறது. அவ்விணைப்புக்கூட இதுவரை வன்முறையால் மட்டுமே சாத்தியமாகியிருந்தது. பின்நவீனச் சூழலின் பன்மைத்துவத்தையும், மற்றமையின் இருப்பையும் உள்வாங்கினாலன்றி ஒன்றையொன்று வெட்டியும், இறுகிப் பிணைந்திருக்கும் நுண்ணதிகார அலகுகளைப் பட்டியலிட முடியாது. சாதிய நுண்ணொடுக்குதலுக்கு எதிராகப் பேசவும், செயற்படவும் முடியாது. சாதிய அதிகாரம் என்பது மிக வெளிப்படையானதும், நிச்சலனமானதும் ஆகும். அது தனியே ஒரு தளத்தில் மட்டும் செயற்படுவதுமில்லை.

ஈழத்தில் சாதியம் உள்ளூறைந்து கிடக்கும் அதிகார வெளியென்பது வெள்ளாளருக்கு மட்டுமானது. இங்குள்ள தலித் மக்களுக்குச் சிவில் சமூக வெளியெதிலும் துளியும் இடமிருப்பதில்லை. சாதி மனநிலையே பொது மனநிலையாக, ஆதிக்கத் தரப்பாக இருக்கிறது. 90களில் தமிழ்நாட்டில் நிகழ்ந்த தலித்தெழுச்சி, தலித்திய விமர்சனமுறை, தலித்திய ஆய்வுகள், தலித்திய மதிப்பீடுகள் ஈழத்தில் முன்மொழியப்படவில்லை. தேசியத்தின் பெயரால் அவை அரசியல் நீக்கம் செய்யப்பட்டன. சாதியம் குறித்துப் பேசுவதும், உரையாடுவதும் தடைசெய்யப்பட்டன. தலித் விமர்சன முறையும் மதிப்பீடுகளும் முன்மொழியப்படாத இங்கு இன்னமும் யாழ் வெள்ளாள மதிப்பீடுகளும், நம்பிக்கைகளுமே சிவில் வெளியை அடைத்துக் கொள்கின்றன. அதற்கு மாற்றான தலித்துக்களின் பக்கம் இன்னும் வலிமையாக முன்வைக்கப்படவில்லை. ஈழத்து தமிழ் இலக்கியப் படைப்புகளும், மதிப்பீடுகளும், மனநிலையும் தலித்தியக் கண்ணூடு ஒப்புநோக்கி ஆய்வுக்குட்படுத்தி வெள்ளாளச்சாதி உளவியலைக் கேள்விகேட்காததாலும், அவர்களின் மதிப்பீடுகளைக் கலைத்துப் போடாததாலும் வெள்ளாளத்தரப்பே வலிமையான தரப்பாக இருக்கிறது.

சாதியத்தை மனநிலையாகப் புரிந்துகொண்டாலே அதன் நுண் ஒடுக்குதலையும்,அதிகாரச் செயற்பாட்டையும் நாம் அடையாளாம் காண முடியும். அதுவொரு தகர்க்கமுடியாத பேரிருப்பாக இன்னும் நம்முன் வியாபித்திருக்கிறது என்பதை உணரமுடியும். அதனொரு எளிய வெளிப்பாடே முத்துலிங்கத்தின் இந்தப் பதிலும். சரியாக, இங்கே அவர் அந்த வெள்ளாள உளவியலின் எச்சமாக மீந்திருக்கிறார்.

ஈழத்து இடதுசாரிகளும் சாதியத்தை 'பௌதீக' இருப்பாக மட்டுமே புரிந்து செயற்படுகிறார்கள். அவர்களது அக்டோபர் எழுச்சியால் சாதிய வேறுபாடுகளின் பௌதீக இருப்பை மட்டுமே சிதைக்க முடிந்திருக்கிறது. சாதியத்தின் வெளிப்படையான வேறுபாடுகள் உதிர்ந்து அதுவொரு மனநிலையாக உள் ஒடுங்கிவிட்டிருக்கிறது. இடதுசாரியப்பிரதிகளில் சாதியப்போராட்டமானது வர்க்கப்போராட்டமாகவே முன்மொழியப்படுகிறது. கே.டானியலின் பஞ்சமரிலும் வெள்ளாளருக்கு எதிராக மற்றைய சாதிகளின் ஒருங்கிணைவை டானியல் பேசியிருக்கிறார். எழுபதுகளின் சூழல், போராட்ட முறைமையில் இடதுசாரிகள் தங்கள் வர்க்க எல்லையினுள்ளிருந்தே சாதியப்போராட்டங்களையும் முன்னெடுத்தார்கள். ஆனால்,பின்நவீனத்துவம் கரைந்து[2] அது கவனப்படுத்திய அதிகார, விளிம்புநிலை உரையாடல்களுக்கான இந்த அமைதியான சூழ்நிலையைப் பேண அல்லது தக்கவைக்க தலித் அரசியலைப் பலிகொடுக்க வேண்டிய சூழலே இன்னும் தொடர்கிறது.

• தர்மு பிரசாத்

1- பிரேம் கட்டுரைகள் - பன்மெய்,
2- மறுமை அரங்கு- ஹரி (ஆதிரை விமர்சனம்)

நான் உன்னை மீண்டும் சந்திப்பேன்

யோகி -மலேசியா

அம்ரிதா பிரீதம் (31.08.1919 – 31.10.2005)

உங்களுக்குப் பிடித்த பெண் கவிஞர் யார் என யாராவது கேட்டால் கொஞ்சம் கூட யோசிக்காமல் நான் சொல்லும் பெயர் அம்ரிதா பிரீதம். எப்போதிலிருந்து அந்தப் பெயரை உச்சரிக்கத் தொடங்கினேன் என யோசிக்கிறேன். என் சிந்தனை பலவாறாக வேர்விட்டுச்செல்கிறது. இருப்பினும், அவர் எப்படி எனக்குள் இத்தனை தீவிரமாகஇடம்பிடித்தார்என்பதைஅறியமுடியவில்லை.

கவிஞர், நாவலாசிரியர், கட்டுரையாளர் எனப் பன்முகத்தன்மை கொண்ட ஆளுமை தான் அம்ரிதா பிரீதம். பாகிஸ்தானின், பஞ்சாப் பகுதியில் இருக்கும் குஜ்ரன்வாலாவில் பிறந்தவர் தனது 11 வயதில்தாயை இழந்தார். தந்தையோடு லாகூருக்கு இடம்பெயர்ந்த சில வருடங்களில் பிரீதம்சிங் என்பவரோடு திருமணம் நிகழ்ந்தது. திருமண வாழ்வு சந்தோஷகரமாக அமையாமல் விவாகரத்துப் பெற்றார். தனது திருமண வாழ்வில் நிகழ்ந்த கசப்பான அனுபவங்களை ஒளிவு மறைவில்லாமல் பத்திரிகைகளில் எழுதினார். அது அவருக்குப் பெண்ணிய எழுத்தாளர் என்ற கௌரவத்தைப் பெற்றுத்தந்தது. அம்ரிதா ஆரம்ப காலங்களில் காதலும்,வீரமும் கலந்த கற்பனைக் கவிதைகளையே எழுதினார். பின்னர் அவரின் கவிதை சார்ந்த பார்வையும் பாடுபொருளும் மாறத்தொடங்கின.

1947ல் இந்தியா-பாகிஸ்தான் பிரிவினையின் போது நிகழ்ந்த வன்முறைகளை, படுகொலைகளை மையப்படுத்தி 'வாரிஸ்ஷா என்ற பஞ்சாபிக் கவிஞருக்கான சிறுபாட்டு' என்ற கவிதையை எழுதினார். அந்தக் கவிதை மிகவும் பிரசித்திபெற்றது. தொடர்ந்து, இருநாடுகளுக்கான பிரிவினையை அடிநாதமாகக் கொண்டPinjar (எலும்புக்கூடு)என்ற அவரின் நாவல்

பெண்கள் மீது செலுத்தப்பட்ட, செலுத்தப்படும் அடக்குமுறைகள் மற்றும் வன்முறைகளைத் தெளிவாகப் படம் பிடித்துக்காட்டியது.

இப்படியாக நவீன பஞ்சாபி இலக்கியத்தில் அம்ரிதாவின் குரல் இன்றியமையாததாக நிலைத்தது. சாகித்ய அகடாமிவிருது அவரின் 'செய்திகள்' என்ற நீண்ட கவிதைக்காகவும், ஞானபீட விருது அவரின் 'காகிதமும் கேன்வாஸும்' என்ற கவிதைத் தொகுப்புக்காகவும் வழங்கப்பட்டன. அவரின் சுயசரிதையான 'ரெவென்யூஸ்டாம்ப்' மற்றும் 'காகிதமும் கேன்வாஸும்' போன்ற படைப்புகள் அவைகளின் பட்டவர்த்தனமான, நேர்மையான தன்மைக்காக மிகுந்த விமர்சனங்களு க்குள்ளாகின. ஏறக்குறைய 70 வருடங்களாக எழுதி வந்த அம்ரிதா 24 நாவல்கள், 23 கவிதைத்தொகுதிகள் மற்றும் 15 சிறுகதைத்தொகுதிகளை வாசகர்களுக்கு வழங்கியுள்ளார். பத்மஸ்ரீ மற்றும் பத்மவிபூஷண் போன்ற உயரிய விருதுகளும் அவருக்கு வழங்கப்பட்டன.

அம்ரிதாவின் வாழ்க்கையில் இரு மனிதர்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள். ஒருவர் சாகிர்லுதியான்வி என்ற கவிஞர், மற்றொருவர் இம்ரோஸ் என்ற ஓவியர்.

அம்ரிதா சாகிர்லுதியான்வி இவர்களுக்கிடையே கவிதை வாசிப்பு ஒன்றில் நிகழ்ந்த சந்திப்பு காதலாக மலர்ந்தது. அக்காதல் கடிதப்போக்குவரத்தில் தொடர்ந்தது. தனது கணவர் பிரீதம்சிங்கிடம் ஏற்பட்ட மனக்கசப்பு அனைத்தும் சாகிர் மூலமாக அம்ரிதாவின் மனம் பெரும் ஆறுதல் பெற்றுக்கொண்டது. சாகிரை 'என்கடவுள்', 'என்தேவதை', 'என்கவிஞன்' என்று தனது சுயசரிதையில் குறிப்பிடுகிறார். ஆனால், இன்னொரு பெண்ணின் வருகையால் சாகிர், அம்ரிதாவை விட்டு விலகத்தொடங்க, அம்ரிதா மிகவும் உடைந்து போகத்தொடங்கினார். அப்போது அம்ரிதாவின் நெருங்கிய நண்பரும் ஓவியருமான இம்ரோஸ் அக்கறையோடு அம்ரிதாவைக் கவனித்துக்கொண்டார். அம்ரிதா, மிகுந்த மனவுளைச்சலோடும், காதற்தோல்வி போன்ற குழப்பங்களில் சிக்கியிருந்த சமயத்தில், இம்ரோஸ், அம்ரிதாவைக் காதலிக்கத் தொடங்கினார். ஆனால் ; அம்ரிதாவோ, சாகிரை நினைத்த படி காலம் கழித்து வந்தார், பிறகு ஒரு நிலையில் இம்ரோஸுடன் அமைதியாக வாழத்தொடங்கினார்.

ஆனாலும், சில சமயங்களில் இம்ரோஸின் ஸ்கூட்டரில் ஏறிப் போகும்போது சாகிரின் பெயரைத் தனது விரல்களின் நுனிகளால் இம்ரோஸின் முதுகில் எழுதுவாராம். அது தெரிந்தும் இம்ரோஸ் எதையும் காட்டிக்கொள்ளாமல் அமைதியாகவே இருந்து விடுவாராம். சாகித்யஅகடாமி பரிசு அறிவிப்பைக் கேட்டவுடன் அம்ரிதா தொலைபேசியைக் கீழே போட்டுவிட்டு 'அந்தக்கவிதையை நான் சாகிருக்காக எழுதினேன், இந்தப்பரிசுக்காக அல்ல' என்று கூறி அழுதாராம்.

சாகிர் மீது எத்தனை காதல் இருந்த போதும், 'இம்ரோஸ் அம்ரிதா : காதல்கதை' என்ற நூலில் இம்ரோஸ் மீதான தனது அபிமானம், காதல் அனைத்தையும் தெளிவாகக்கூறியிருக்கிறார் அம்ரிதா.

நாற்பது வருடங்கள் இம்ரோஸ் – அம்ரிதா திருமணம்இல்லாமல், ஒன்றாக வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு ஒரு மகனும், மகளும் உள்ளனர். இந்நிலையில் அம்ரிதா கழிவறையில் வழுக்கிவிழுந்து அறுவைச் சிகிச்சைகளுக்கு உள்ளானார். அப்போதும் அவரைப் பார்க்க எந்த இலக்கியவாதிகளுமே

வரவில்லை என இம்ரோஸ் தெரிவிக்கிறார். அதன்பின் ஏற்பட்ட உடல் நலக்குறைவால் அம்ரிதா தனது 86வது வயதில் மரணம் அடைந்தார். அவரின் இறப்புக்குப் பின் இம்ரோஸ் ஓவியம் வரைவதை நிறுத்திவிட்டார். அவர் அம்ரிதாவை வரைந்த ஓவியங்கள் எண்ணற்றவை. மிகவும் ஆர்வமூட்டக்கூடிய இன்னொரு தகவல், சாகிர்லுத்யான்வி இறந்து 26 வருடங்கள் கழித்து அம்ரிதா மரணமடைந்தார். ஆனால், சாகிர் மரணித்த அதே தேதியில், அக்டோபர் 31. வாழ்விலும், சாவிலும் ஆன்மாக்களை இணைக்கும் வழியை காதல் ஒன்றே அறியும்.

கீழே வரும் 'நான் உன்னை மீண்டும் சந்திப்பேன்'(I will meet you yet again) என்ற கவிதை அம்ரிதாவின் கடைசிக்காலங்களில் இம்ரோஸுக்காக எழுதப்பட்டது. அடுத்த கவிதையான 'கன்னி' (The Virgin) சாகிர்லுத்யானிவிக்காக எழுதப்பட்டது எனச்சொல்பவர்கள் உண்டு.

•

நான் உன்னை மீண்டும் சந்திப்பேன்

நான் உன்னை மீண்டும் சந்திப்பேன்
எங்கு? எவ்வாறு? நானறியேன்
அநேகமாக உனது கற்பனையின் உருவமாவேன்
மேலும் ஒருவேளை, உனது கித்தானின் மர்மமான
வரைகோட்டில் என்னைப் பரவச்செய்து
உன்னை வெறித்துப் பார்த்தவாறிருப்பேன்

உனது வண்ணங்கள் எனைத் தழுவுவதற்காக
அநேகமாக சூரியஒளியின் கீற்றாவேன்
உனது கித்தானில் எனை ஓவியமாகத்தீட்டுவேன்
எங்கு? எப்போது? நானறியேன்
ஆனால் நான் உன்னை மீண்டும் சந்திப்பேன்

அநேகமாக ஒரு நீரூற்றாகத் திரும்ப வருவேன்
நுரைக்கும் நீர்த்துளிகளால் உன்னுடலை சுத்தம் செய்யவும்
சூடான உன் மார்பின்மீது என் குளுமை இளைப்பாறவும்
எனக்கு வேறெதுவும் தெரியாது
ஆனால் இவ்வாழ்க்கை என் துணையாக வரும்

இவ்வுடல் அழியும்போது
அனைத்தும் அழிந்துவிடும்
ஆனால் நினைவின் இழைகள்
நெய்யப்பட்டுள்ளன பொறுமையின் துகள்களால்
இந்தத் துகள்களைத் தேர்ந்தேடுப்பேன்
இழைகளை நெசவு செய்வேன்
மேலும் நான் உன்னை மீண்டும் சந்திப்பேன்.

அம்ரிதா பிரீதம்

கவிதைகள்

தமிழில் - **யோகி -மலேசியா**



கன்னி

உனது படுக்கைக்கு முன்னேறியபோது
நான் தனியாக இல்லை– அங்கு நாங்கள் இருவர் இருந்தோம்
திருமணமான பெண் மற்றும் கன்னி
உன்னுடன் துயில
என்னுள்ளிருந்த கன்னியை நான் பலிகொடுக்க வேண்டியிருந்தது
நான் அவ்வாறே செய்தேன்
சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட இப்படுகொலையால்
நேரும் அவமானத்துக்கு அனுமதியில்லாததால்
பழியின் தாக்குதலைச் சுமந்தேன்
மறுநாட்காலை, ரத்தக்கறைபடிந்த எனது கைகளைக்கண்டேன்
அவற்றைக் கழுவினேன்
ஆனால் கண்ணாடி முன் நான் நின்ற அக்கணம்
நேற்றிரவு யாரைக் கொலை செய்தேன் என எண்ணினேனோ
அவள் அங்கு நிற்பதைக்கண்டேன்
ஓ ! கடவுளே, உனது படுக்கையில் காரிருளாகவா இருந்தது
ஒருவரைக் கொல்ல வேண்டிய நான்
மற்றவரைக் கொன்றேன்?

பொட்டு

• தக்ஷிலா ஸ்வர்ணமாலி
• தமிழில் – எம்.ரிஷான் ஷெரீப்

கூரைத் தகரங்களிடையேயிருந்து தண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. பலகைச் சுவர் முழுவதுமாக ஈரலித்துப் போயிருந்தது. பலகைச் சுவரின் கீழேயிருந்தும் தண்ணீர் அறைக்குள்ளே வந்தது. நான் கட்டிலின்மேலேஅமர்ந்திருந்தேன். வாடகைக்குக் கொடுக்கவிருக்கும் பக்கத்து அறையைக் காண்பிக்கவென இன்று மாகரட் அக்கா யாரையும் அழைத்து வருவது சாத்தியமில்லை. மழை அந்தளவு பலமாகப் பெய்து கொண்டிருந்தது.

பக்கத்து அறையில் வாடகைக்கு வசித்த ஹொரவபொத்தானையைச் சேர்ந்த சகோதரியொருத்தி, அவள் பணிபுரிந்த ஆடைத் தொழிற்சாலை மூடப்பட்டதும் வீட்டுக்குப் போய்விட்டாள். காலியாகிப் போன அறையில் வசிக்கவென, டேனியா அழைத்துக் கொண்டு வந்த குடும்பத்தின் தலைவன் அறை வாடகையை மிகவும் குறைத்துக் கேட்டதனால், அவனோடு, டேனியாவுக்கும் சேர்த்துத் திட்டி துரத்திவிட நேர்ந்தது எனக்கு. டேனியா அவனை என்னிடம் கூட்டிக் கொண்டு வந்ததற்கும் கூட, அவனிடமிருந்து ஏதாவது ஒரு தொகையை அவள் பெற்றுக் கொண்டிருப்பாள். உண்மையாகவே அக்குடும்பத் தலைவனுக்கு நான் கூறிய அறை வாடகை அதிக சுமையாகத் தெரிந்திருக்கக் கூடும். எனினும் அவனுக்கு அனுதாபம் காட்டப் போனால், விதவையான நான் ஜீவிதத்தைக் கொண்டு செல்வது எவ்வாறு? எவ்வாறாயினும், எனக்குக் குடும்பமோ குழந்தைகளோ இல்லாததாலும், நான் கவனித்துக் கொள்ள வேண்டியது என்னை மாத்திரமே என்பதனாலும், அந்த நபரைக் குறித்துக் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்திருக்கலாமோ என எனக்குத் தோன்றியது.

எனக்கு,மழை ஓசையினிடையே மோட்டார் சைக்கிளொன்றின் சத்தம் கேட்டது. அந்தச் சத்தம் எனது வீட்டினருகே நின்றது. இப்பெருமழையில் எனது வீட்டுக்கு வரக் கூடிய யாருமில்லை என்பதனால், அது ஸ்டெல்லாவின் வீட்டுக்கு வந்திருக்கக் கூடும்.

“ஸந்தா தங்கச்சி...”

இவ்வளவு சத்தமாக என்னைக் கூப்பிடுவது மாகரட் அக்காதான். நான் வீட்டுக்குள்ளிருந்த தண்ணீரிலிறங்கிச் சென்று கதவைத் திறந்தேன். காத்திருந்தது போல மழையின் மீதிச் சாரலும் வாசலினூடாக வீட்டுக்குள் நுழைந்தது. மாகரட் அக்கா சேம்பிலை மடலொன்றைப் பிடித்தவாறு வாசலருகே நின்று கொண்டிருந்தாள். அப்பெருமழைக்குச் சேம்பிலை மடல் ஈடுகொடுக்கவில்லை. மோட்டார் சைக்கிள்காரர் மாகரட் அக்காவின் பின்னால் நின்று கொண்டிருந்தார்.

“இந்தத் தம்பி அறையொண்ணு வாடகைக்குத் தேடுறார் தங்கச்சி... நான் உன்னோட அறையைக் காண்பிக்கக் கூட்டிட்டு வந்தேன்.. நீ சொல்ற வாடகைக்குத் தங்கிப்பார்... இன்னிக்கே குடியிருக்கத் தயாராத்தான் வந்திருக்கார்.”

மோட்டார் சைக்கிள்காரரின் ஒரு

கையில் ஹெல்மட்டும், மறு கையில் சற்றுப் பெரிய பையொன்றும் இருந்தது. அவர் மழையில் நன்றாக நனைந்து போயிருந்தார். அவரிடம் ஒரு சேம்பிலை மடல் கூட இருக்கவில்லை. மாகரட் அக்காவென்றால், டேனியாவைப் போல கண்ட கண்ட அழுக்குகளைச் சுமந்து வருவதில்லை. ஹொரவபொத்தானை சகோதரியைக் கூட்டிக் கொண்டு வந்து விட்டதுவும் மாகரட் அக்காதான். அவள் போகும்போது கொழும்புச் சீமாட்டி போலப் போனாலும், வரும்போது கிராமத்தவள் போல வந்தவள்.
''ஐயா நனையுறீங்க.. வீட்டுக்குள்ளே வந்து கதைப்போம்''
அவர் நீளக் காற்சட்டையும், நீண்ட கைகளையுடைய சட்டையும், சப்பாத்துகளும் அணிந்திருந்ததனால் நான் அவரை 'ஐயா' என்று அழைத்தேன். அவரை வீட்டினுள்ளே அழைத்தபோதும், வெளியே விடவும் வீட்டினுள்ளே அதிகமாக நனைவதை அவர் கண்டுகொண்டார்.

''வாடகைக்குக் கொடுக்க இருக்குற அறைக்கு நாங்க நேராப் போவோம் தங்கச்சி'' வந்தவர் கூறினார். மாகரட் அக்கா முன்னே நடந்தாள். வாடகை அறை எனது வீட்டோடு ஒட்டிய பக்கத்து அறை.
''இந்த அறைக்கும் மழைத் தண்ணி வரும்போல இருக்குல்ல அக்கா?''
''ஐயோ இல்ல தம்பி.. அந்த வீட்டோட அளவுக்கு இல்ல..''

மாகரட் அக்கா கதவைத் தள்ளித் திறந்து உள்ளே சென்றாள். கதவின் கீழால் அறைக்குள்ளும் தண்ணீர் வந்திருந்தது.

''கொழும்புக்கு எந்நாளும் மழை பெய்யுறதில்லையே தம்பி. மழை பெய்ஞ்சால் இந்த வீடுகள்னு இல்ல.. மொத்தக் கொழும்புமே தண்ணில மூழ்கிடுதே..''

புதியவர் அறைக்குள்ளே சென்று பார்த்தார். இந்த அறையிலிருந்தது ஒரு கட்டில் மாத்திரமே. கணுக்கால் அளவல்ல.. கழுத்தளவு வெள்ளம் வந்தாலும் கூட அள்ளிச் செல்வதற்கு அவரிடம் எதுவுமே இருக்கவில்லை. அவர் கையிலிருந்த பையைக் கட்டில் மீது வைத்தார்.

''தம்பி, இன்னும் சாமான்கள் ஏதாவது இருந்தா எடுத்துட்டு வாங்க.. கதிரை ஏதாவது தேவைப்பட்டா இந்தத் தங்கச்சி தருவாள்.''
''இல்லக்கா.. இந்தக் கட்டில் மட்டும் எனக்குப் போதும்.''

ஹொரொவபொத்தானை சகோதரி என்றால் சமைப்பதற்குத் தேவையான பாத்திரங்களைக் கூட எங்கிருந்தோ கொண்டு வந்திருந்தாள். அவள் சென்றதுமே அவையும் அவளோடே காணாமல் போயின. எனது அறை வாடகையைப் பாக்கியின்றித் தந்த அந்த சகோதரி சென்றதைக் கூடப் பக்கத்து வீட்டிலிருந்த நான் காணவில்லை.

புதியவர் காற்சட்டையின் பின்புற பாக்கெட்டிலிருந்து பணப்பையை எடுத்து, ''அட்வான்ஸா எவ்வளவு வேணும் தங்கச்சி?'' என்று கேட்டார். அவருக்கு எனது அறை அந்தளவு பிடித்துப் போகக் காரணங்கள் ஏதுமில்லை. எனினும் நான் அதைக் குறித்து யோசிக்க வேண்டிய அவசியமில்லை. நாங்கள் கொடுக்கல் வாங்கல் விடயங்களைப் பேசித் தீர்மானித்துக் கொண்டோம். நான் மாகரட் அக்காவின் கையில் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து விட முயற்சித்தபோதும் அவள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்கு முன்பும் அவள் எனக்குச் செய்த உதவிகளுக்கு நான் இவ்வாறே பணத்தைக் கொடுத்து விட முயற்சித்த சந்தர்ப்பங்களிலும் அவள் ஒருபோதும் அவளது உதவிகளுக்கான பணத்தைப் பெற்றுக் கொள்ளவேயில்லை. சேரியில் யாராவது எனது வீட்டினருகே வந்து கத்தினாலும் கூட ஓடி வந்து என்னைப் பாதுகாப்பது மாகரட் அக்கா தான்.

மறுநாள் விடிகாலையிலேயே மோட்டார் சைக்கிள் உயிர் பெறும் ஓசையும், அது கடைச்சந்திக்குச் சென்று மறையும் ஓசையும் கேட்டது. அவர் அன்று நடுச்சாமம் வரைக்கும் வீட்டுக்கு திரும்பி வரவில்லை. வருவார். போவார். காலையில் போய் மாலையில் வருவார். மாலையில் போய் காலையில் வருவார். சில நாட்கள் போனதுமே திரும்பி வருவார். சில நாட்கள், பல தினங்கள் கழித்து வருவார். சில நாட்கள் எங்கும் போகாமல் அறைக்குள்ளேயே அடைபட்டுக் கிடப்பார்.

அன்றும் கூட அவர் எங்கேயும் போகவில்லை. எந்நாளுமே பழுதடைந்துபோகும் மோட்டார் சைக்கிள், அன்றும் பழுதடைந்து போயிருந்தது. அவர் நிலத்தில் அமர்ந்தவாறு அதனை முற்றத்தில் வைத்துக் குடைந்து கொண்டிருந்தார். அது எனக்கும் அவருக்குமிருந்த பொதுவான முற்றம். நான் அவரருகே சென்று குந்தி அமர்ந்தேன். அவர் செய்து கொண்டிருந்த வேலையை நிறுத்தாமலேயே என்னைப் பார்த்தார்.
''ஏன் உதவி செய்யப் போறீங்களா?''
அவர் கஞ்சத்தனமாக சிறிதாய்ப் புன்னகைத்து என்னிடம் அவ்வாறு கேட்டுவிட்டு வேலையை தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். மோட்டார் சைக்கிள் குறித்து நான் அறிந்த விடயங்கள் ஏதுமில்லை. அவர் அப்படிக் கேட்டது கூட கிண்டலாகத்தான். அவர் செய்துகொண்டிருப்பதைக் குறித்து எனக்கேதும்

தெரியாவிட்டாலும் கூட நான் அதையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் என்னென்னவோ செய்தார். அவரது விரல்களில் கன்னங்கறுப்பாக எண்ணெய்ப் பிசுக்கு படிந்திருந்தது. நான் அவரையும், அவரது பலமான விரல்களையும், எனக்குப் புரியாத அந்த வேலையையும் பார்த்துக் கொண்டேயிருந்தேன்.

முன்பு ஹொரவபொத்தானை சகோதரி காலையில் வேலைக்குப் போனால் இரவாகித்தான் அறைக்கு வருவாள். எனக்கு அவளது வெளிறிய முகத்தை நன்றாகப் பார்த்துக் கொள்ளக் கூட முடிந்ததில்லை. அறையிலேயே இருப்பதனால், இவரென்றால் பேச்சுத்துணைக்கு பொருத்தமான ஆள்தான். எனினும் இவர் குறைவாகத்தான் பேசுகிறார். சொற்பமாகத்தான் புன்னகைக்கிறார். கொஞ்சமாகத்தான் என்னைப் பார்க்கிறார். அவை எனக்குத் தேவையற்றவை. அவர் என்னைப் பார்க்காததற்கும் சேர்த்து நான் அவரைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

"நிஜமாவே ஐயாவோட பெயரென்ன?"
"ரகுநாதன். என்னை ஐயா, ஐயான்னு கூப்பிடாதீங்க தங்கச்சி."

ரகுநாதன் அண்ணா எப்போதாவதுதான் புன்னகைத்தார் என்றபோதும் அழகான புன்னகையாக அது இருந்தது. சேற்று நிறக் கண்களைக் கொண்டவர். அக் கண்கள் உள்ளடங்கிப் போயிருந்தன. எவருக்குமே அழகானவையெனத் தென்படாத அக்கண்கள் எனக்கு அழகாகத் தென்பட்டன. ஆளைத் துளைக்கும் பார்வை ரகுவிடமிருந்தது.

மோட்டார் சைக்கிளின் பாகங்களைக் கழற்றிக் கழற்றிப் பூட்டுகையில் இடைக்கிடையே ஓரிரு வசனங்களையும் உதிர்த்தார்.

"பொட்டொன்று வைத்திருந்தால் இன்னும் அழகாக இருப்பீங்க."

ரகு என்னைப் பார்த்துவிட்டுப் பிறகு தொலை விலெங்கோ பார்த்தவாறு கூறினார். வாழ்க்கையில் முதல் தடவையாக 'நான் எந்த இனத்தைச் சேர்ந்தவள்' என்பதை நான் நினைவுபடுத்திப் பார்த்தேன். சிங்களத்தி எனச் சொல்ல என்னிடம் இருப்பது எனது பெயரும், எனது மொழியும் மாத்திரம்தான். ஏனையவர்களிடம் இவற்றைத் தாண்டி வேறேதும் இருக்கிறதா என யோசித்துப் பார்த்தேன். அவர்களிடமும் இருப்பவை இவை மாத்திரம்தான் இல்லையா?

பார்வதி அக்காவிடமென்றால் உடல் முழுவதும் தமிழ் அடையாளங்கள் பூரித்திருக்கும் எப்போதும். ஸஃப்ரினா அக்காவிடமும் அவ்வாறுதான். தலையிலிருந்து பாதம்வரைக்கும் முழுமையாக மூடியிருந்த அவர், வெளியே தென்படுவதுவும் குறைவாகத்தான். எனக்கு எங்கிருந்து பொட்டு? எனக்கு எங்கிருந்து மருதாணி? எனக்கு எங்கிருந்து சேலையும், மாலையும்? எனக்கு எங்கிருந்து ஃபர்தா?

நான் எதற்குமே, யாருக்குமே உரிமையற்ற வேற்றாள் ஒருத்தியாக உணர்ந்தேன். எனது கண்களில் துளிர்த்த கண்ணீர்த் துளிகளை மறைத்துக் கொள்ள எவ்வளவுதான் முயற்சி செய்தபோதிலும், ரகு அண்ணனின் பார்வையிலிருந்து அவற்றால் தப்பிக்க முடியவில்லை. ரகு எனது கண்ணீரைப் படிக்க முயற்சித்தார். என்னைத் தேற்ற, சிரிக்க முயற்சித்தார். எனினும் ரகுவால் போலியாகச் சிரிக்க முடியாதென்பது அன்று எனக்குப் புரிந்தது. ரகு விரல்களிலிருந்த எண்ணெய்ப் பிசுக்கால் எனது நெற்றியில் பொட்டொன்று வைத்தார். அப்போது ரகு புன்னகைத்ததில் உண்மை இருந்தது.

சந்தியிலிருந்த கடையில் தான் ரகு சாப்பிட்டார். நான் சமைக்கும் சாப்பாட்டிலிருந்து ஒரு பாகத்தை ரகு அண்ணனுக்குக் கொடுக்க நான் எவ்வளவுதான் முயற்சித்த போதிலும், எனக்குச் சுமையாக ஆக ரகு அண்ணன் துளியேனும் விரும்பவில்லை. சில நாட்கள் இரவில் அவர் வரும்போது சந்திக் கடையிலிருந்து கொத்து பரோட்டாவொன்றை வாங்கிக் கொண்டு வருவார். அவ்வாறு கொண்டு வரும் கொத்து பரோட்டாவிலிருந்து பாதியை எனக்குத் தருவார். சாப்பிடச் சொன்னாரே தவிர ஒருபோதும் ஊட்டி விட முயற்சிக்கவில்லை. நான் சாப்பிடும்வரைக்கும் ரகு மெதுமெதுவாகச் சாப்பாட்டை அளைந்து கொண்டிருந்தாரே தவிர அவர் சாப்பிடவில்லை. நான் வயிறு நிறையச் சாப்பிடும் வரை அவர் சாப்பிடாதிருந்திருக்கக் கூடும்.

எனக்கு ரகு அண்ணனிடமிருந்து மாத வாடகைப் பணத்தைப் பெற்றுக் கொள்ள மனம் இடங்கொடுக்கவில்லை. எனினும், அவ்வாறு பெற்றுக் கொள்ளாது, என்னால் எனது ஜீவிதத்தைக் கொண்டு செல்வது சாத்தியமாகாது என்ற இயலாமையினால் அதைப் பெற்றுக் கொண்டேன். நான் பணம் வேண்டாம் எனக் கூறிய ஒரு மாதம், ரகு எனக்கு சின்னச் சின்னப் பூக்கள் நிறைந்த சேலையொன்றையும், நிறைய வளையல்களையும் கொண்டு வந்து கொடுத்தார். அதுவரையில் நான் வாழ்க்கையில் ஒருபோதும் சேலை அணிந்திருக்கவில்லை.

"எனக்குச் சேலை கட்டத் தெரியாது அண்ணா"

அணிந்திருந்த பாவாடைக்கும் சட்டைக்கும் மேலாக ரகு அண்ணன் எனக்கு சேலை அணிவித்து விட்டார். கைகள் மூடுமளவிற்கு இரண்டு கைகளிலும் வளையல்களை மாட்டிவிட்டார்.

"பொட்டொண்ணு?" எனக் கேட்டேன்.

"தேவையில்ல.. இப்பவே அழகுதான்."

என்னதான் ரகு என்னை அழகி, அழகி எனக் கூறியபோதும் நான் அந்தளவு அழகல்ல என்பது எனக்குத் தெரியும். எனினும் ரகு வெறுமனே முகத்தாட்சண்யத்திற்கு அவ்வாறு கூறவில்லை என்பதுவும் எனக்குத் தெரியும். ரகுவுக்கு நான் அழகாகத் தெரிந்திருக்கக் கூடும். வெயிலில் வதங்கி, மழையில் கரைந்த நான் அழகி என்பதாக, அமர உயிரோடிருந்த காலத்தில் கூட என்னிடம் கூறியதில்லை.

எனது அறையின் பலகைகளிடையேயிருந்து, ரகுவின் அறை எனக்குத் தென்படும். பலகை இடைவெளிகளினூடே ரகுவைப் பார்த்திருப்பது போல ப்ரியமானதொன்று எனக்கு வேறேதுமில்லை. எனினும் ரகு ஒருபோதும் பலகை இடைவெளிகளினூடாக என்னை உற்று நோக்கவில்லை என்பதை நான் நன்றாக அறிவேன். எப்போதும் மொத்த உலகத்தின் பாரத்தையும் தனது தலையில் ஏற்றி வைத்ததைப் போலிருக்கும் ரகு, நிம்மதியான நீடித்த உறக்கத்தில் ஆழ்ந்திருப்பது போல தூங்கிக் கொண்டிருப்பார்.

ரகு அறியாது பலகை இடைவெளியினூடே வேண்டிய மட்டும் அவரையே பார்த்துக் கொண்டிருப்பது போன்ற உவகையை எனக்கு வேறெதுவும் தரவில்லை. பிறந்ததிலிருந்தே நான் ஓடிய ஓட்டத்தை நிறுத்தி இளைப்பாறுவதைப் போல அப்போது நான் உணர்வேன். ரகு விழித்திருந்த அநேகமான நேரங்களிலெல்லாம் அறைக்குள்ளே வயர் குவியலையும், தகட்டுத்துண்டுகளையும் வைத்துக் கொண்டு பாடுபட்டுக் கொண்டிருப்பார்.

திடீரென ஒரு நாள் சேரிக்கு போலிஸ் வந்தது. எனது அறைக்குப் பக்கத்து அறையைப் புரட்டிப் போட்டது. அதிகாரிகள் ரகுவின் அறையில் நுழையும்போது அவர் தூங்கிக் கொண்டிருந்தார். அவரைப் பிடித்து ஜீப் வண்டியிலேற்றினர். ரகுவினது மோட்டார் சைக்கிளையும், அறையிலிருந்த வயர் குவியலையும், தகட்டுத் துண்டுகளையும் கூட ஜீப்பில் குவித்தனர். அனைத்தும் நடைபெறும்போது ரகு என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். எப்போதாவது நிகழக்கூடும் என எதிர்பார்த்திருந்ததைப் போல, மிகவும் அமைதியாக அனைத்துக்கும் முகம்கொடுத்த ரகு, அவருக்கென இருந்த ஒரே சொத்தும் பறி போய்க் கொண்டிருப்பதைப் போல என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்.

ரகு என்னையே பார்த்துக் கொண்டிருந்தாரே தவிர சயனைட்டைக் கடிக்கவில்லை. ரகுவை என்னிடம் விட்டுச் செல்லும்படி எவ்வளவுதான் நான் அழுது கதறியபோதும் அதிகாரிகளால் அதைச் செய்ய இயலவில்லை. போலிஸ் அதிகாரிகள் ரகுவைக் கொண்டு சென்றார்கள். மொத்தச் சேரி மக்களும் சூழ்ந்து நின்று அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கையில் நான் மாத்திரம் அழுது கதறியவாறு ஜீப் வண்டியின் பின்னாலேயே ஓடினேன். வழமையாக எனது உதவிக்கு ஓடி வரும் மாகரட் அக்கா கூட அன்று எனக்காக ஒரு அடி முன்னே வைக்கத் துணியவில்லை.

அதுவரை அந்தளவு என்னைப் பார்த்திருக்காத ரகு, அன்று காணாமல் போகும்வரைக்கும் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். எனது கதறல் ஓசை கேட்கும் எல்லை வரைக்கும், ரகு அந்தக் கதறலைச் சிரமப்பட்டேனும் கேட்டுக் கொண்டிருந்திருக்கக் கூடும். ரகு ஒருபோதும் திரும்பி வரவில்லை.

அன்றொரு நாள், நான் பிரசவிக்கவிருக்கும் குழந்தையின் தந்தையான எனது கணவன், தோடம்பழப் பெட்டியைத் தலையில் சுமந்தவாறு அன்றைய வருமானத்துக்காக அலைந்து கொண்டிருக்கையில், புறக்கோட்டைக் குண்டுவெடிப்பில் அகப்பட்டுச் செத்துப் போன நாளில் துயருற்றிருந்ததையொத்த கவலை தோன்றியது எனக்கு, ரகு இறுதியாக என்னையே பார்த்துக் கொண்டிருந்தபோது.

•

தக்ஷிலா ஸ்வர்ணமாலி



சமூகம் சார்ந்த விடயங்களை மிகுந்த அவதானிப்புடன் எழுதி வரும் எழுத்தாளரும், கவிஞருமான இவர் பாடசாலையொன்றில் ஒரு பட்டதாரி ஆசிரியையாகக் கடமையாற்றி வருகிறார். மூன்று கவிதைத் தொகுப்புகள், இரண்டு சிறுகதைத் தொகுப்புகள், இரண்டு சிறுவர் இலக்கியப் பிரதிகள், மூன்று சமூகவியல் கட்டுரைத் தொகுப்புகள், ஒரு நாவல் என இதுவரையில் பல தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார்.

இமாம் அத்னான் கவிதைகள்

01)

முளைத்தால் மறுபடியும் கேட்போம்
ஒரே முனையிலிருந்து.

பறவையின் சிறகசைவு தட்டிவிட்ட விதை
பாடல் ஒன்றிற்குள் விழுந்து மிதந்து செல்கிறது.
அப்பாடலின் ஒரு முனையிலிருந்து நானும்
மறு முனையிலிருந்து அவளும் கேட்கத் துவங்குகிறோம்
இருவரும் சந்திக்கும் ஒற்றை ஒலியில்
விதை முளை விட்டுத் துளிர்க்கலாம் காதலாக.

02)

வெயிலை அருந்தும் தரையின் குளிரை
காய்ந்து தான் பார்க்கவேண்டும் புற்களாய் வேரூன்றி.

அவர்களின் படுக்கை அறைக்குள்
சுவரில் ஆவேசமாக மோதித் துடித்து வீழும் சொற்களை
சோதிக்காமல் இழுத்துச் செல்கின்றன எறும்புகள்.
தின்னும் எறும்புகள் என்னவாகும்?
அறிய எந்த வாய்ப்பும் கிடையாது
எறும்பொன்றாய் மாறித் தின்று பார்ப்பதைத் தவிர.

03)

கடல்களால் ஆறாக நடிக்க முடிவதில்லை

அவர்கள் பயிற்சி செய்து பழகியிருக்கும் ஒரேயொரு நீச்சல் முறையைக் கொண்டே
நூறாண்டுகளாய் நீந்திக் கடந்து கொண்டிருக்கின்றனர்.
நேற்று அவர்களிடம் 'கடல்' என்ற சொல் அகப்பட்டது
துள்ளிக் குதித்து நீந்தத் தொடங்கினர்
அலைகளை எதிர்கொள்ளத் தெரியாமல் ஒருவாறு கரை ஒதுங்கி
அறிக்கை விட்டனர்
'ஒரு ஆற்றின் எந்த அம்சங்களையும் கொண்டிராத அர்த்தமற்ற பிதற்றல்களே கடல்'

ஓ தாவீது ராஜாவே

சாதனா

முதலில், அது மீன்தானா... என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த இரவு நேரத்தில் சுறாக்களும் அலைந்துகொண்டிருக்கும். முன்னொரு தடவையும் இப்படித்தான் நிகழ்ந்தது. மீனென்று நினைத்து வலையை ஒரு திட்டமிடலின்றி இழுத்திருக்கின்றார். சுறா இவரைநோக்கிப் பாய்வதற்குச் சரியாக இரண்டு வினாடிகளுக்கு முன்புதான் வரவிருக்கும் ஆபத்து பற்றிச் சிந்தித்தார். தன்னை நோக்கிப் பாய்ந்து வந்த சுறாவின் முகத்தை இரண்டு கைகளினாலும் தள்ளிவிட்டு குபீரென்று அப்பாற் பாய்ந்தார். அந்தச் சின்னப் படகின் பின்பக்கத்தில் விழுந்த சுறா, ஒரு விவரிக்க முடியாத மூர்க்கத் தனத்தோடு எம்பியெம்பிக் குதித்துக் கொண்டிருந்தது. முதலில் அச்சமடைந்த தாவீது பிற்பாடு ஒரு நிலைக்கு வந்தார். பலத்தில் தன்னைவிட, சுறாவே பெரியது என்று தெரிந்திருந்தும் அவர் பயப்படவில்லை. சண்டைபோடும் தோரணையோடு கைகள் இரண்டையும் முன்னுக்கு நீட்டிக்கொண்டு திமிறிக்கொண்டிருக்கும் சுறாவையே பார்த்துக் கொண்டிருந்தார். சுறாவின் துடிப்பில் படகு கவிழ்ந்து விடுமோ என்று நினைத்தார்.

இருபத்திரண்டு வினாடிகளிருக்கும். முழு வீச்சோடு எம்பிக் குதித்த சுறா நேராகக் கடலுக்குள் போய் விழுந்தது. படகுக்கு அடியில் சென்று படகினை ஓர் உலுப்பு உலுப்பியது. தடுமாறிக் கீழே விழுந்ததில் தலையில் படகின் விளிம்பு தாக்கி மயக்கமானார் தாவீது. விழிப்பு வந்தபோது வானத்தில் பறந்து கொண்டிருந்த கிட்டிவேக்ஸ் பறவையொன்று அரை மயக்கத்திலிருந்த தாவீதுவின் கண்களுக்கு ஒரு நிழலைப் போலத் தெரிந்தது. மீன் பிடித்துக் கொண்டிருந்த தன்னுடைய படகுக்குள் சுறா வந்ததும், தன்னைத் தாக்கியதும், படகினில் கிடந்து துடித்ததும், தான் சரிந்து விழுந்ததும் அறுந்த கனவுகள் மீண்டும் ஒன்று சேர்ந்து வருவதைப் போல், ஒவ்வொன்றாய் நினைவுக்கு வர, பெருமூச்சொன்றை இழுத்துவிட்ட தாவீது மெதுவாக எழும்பிப் படகின் திட்டில் உட்கார்ந்தார். தலையின் பின்பக்கமாய் வலிப்பது போலத் தோன்றவே கைகளால் தேய்த்துக் கொண்டார்.

ஸ்கண்டிநேவியாவின் மேற்குப்பக்கமாயிருக்கும் புற நகரான ஃஅத்தியூஸை சுற்றியே இந்தக் கடலிருக்கின்றது. பெரும் இரைச்சலோடு விழுங்க வரும் பூதமொன்றின் உருவத்தைப் போன்று எப்போதும் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கும் இக்கடலை நம்பித்தான் மொத்த நகரவாசிகளுமே இருக்கின்றார்கள். மீனவர்களான இவர்களுக்கு ஃஅத்தியூஸை அண்டியிருக்கும் சிற்றூர்வாசிகளே வியாபாரிகள். செங்கற்களினால் கட்டப்பட்டு, விரல் விட்டு எண்ணப்படக்கூடிய குடியிருப்புகளைக் கொண்ட நகரம்தான் ஃஅத்தியூஸ். அதில் தாவீதுவின் குடியிருப்பே மிகச்சிறியது. சரியாக இரண்டு கட்டில்களைச் சேர்த்தாற்போல் அளவுகொண்ட ஒரு விறாந்தையும் கல்லறை போன்று புகைபிடித்து மங்கிப் போன குசினியும் அவர் வீடாயிருந்தது. மனைவி இறந்த பின் இருபதாண்டுகளாகத் தனிமையிலேயே வாழ்ந்து வரும் அவருக்குச் சொத்தென்று இருப்பது இந்த வீடும் அந்தப் படகும் தான்.

கடுமையான மஞ்சள் நிற சூரியக் கதிர்கள் தாவீதின்

தேகத்தில் பட்டபோது, அவரின் தேகமானது மினுமினுத்தது. தளர்ந்து போன உடலும், இறுகிய கைகளும் அவருடையதாயிருந்தன. பழுப்பேறியதும், அழுக்கடைந்ததுமான தொப்பியொன்றினை அவர் அணிந்திருந்தார். நீல நிற மேற்சட்டையும், வெள்ளை நிறத்திலான கால்சராயும் அவருக்குத் தோதாகவேயிருந்தன.

தாவீது வலையைக் கடலில் வீசியபோது அதுவொரு அழகான குடைபோன்று விரிந்து, பின் கடலில் படர்ந்தது. எப்போதும் கடலின் கிழக்குப் பக்கமாயிருக்கும் இந்த இடம்தான் தாவீதின் மீன் பிடிக்கும் இடமாயிருந்து வருகின்றது. அவருடைய தந்தையான மோசேயும் கூட இந்த இடத்திலேயே மீன் பிடிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தேவதைகள் குடியிருக்கும் சொர்க்கமென்றும், இந்த இடத்திலேயே ஒரு காலத்தில் மீன்களுக்கு ராஜாவான சாலமோன் வாழ்ந்து வந்தாரென்றும் ஏராளமான கதைகள் இந்தக் கடல் குறித்து நிலவி வந்தன.

தாவீது மீன் பிடிக்க வரும்போதெல்லாம் வலையைக் கடலில் வீசிவிட்டு மிக நீண்ட நேரம் படகிலேயே அமர்ந்திருப்பார். முன்பு போல் அவ்வளவு சீக்கிரத்தில் மீன் கிடைப்பதில்லை. மீன்களின் எண்ணிக்கை குறைந்திருக்க வேண்டும், அல்லது எல்லா மீன்களும் சொல்லி வைத்தாற்போல் இடமாறியிருக்க வேண்டும். சிறிய மீனொன்று சிக்குவதற்கே குறைந்தது இரண்டு மணித்தியாலங்களாவது தேவைப்படுகின்றது. அப்போதெல்லாம் தாவீது தன் தந்தையைப் பற்றியோ அல்லது மனைவியைப் பற்றியோ யோசித்துப் பார்ப்பார்.

2.

அவருக்கு பத்து வயதாகவிருந்த போது, ஒருநாள் மோசேயு அவரைக் கடலுக்கு அழைத்துச் சென்றார். இப்போதிருப்பது போல் இல்லாமல் அப்போது மோசேயிடம் ஒரு பெரிய படகிருந்தது. தினந்தோறும் மீன்களை அள்ளிவிடும் மோசேயு, இந்தப் படகினைத் தேவனே தனக்கு அன்பளிப்பாகக் கொடுத்தாரெனவும் மிகவும் அதிர்ஷ்டமான படகெனவும் சொல்லிக்கொள்வார்.

நடுக்கடலுக்கு வந்துவிட்டிருந்தார்கள். மோசேயு இதுதான் சரியான இடமெனத் தனக்குள் சொல்லிக்கொண்டார். படகின் கொடியை இறக்கிக் கட்டினார். நங்கூரத்தைப் போட்டார். படகிலிருந்து எட்டிப்பார்த்துக் கண்களால் கடலைத் துழாவினார். மீன்கள் சலசலத்து ஓடுவதைக் கண்ட அவர், திருப்தியடைந்தவராக... வலையையெடுத்துக் கடலுக்குள் தூவினார். அவர்களின் படகைக் கடலானது நவட்டி... நவட்டி எடுத்துக் கொண்டிருந்தது.



தாவீதிற்குக் காற்றில் கலந்திருந்த உப்பின் மணமும், அவ்வப்பொழுது தன்மீது தெறித்தது போல் வந்து விழும் கடலின் குளிர்ந்த நீரும் நிரம்பவே பிடித்திருந்தது. கூட்டமாகப் பறக்கும் கிட்டிவேக்ஸ் பறவைகளைக் கண்டு ஆச்சரியப்பட்டான். கடலின் அசைப்பில் அசைந்துகொண்டிருந்த படகுடன் சேர்ந்து தானும் அசைவது போல் அசைந்து கொடுத்தான். அப்பா இவனைப்பார்த்துச் சிரித்தது தாவீதிற்குக் கொஞ்சம் வெட்கமாயுமிருந்தது. விளையாடுவதை விட்டுவிட்டு அப்பாவிற்குப் பக்கத்தில் போய் அமர்ந்து கொண்டான்.

மோசேயுவிடம் இரண்டேயிரண்டு வலைகள் மாத்திரமேயிருந்தன. ஒன்று செவுள் வலை, மற்றது சுருக்கு வலை. இப்போது கடலுக்குள்ளிருப்பது செவுள் வலை. அதற்கு ஒரு காரணமுமிருந்தது, பொதுவாகக்

கடலின் இந்தப்பகுதியில் அளவில் பெரிய மீன்களே ஓடித்திரியும். செவுள் வலையைக் கடலின் அடிமட்டத்திலேயோ அல்லது மத்தியிலேயோ விரித்து விடுவார்கள். அளவில் சிறிய மீன்கள், பெருத்த இடைவெளிகள் கொண்ட செவுள் வலைக்குள் மாட்டிக்கொண்டால் இலகுவாகத் தப்ப முடியும். ஆனால் அளவில் பெரிய மீன்கள் அப்படியல்ல. சிக்கினால் சிக்கினதுதான். தப்பவே முடியாது.

தான் படகினை நிறுத்தியிருப்பது பெரிய மீன்கள் ஓடித்திரியும் கடலின் கிழக்குப்பகுதியென்பது மோசேயுக்குத் தெரிந்தேயிருந்தது. இந்த முறையும் மீன்களை அள்ளிவிடலாமென்று அவர் நினைத்தார். அவரிடமிருந்த மற்றுமொரு வலையான சுருக்கு வலை ஒரு இடத்தில் முடிச்சு அவிழ்ந்து போயிருந்தது. அதை மறுபடியும் சரிசெய்ய வேண்டும். கடைசியாக அந்தச் சுருக்கு வலையைப் பாவித்து, சிறிய மீன்களைப் பிடித்ததும், வலையைக் கடலுக்குள் இழுத்தபோது சிக்கியிருந்த மீன்கள் சடசடத்து வலையிலிருந்து தப்பிக் குதிக்கப் பார்த்ததும் நினைவுக்கு வந்தது. முடிச்சு அவிழ்ந்து போயிருந்ததை அப்போதே மோசேயு கவனித்துத்தானிருந்தார். நினைவு வரும் போது முடிச்சை இறுக்கிக் கட்ட வேண்டுமென்றும் அல்லது அதைவிடச் சிறப்பான புதிய வலையொன்றை வாங்கிவிட வேண்டுமென்றும் நினைத்திருந்தார். ஆனால் அடுத்த நொடியே புதிய வலை வாங்குவதாயிருந்தால் பணத்திற்கு எங்கே போவதென்றும், இப்பேர்ப்பட்ட ஒரு கொடிய வறுமையில், தான் வாழ்ந்துகொண்டிருக்கும் போது புதிய வலை வாங்கிவிடவேண்டுமென்று நினைத்தது குறித்தும் நினைத்துத் தன்னைத் தானே நொந்து கொள்வார்.

மோசேயுவின் கைகள் வலையைப் பக்குவமாக ஆராய்ந்து கொண்டிருந்தன. அநேகமாக வலையிலிருந்த எல்லா முடிச்சுகளிலும் மஞ்சள் நிறத்தில் திட்டுகளிருந்தன. வலையில் சில இடங்களில் நைலான் நார்கள் நொய்ந்து போயிருந்தன. மோசேயு அவற்றைப் படகினுள் படர்த்தி, கைகளால் மேவினார். தாவீதுவுக்கு மரத்துப் போயிருந்த அப்பாவின் கைகளைத் தொட்டுப் பார்த்து ஸ்பரிசிக்க வேண்டும்போல் தோன்றியது. வலை பழுதடைந்திருப்பது தாவீதிற்கும் தெரிந்திருந்தது. மேவிக்கொண்டிருக்கும் மோசேயுவைப் பார்த்து, ‘நாங்களேன் புதிய வலையொன்றை வாங்கக்கூடாது?’ என்றான்.

மேவிக்கொண்டிருந்த மோசேயு நிறுத்திவிட்டு, இரண்டு கைகளாலும் வலையைத் தூக்கிப் பார்த்தார். இருக்கும் சுருக்குகளில் அவிழ்ந்து போயிருக்கும் சுருக்கு எதுவென ஆராய்ந்தார். வலையின் மய்யப்பகுதியில் சுருக்குத் தளர்ந்துபோயிருப்பதைக் கண்டுபிடித்தார். பின்பு இப்படிச் சொன்னார்.

‘ வாங்கலாம் தான் என் தாவீது ராஜாவே, ஆனால் தற்போது என்னிடம் அதற்கான பணமில்லையே, என்ன செய்வது? கருணை கொண்ட தேவன் எங்களிருவர் மீது மாத்திரம் கருணை கொள்கிறாரில்லையே’

தாவீது ராஜா.... மோசேயு தன் மகனை எப்போதுமே இப்படித்தான் அழைப்பார். அப்பா தன்னை ‘அப்படி’ அழைப்பது தாவீதுவுக்கும் பிடித்தேயிருந்தது. அவன் அப்பாவைப் பார்த்து எதற்காக எனக்கு தாவீது எனப் பெயர் வைத்தீர்களெனக் கேட்டபோது, உன்னுடைய கண்களும் தாவீதினுடைய கண்களைப் போன்றே பிரகாசமானவையாக இருக்கின்றன, அதனாலேயே தாவீது எனப் பெயர் வைத்தேன் என்றார்.

தன்னுடைய கண்கள் பிரகாசமானவையென மோசேயு கூறிய போது தாவீது பரவசமடைந்தான். அப்பாவைப் பார்த்து ஒரு சிறு புன்னகையை உதிர்த்து விட்ட அவன், தாவீது என்பவர் யாரெனத் தான் அறிந்து கொள்ளலாமா எனக் கேட்டான்.

<< நிச்சயமாக நீ அறிந்து கொள்ளலாம்

கரிய நிறக் கொழுத்த பாம்பொன்று, ஆக்ரோஷமாகத் தன் வாயைப் பிளந்து அவரை விழுங்க முயன்றபோது “ஓ” வென்று அலறியபடியே வீட்டைவிட்டு வெளியே ஓடினார் தாவீது. இருட்டில் அவருக்கு எதுவுமே தெரியவில்லை. தூரத்தில் கடல் அலைகள் நுரைத்துப் பொங்குவது மாத்திரமே தெரிந்தது. பாம்புகளிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள கடலானது தனக்கு உதவுமென அவர் நினைத்தார்.

என் தாவீது ராஜாவே >> என்ற மோசேயு பின்வருமாறு ஒரு கதையைச் சொல்லத் தொடங்கினார்.

மேய்ப்பனான தாவீது கடவுள் மீது அதீதமான நம்பிக்கை கொண்டவன். ஒருநாள் கோலியாத் என்பவனை கல்லால் அடித்துக் கொலை செய்கின்றான். இந்த விஷயம் அரசன் சவுலுக்குத் தெரியவர, தாவீதை அழைத்து, அவனை மகிழ்வித்து, தன்னுடைய படைத் தலைவனாக்குகின்றான். அதற்கு முன்பு உனக்கு இப்போது ஏதும் தேவையோ என சவுல் கேட்க, தாவீது எனக்கு மிகுந்த பசியாய் இருக்கின்றது என்றும் புசிப்பதற்கு ஏதும் இருக்கின்றதாவெனவும் கேட்கிறான்.

அடுத்த நிமிடம், தாவீதிற்குச் சவுலின் அரண்மனைப் பெண்கள் உணவு பரிமாறுகின்றார்கள். உயர்ந்த திராட்சை ரசமும் வறுத்த வான் கோழியும் தாவீதுவின் முன்னால் வைக்கப்படுகின்றன. இன்னும் எத்தனை எத்தனையோ உணவு வகைகள். மலைத்துப் போகும் தாவீது அவையனைத்தையும் ஆசை தீரப் புசித்தான். இரவில் படுப்பதற்குப் பஞ்சு மெத்தையும், பட்டுக் கம்பளியும். பூரித்துப் போகும் தாவீது சந்தோசமாக நித்திரை கொள்கின்றான்.

பல போர்களில் வெற்றியீட்டும் தாவீது, தேவனின் கட்டளைப்படி சவுலினைக் கொன்று அந்த நகரத்திற்கே ராஜாவாகின்றான். ராஜாவான அன்றைய தினத்தில்க் கூட அவன் பலவகையான உணவுகளைச் சாப்பிட்டுக் கொண்டேயிருந்தான்.

காற்றின் வேகம் சற்றுப் பலமாக இருந்தபோதே நினைத்திருக்க வேண்டும். இப்போது தலைக்கு மேல் தண்ணீர் வந்துவிட்டது. மோசேயு நங்கூரத்தைப் படகினுள்ளே தூக்கிவிடப் பார்த்தார். நங்கூரம் கடலுக்குள்ளேயே கிடக்குமானால் படகானது காற்றின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் சரிந்துவிடும். கடல் அவர்களின் படகை விழுங்குமாற் போல் உள்ளிழுத்துப் பின் அப்படியே உந்தி வீசியது. தாவீது பறந்து வீழ்ந்தான். பெரல், மற்றும் கயிற்றோடு சேர்த்து அவனும் சறுக்கிப் போய், படகின் விளிம்பில் மோதினான். பளிச்சிடும் மின்னலைக் கண்டும், பெருங்குரலெடுத்து அலறும் பூதத்திற்கு ஒப்பான இடியோசையைக் கேட்டும் மிகப் பயந்தான். தந்தையைப் பார்த்தபோது அவர் நங்கூரத்தோடு பிரயத்தனப்படுவது தெரிந்தது. வாழ்க்கை இவ்வளவுதானா, நாம் மூழ்கிவிடப் போகின்றோமா, படகு உடைந்துவிடுமோ என்றெல்லாம் கற்பனை செய்தான். ஓடிப்போய் மோசேயுவைப் பின் பக்கமாக அணைத்துக் கொண்டவன் இப்படிச் சொன்னான்.
<< அச்சமாயிருக்கின்றது தந்தையே, இந்தப் பூதமானது எங்களை நிஜமாகவே விழுங்கிவிடுமா? >>
ஒருவாறாக. நங்கூரத்தை மேலே எடுத்துக் கொண்ட மோசேயு குனிந்து முழங்கால்களால் அமர்ந்து கொண்டார். தாவீதுவைக் கட்டியணைத்த அவர் அவனின் தலைமுடியைக் கோதிவிட்டபடி,
>> பயப்படாதே என் தாவீது ராஜாவே, தேவன் ஒரு நாளும் எம்மைக் கைவிட மாட்டான். << என்றார்.
அப்போது எங்கிருந்தோ வந்த இராட்சச அலையொன்று இவர்களின் படகுக்கு மேலால் தன்னுடைய பிரமாண்டமான கரங்களால் உள்ளிழுத்துக் கொள்ளுவது போல் வந்து, பின் அடங்கியது. மோசேயுவும் தாவீதுவும் நனைந்து போனார்கள். காற்றின் ஆக்ரோஷமான படபடப்பில் கொடிமரம், முறிந்து விழுவதைப் போன்று ஆடியது. இத்தனையாண்டுகளாகக் கடலென்றால் மிகவும் அமைதியானவொன்று, ஒரு தாயைப் போன்றோ அல்லது தந்தையைப் போன்றோ எங்களை அரவணைக்கக் கூடியது என்று நினைத்திருந்தவனுக்குக் கடலின் இத்தனை மூர்க்கத்தனங்களையும் பார்த்தபோது வேதனையும் அதே நேரம் கோபமும் உண்டாயிற்று.

ஒருவாறாகக் கடல் தனது உக்கிரத்தை அடக்கிக் கொண்டபோது, இரவாகியிருந்தது. தாவீதிற்கு ஒரு கொடும் கனவிலிருந்து மீண்டதைப் போலிருந்தது. இனிமேல் என்னைக் கடலுக்கு அழைத்து வராதீர்கள் அப்பா என்றான். மோசேயு அவனை அழைத்து முட்டாள்களையும், குழந்தைகளையும் தேவன் காப்பாற்றுவார். நீ குழந்தை, நான் முட்டாள் ஆகவே எதற்கும் பயப்படாதே என்றார்.

இராப்போசனத்தின் போது, மோசேயு தாவீதிற்கு ஒரு காகிதக் கிரீடத்தைப் பரிசாகக் கொடுத்தார். இது தாவீது ராஜாவினுடைய கிரீடம், இனி நீ ஒவ்வொரு இராப்போசனத்தின் போதும் இதை அணிந்து கொள்ள வேண்டுமென்றார். தாவீது அதைத் தலையில் அணிந்து கொண்டு தந்தையைப் பார்த்துச் சிரித்தான். மோசேயு அவனுடைய நாடியினைத் தடவி அச்சு அசலாகத் தாவீது ராஜாவைப் போலவேயிருக்கின்றாய் என்றார்.

தாவீதிற்குப் பசிப்பது போல் தோன்றவே, படகின் மூலையிலிருந்த உணவுப் பொட்டலத்தைக் கையிலெடுத்தார். இரண்டு மீன் துண்டுகளிருந்தன. அவற்றை மூக்கின் அருகில் பிடித்து முகர்ந்து பார்த்தவர், மீன் இன்னும் கெட்டுப்போகவில்லை என்பதையறிந்து சிறிது மகிழ்ச்சியடைந்தார். கையின் முதல் இரண்டு விரல்களினால் இரண்டாகவிருந்த மீன் துண்டுகளில் ஒன்றை எடுத்து மீனின் தலைப்பகுதியை வாய்க்குள் அதக்கினார். நிரம்பவே முட்கள் கொண்ட சிறிய வகை ‘அக்கிரோப்செட்டைடீ’ மீனது. சற்றே கவனம்

பிசகினாலும் தொண்டையில் சிக்கிவிடக்கூடிய அபாயமிருக்கின்றது. தாவீது மீனின் தலையை மெதுவாகக் கடித்துக்கொண்டே முண்டமாயிருந்த மீனின் உடலிலிருந்து அதன் சதையைத் தனியாகப் பிய்த்தெடுத்தார். கடல் நீரில் தன் கைகளை அளைந்து கொண்ட அவர், கையிலிருந்து வழிந்தோடிய நீரை மீனிறைச்சியில் தெளித்தார். பின்பு அவற்றை ஒவ்வொன்றாக எடுத்து மென்று விழுங்கினார். எலுமிச்சைச் சாறுமிருந்திருந்தால் மீனின் சுவை இன்னும் நன்றாக இருந்திருக்குமென நினைத்தார்.

தாகமெடுக்குமாற் போல் படவே தண்ணீர் நிரப்பப்பட்டிருந்த குடுவையின் மூடியை கைகளினால் இறுக்கித் திறந்தார். ஆனால் அதை அவரால் முன்பு போல் அவ்வளவு இலகுவில் செய்ய முடியவில்லை. பலமாக மூச்சு வாங்கியது. திறக்கும் போது பற்களை ஒன்றோடொன்று கடிக்க வேண்டியிருந்தது. அப்படியான நேரங்களில் காலம்தான் எத்தனை விசித்திரமானது, அப்போதெல்லாம் ஒரு முழு மரத்தையே ஒரே வீச்சில் தறித்து விடக் கூடிய பலம் எனக்கிருந்தது. ஆனால் இப்போது ஒரு குடுவையைக் கூட என்னால் திறக்க முடியவில்லை.முழுப் பலத்துடன் பிறந்து அதே பலத்துடன் ஏன் சாக முடிவதில்லை? தேவனின் படைப்பில் முழுமையில்லை. ஆம், தேவனின் படைப்பில் எதுவுமே முழுமையில்லை என்றவாறாக நினைத்துக் கொள்வார். பின் சை.... என்னவொரு அபத்தமான நினைப்பு. காலமென்றொன்றிருந்தால் அது போகத்தான் செய்யும், அதோடு கூடவே வயதும் ஏறும். இதில் தேவனின் பிழை என்னயிருக்கின்றது என்றும் முணுமுணுத்துக் கொள்வார். 2:1

எத்தனை மணிநேரங்கள் இப்படியே உட்கார்ந்திருப்பாரெனத் தாவீதிவிற்குக் கூடத் தெரியவில்லை. வானத்தில், வெள்ளி தெரிகிறதாவெனப் பார்த்தார். பொதுவாக வெள்ளி விடிகாலையில் தான் தெரியும். இப்போதென்ன காலையா? மதியம் தாண்டி, மாலையும் ஆயிற்றே. தாவீது விரல்களினால் கணக்குப் போட்டுப் பார்த்தார். மட்டுமட்டாக ஒன்பது இருக்கலாம். தாவீது தனக்குள்ளே சொல்லிக் கொண்டார். வலை அசையுமாப் போலத் தெரியவே உரமேறிய கைகளினால் அதன் கயிற்றை இழுக்கத் தொடங்கினார். படகுக்குள் முழு வலையினையும் இழுத்துப் போட்டு ஏதாவது சிக்கியிருக்கின்றதாவெனப் பார்த்தார். ஒரேயொரு மீன். நல்ல கொழுத்த சிவலை. வலையிலிருந்து மீனை இலாவகமாகப் பிரித்தெடுத்தவர் அதனை மடித்துப் படகின் ஓரமாக வைத்தார். கையிலிருந்த மீனைக் கவனித்தவருக்கு அது தன்னையே வைத்த கண் வாங்காமல் பார்ப்பதாய் தோன்றிற்று.

கால்களுக்கு கீழே வைத்துக் கொண்டவர், துடுப்பினை வலித்து வீட்டுக்குத் திருப்பி விடுவோமாயென யோசித்தார். உண்மையில் தாவீதிற்கு வீட்டிலிருப்பதைக் காட்டிலும் கடலினுள் இருப்பதே பிடித்திருந்தது. குளிர்ந்த காற்றும் உப்பின் வாடையும் எப்போதும் அவரைக் கிளர்ச்சியுறவே செய்தன. இன்னும் சிறிது நேரம் கழித்துப் போவோமென முடிவெடுத்தவராய் மீண்டுமொரு தடவை மீனைப் பார்த்துக் கொண்டார்.

அப்போதும் கூட மீனானது தன்னையே உற்றுப் பார்ப்பதாகப் பட்டது. சிறிது நேரம் தலை குனிந்து உட்கார்ந்திருந்தவர் ஓரக்கண்ணால் மறுபடியும் மீனைப் பார்த்தார். இப்போது அஃது அவருக்கு வேறெங்கேயோ பார்ப்பதாகப்பட்டது. ஆசுவாசமடைந்தவராகத் தலையை நிமிர்த்தி, நேராகவே மீனைப் பார்த்தார். மீனும் தலையைத் திருப்பி மறுபடியும் தன்னைப் பார்ப்பதாக அவருக்குத் தோன்றிற்று. சிறிது அச்சமடைந்தவரான தாவீது, ஜெகோவா கூறியதை நினைத்துப் பார்த்தார். மனித உணர்வுக்கும் அறிவுக்கும் நிறையவே வித்தியாசமிருக்கின்றது. அறிவு மாற்றமடையலாம், ஆனால் உணர்வு ஒருபோதும் மாற்றமடையாது. மீன் என்னைப் பார்ப்பது என்னுடைய உணர்வே ஒழிய அறிவு கிடையாது. உணர்வுகள் சஞ்சலமடையும் போது நம்மை நாமே குழப்பிக் கொள்கின்றோம். ஆமாம், அதுதான் உண்மை. மீன் என்னைப் பார்க்கவில்லை. அப்படியானால் அது என்னைப் பார்ப்பது போல் தோன்றுவது அது வெறும் பிரமை, அல்லது கற்பனை. இவ்வாறு தாவீது தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டார். இந்தப் பிரமையிலிருந்து தப்பித்துக் கொள்ள ஒரே வழி கொஞ்ச நேரத்திற்கு மீனைப் பார்க்காமல் இருப்பதுதான். ஆமாம்,அதுதான் சரி. இப்படியாக முடிவெடுத்துக் கொண்ட தாவீது எழுந்து பின்பக்கமாக இருந்து கொண்டார். மனதுக்கு நிம்மதியாக இருப்பது போல் படவே சற்று ஆசுவாசமடைந்து தன் முன் பிரமாண்டமாய் விரிந்திருந்த கடற்பரப்பைக் கண்களினால் துழாவினார். ஓரிடத்தில் எக்கச்சக்கமான கிட்டிவேக்ஸ் பறவைகள் பறப்பது கண்டும், துள்ளிக் குதிக்கும் டால்பின்களைக் கண்டும் விசிலடித்தார். தானும் அவ்வாறே மாறி அவற்றோடு கூடப் பயணிப்பது போல் கற்பனை செய்தார். அப்போதுதான் மீன் அவரை அழைத்தது.

'மனிதா!'

திடுக்கிட்டுப்போன தாவீதிற்கு, முதலில் எதுவுமே விளங்கவில்லை. ஒரு மீன் எப்படிப் பேசும்? அதுவும் மனிதாவென்று. நான் மனித இனத்தைச் சேர்ந்தவனென்பதை எந்த அறிவின் மூலம் கண்டுபிடித்தது. மனிதர்களைப் போன்றே அதற்கும்

ஆறறிவா? இருக்காது. ஆனால், தன்னுடைய அறிவின் பொருட்டு என்னை ஒரு மனிதனாக அது உணர்ந்திருக்கின்றது. << என்ன மனிதா, ஒரு மீன் எப்படிப் பேசும் என்று யோசிக்கின்றாயா?>> மறுபடியும் மீன் கேட்டது. தாவீதிற்குத் தூக்கிவாரிப் போட்டது. உண்மையாகவே மீன் தான் பேசுகின்றதா?



ஆம், உண்மையாகவே மீன் தான், சந்தேகமே இல்லை. தாவீதிற்கு வியப்போடு சேர்த்து சிறிது அச்சமும் ஏற்பட்டது. மீனையே உற்றுப் பார்த்த தாவீது, அதன் உதடுகள் பிரிந்திருப்பதையும், அதன் கண்கள் மிகச் சரியாகத் தன்னையே உற்றுப் பார்ப்பதையும் அவதானித்தார். சிரமப்பட்டு மூச்சு விடுவது அப்பட்டமாய் தெரிந்தது. முதுகின் ஓரமாயிருந்த அதன் செட்டைகள் அடிக்கடி துடித்துக் கொண்டன.

'உண்மையாகவே நீதான் பேசுகின்றாயா மீனே?'

'ஆமாம், நான்தான் பேசுகின்றேன். உனக்கு நம்பிக்கை இல்லாவிடின் என்னுடைய உதடுகளைப் பார். அவை அசைவது உனக்குத் தெரிகின்றது தானே?'

'ஆமாம் நீதான் பேசுகின்றாய், சந்தேகமேயில்லை. ஆனால், ஒரு மீன் எப்படிப் பேசும் என்று எனக்கு இன்னமும் ஆச்சரியமாகவேயிருக்கின்றது >> என்ற தாவீதிற்கு உண்மையில் மீனுடனான இந்த உரையாடல் பிடித்தேயிருந்தது. ஒரு மலைப்பாம்பினைப் போல் தன்னை விழுங்கிக் கொண்டிருக்கும் இந்தத் தனிமையிலிருந்து கொஞ்ச நேரத்திற்கு விடுதலை கிடைக்கப் போவதையெண்ணி அவர் மகிழ்வடைந்தார்.

'உன்னைப் பார்த்தால் தனிமையில் இருப்பவனைப் போல் தெரிகின்றதே. உன் மனைவி எங்கே?'
'இறந்துவிட்டாள். ஒரு இருபது வருடங்களிருக்கலாம்'
தாவீது அப்படிச் சொல்லியபோது, அவரின் கண்கள் படகின் தரையைப் பார்த்தவாறு பணிந்திருந்தன. மேற்கொண்டு எதுவும் பேசாமல் அமைதியாகவேயிருந்தார். மீனே மீண்டும் தொடரலாயிற்று.

'அதன் பிறகு நீ வேறு மணமே செய்துகொள்ளவில்லையா?'
'இல்லை, ஒருவேளை உணவிற்கே பெரும்பாடு பட்டுக்கொண்டிருக்கும் நான் எவ்வாறு இன்னொருவருக்கு உணவு தர முடியும் சொல்? நான் தோற்றுப்போனவன். ஆமாம்... நான் தோற்றுப் போனவன். தோல்வி ஒரு மனிதனை நிலைகுலையச் செய்கிறது. நிலைகுலைந்து போவது மிகவும் சுலபம். ஆனால், அதிலிருந்து மீள்வதோ மிகக் கடினம்'

'தவறான புரிதலின் அடிப்படையில் பேசிக்கொண்டிருக்கின்றாய் மனிதா'

இவ்வாறு கூறிவிட்டுத் தாவீதையே உற்றுப்பார்த்த மீனானது, பின்னர், வேறொரு பக்கம் திரும்பி மீண்டும் தொடர்ந்தது... 'உன் வாழ்வு இத்தோடு முடிந்துவிடப்போவதில்லை; ஏதோவொன்று மிச்சமிருக்கின்றது, அதன் மீது நம்பிக்கையாயிரு, சாத்தானை விட, தேவனே பலம் பொருந்தியவரெனப. பைபிளில் எழுதப்பட்டுள்ளது தானே?'

ஆறுதலாக மூச்சை இழுத்து விட்ட தாவீது, 'உண்மைதான்...ஆனால் என்னைக் கொஞ்ச நேரம் பார். தளர்ந்து போன உடல், ஒரு வேளை ஆகாரத்திற்கே

நீண்ட நேரம் காத்திருக்கின்றேன், தோய்க்காத ஆடை என் வாழ்க்கை இப்படித்தான் போகின்றது. உலகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவனைப் போலாகிவிட்டேன். இப்படியானவொருவன் தன்னுடைய சாவினைத் தவிர வேறெதை எதிர்பார்க்க முடியும்?' என்றார்.

'அப்படியில்லை மனிதா, மரணம் நம்மைத் தழுவிக் கொள்ளும் கடைசி நொடியில் கூட, நாம் மீண்டும் உயிர் வாழ்வதற்கான சாத்தியம் இருக்கின்றது. தாஸ்தாவொஸ்கியின் கதை உனக்குத் தெரியும் தானே? தலை துண்டிக்கப்படும் கடைசி நிமிடத்திலிருந்து அவர் காப்பாற்றப்படவில்லையா?'

'இறப்பின் இறுதி நொடியிலிருக்கும் நீ என்னிடமிருந்து தப்பி மீண்டும் உயிர்வாழ்வதற்கான சாத்தியம் இருக்கின்றதா?'

'நான் அப்படி எண்ணவில்லை. ஆனால் ஏறக்குறையச் சாத்தியம் இருக்குமெனவே நம்புகின்றேன்'

'என்னை மன்னித்துவிடு மீனே, அகோப்ர பசியிலிருக்கும் நான் எக்காரணத்தைக் கொண்டும் உன்னை மீண்டும் கடலில் விடுவதாயில்லை'

'நான் உன்னிடம் எப்போதாவது உயிர்ப்பிச்சை கேட்டேனா?' மீன் சற்றுக் கோபமாகவே தாவீதுவிடம் இப்படிக் கேட்டது.

தன்னுடைய வார்த்தைகளின் மூலம் மீனைச் சங்கடப்படுத்திவிட்டேனா என்று தாவீது நினைத்தார். அது எப்போதாவது என்னிடம் உயிர்ப்பிச்சை கேட்டதா, இல்லையே பிறகேன் என் வாயிலிருந்து இப்படியானவொரு அநாகரிகமான வார்த்தை உதிர்ந்தது. மீனோ, மனிதனோ வார்த்தைகளை அவர்களின் மனது புண்படாமல் பயன்படுத்த வேண்டுமென்று மோசேயு எனக்குச் சொல்லியிருக்கின்றாரே. தாவீது தொடர்ந்து இருக்கப் பிடிக்காமல் எழுந்து நின்று கொண்டார். வயிற்றிலிருந்து ஏதோ பிசைவதைப் போலப் பட்டது. தனக்குள்ளிருக்கும் பசிதான் இத்தனைக்கும் காரணமென அவருக்குப் புரிந்தது. மீனின் முகத்தைப் பார்க்கத் தயங்கியவர் வேறொரு திசையில் பார்த்துக் கொண்டு இப்படிச் சொன்னார்.

'மீனே, நானுன்னை என்னுடைய வார்த்தைகளின் மூலம் எரிச்சலூட்ட விரும்பவில்லை. நீ அப்படி எண்ணவும் மாட்டாய். ஏனெனில், தன்னுடைய கதையினைக் கூறும் ஒருவர் இன்னொருவரின் கதையினைக் கேட்பதற்கும் தயங்க மாட்டார்'

இப்போது முகத்தைத் திருப்பி மீனைப் பார்த்த தாவீது, அதனிடம் மன்னிப்புக் கேட்பதைப் போல் ...

'நான் பேசியது பிழையே,உன்னை அப்படிச் சங்கடப்படுத்தியிருக்கக் கூடாது.என்ன செய்வது வயது போகப் போக அறனையும் பெயர்கிறதல்லவா?' என்றார்.

தன் இரண்டு கைகளாலும் மீனைத் தூக்கிக் கொண்டவர், அதனுடலில் மெல்ல முத்தமிட்டார். அப்படியே அதைக் கடலில் இறக்கிய தாவீது, நீரினை அள்ளியெடுத்து மீனின் முதுகில் ஊற்றினார். மீனானது செட்டைகளையும் வாலையும் அடித்துக் கொண்டது. பிடியினை மெதுவாகத் தளர்த்திய தாவீது, அது கடலுக்குள் சென்று மறைவதையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தார்.

3.

தாவீது வீட்டையடைந்தபோது பின்னிரவாகியிருந்தது. கதவைத் திறக்கும்போது வயிறு மறுபடியும் சத்தம் போட்டது. சரியாகக் கதவுக்கு எதிரே மாட்டப்பட்டிருந்த இயேசு இவரைப் பார்த்துச் சிரித்தார். தாவீதுவிற்கு இயேசுவின் மேல் சற்றுக் கோபம் வந்தது. உன்னுடைய சகல பாடுகளிலும் இயேசு பங்கெடுத்துக்கொள்வார் என்ற பைபிள் வசனம் அவருக்கு நினைவாய் வர எங்கே ஒரு தடவைகூட வரவில்லையேயென முணுமுணுத்தார். நேராகக் கழிவறைக்குச் சென்றவர் ஆறுதலாக மூத்திரம் பெய்தார். அடிவயிற்றிலிருந்த வலி குறைவது போல் தெரியவே நிம்மதியாக மூச்சை இழுத்து விட்டார். ஆனால், அப்படிப் பெய்யும்போது கூட வயிற்றிலிருந்து சத்தம் வரவே செய்தது. தாவீதிற்கு மூத்திரத்தோடு சேர்ந்து தன்னை வாட்டியெடுக்கும் மலைப்பாம்பும் வெளியே வந்துவிட்டால் என்னவென்று தோன்றியது. தாளமுடியாத வலி. கழிவறையைச் சுத்தம் செய்துவிட்டு நேராகக் குசினிக்குச் சென்றார். முடிவெடுத்தவராய் கூரிய கத்தியொன்றை எடுத்துக்கொண்டவர், சிறிது நேரம் அந்தக் கூரான மெல்லிய முனைகொண்ட கத்தியையே பார்த்துக்கொண்டிருந்தார். வயிற்றினுள்ளேயிருந்த மலைப்பாம்பு, இப்போது தேகம் முழுவதுமே ஊர்ந்து கொண்டிருப்பதைப் போலிருந்தது. ஒரு சில கணங்களின் பின், இயேசுவே! என்று அலறிய தாவீது, அந்தக் கூரிய கத்தியினால் தன் வயிறை அறுக்கத் தொடங்கினார்.

பாம்பின் வால் தெரிந்தது. கையில் பிசுபிசுத்த இரத்தக்கறையோடு அதைப் பிடித்திழுத்த அவர், ஒரு முழுப் பலத்தோடு சடாரென முழுப் பாம்பினையும் வெளியே இழுத்தார். நிம்மதியாகவிருப்பது போல்படவே அறுந்து போயிருந்த வயிற்றைத் தைத்துக் கொண்டார். வெளியே காற்று பலமாக வீசுவது போல் தெரிந்தது. அவசர அவசரமாக யன்னல்களை அடைத்துக் கொண்டபோதுதான் இன்று இயேசுவின் படத்திற்கு முன்னால் மெழுகுதிரி கொளுத்தப்படவில்லையே என்ற நினைவும், உடனடியாக ஒரு

மெழுகுதிரியையேனும் கொளுத்திவிட வேண்டுமென்கின்ற எண்ணமும் அவருக்குத் தோன்றின. நிலவறைக்குச் சென்ற அவர், எப்படியோ ஒரு மெழுகுதிரியைத் தேடித் கண்டுபிடித்தார். அருகிலிருந்த தீப்பெட்டியையெடுத்து, திரியைப் பற்ற வைத்தார். அதன் நீலநிறச் சுவாலை அணையாதவாறு கைகளினால் சுவரமைத்துப் பவுத்திரமாக ஏந்தி வந்தார். இயேசுவின் முன்னாலிருந்த தாங்கியில் அதை நிறுத்தி ஜெபித்தார்.

அப்போது அவரின் முதுகுப்புறமாயிருந்து "புஸ்ஸு, புஸ்ஸு" என்கின்ற அரவம் வரவே, ஒரு அச்சத்தோடு திரும்பியவர், பச்சைநிறத் தோலையும், ஒளிரும் கண்களையும் கொண்ட பாம்பொன்றினைக் கண்டார். தேகம் புல்லரிப்பது போலிருந்தது. பெருங்குரலெடுத்து அலறிய தாவீது இடறிக் கீழே விழுந்தார். பயத்தோடு ஊர்ந்து சென்றவர் தன் முன்னால் இன்னொரு கருஞ்சிவப்புப் பாம்பொன்றிருப்பதைக் கண்டு மேலும் அச்சமடைந்தார். திகைத்துப் போன தாவீதிற்கு தேகம் வியர்த்து ஓடியது. வியர்வையில் தன் முழுத் தேகமும் கரைந்துவிடுமோ என்று ஐயமுற்றார். எழுந்து ஓடியவர், சுவரின் மேல்மூலையிலிருந்து ஜுரோபெல்ரிடா பாம்பொன்று உடலை வளைத்து....வளைத்து வீழ்வதைக் கண்டார். குனிந்து தரையைப் பார்த்த போது தரைநெடுகிலும் பாம்புகள். வீட்டுக்குள் நுழையாமல் தவறிப் பாம்புகளின் சரணாலயத்திற்குள் நுழைந்துவிட்டோமோ என்றெல்லாம் தாவீது நினைத்தார்.

கரிய நிறக் கொழுத்த பாம்பொன்று, ஆக்ரோஷமாகத் தன் வாயைப் பிளந்து அவரை விழுங்க முயன்றபோது "ஓ" வென்று அலறியபடியே வீட்டைவிட்டு வெளியே ஓடினார் தாவீது. இருட்டில் அவருக்கு எதுவுமே தெரியவில்லை. தூரத்தில் கடல் அலைகள் நுரைத்துப் பொங்குவது மாத்திரமே தெரிந்தது. பாம்புகளிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள கடலானது தனக்கு உதவுமென அவர் நினைத்தார். என்னவென்று கூறிவிடமுடியாத ஒரு சத்தம் அவர் காதுகளுக்குள் ஊடுருவிக்கொண்டேயிருந்தது. அது இருட்டின் சத்தம். உண்மையில் இருட்டு நிசப்தமாயிருப்பதில்லை. அதற்கும் குரலிருக்கின்றது. அந்தக் குரலை வைத்து அது அடிக்கடி நம்மைக் கலவரப்படுத்திக் கொண்டேயிருக்கும். தாவீது ஓடினார். கரிய இருளிலிருந்து பாம்புகளின் ஒளிரும் கண்கள் பிரகாசமான ஒளியைப் போலத் தெரிந்தது. அச்சமுற்ற தாவீது தன்னைச் சூழ்ந்திருக்கும் இந்த இருளே ஒரு பாம்பின் கூட்டம் தானா என்று நினைத்தார்.

பாதங்களைக் கடல் அலையில் நனைய விட்டவர், திரும்பி வீட்டைப் பார்த்தார். அது, அவருக்கு ஒரு புள்ளியாகத் தெரிந்தது. அப்படியே அலையின் மீது படுத்துக் கொண்டார். சிறிது நேரம் அப்படியே படுத்திருந்தவர் எழும்பி ஓட ஆரம்பித்தார். ஒரு கட்டத்தில் அது அவருக்குச் சலிப்பை ஏற்படுத்தவே ஓடுவதை நிறுத்தி விட்டு, மணலைக் குழைத்து மனை போல் ஏதோ செய்தார். அவரின் இந்தச் செய்கை அவருக்கே வேடிக்கையாக இருந்தது. அப்போது கடல், நீர்த்திவலைகளாக உருமாறியது. ஒளிபொருந்திய வண்டுகள் ரீங்காரித்துப் பாடின. அற்புதமேதும் நிகழப்போகின்றதோவெனத் தாவீது நினைத்தார். தூய ஆடையணிந்து ஒளிபொருந்தியவராய் இயேசு தோன்றினார். அவரின் முதுகிலிருந்து, சிறகுகள் மெதுமெதுவாக அசைவது போலத் தோன்றியது. தேவனேயென்று இரு கை விரித்து வீழ்ந்தவர் மறுபடியும் எழும்பியபோது, ஆர்ப்பாட்டமின்றி ஆர்ப்பரிக்கும் கடலையே கண்டார். மணல் அப்பிய கைகளோடு வீட்டுக்குத் திரும்பி நடந்தார். இப்பொழுது பாம்புகளைக் காணோம்.

இயேசுவின் முன்னால் கொளுத்தப்பட்டிருந்த மெழுகுதிரி அணைந்திருந்தது. நேராக நிலவறைக்குச் சென்றவர் இரண்டு மெழுகுதிரிகளை எடுத்துக் கொண்டார். பற்ற வைத்து இயேசுவின் முன்னால் நிறுத்தினார். முழு வீடுமே பிரகாசமானதைப் போலத் தோன்றியது. பைபிளையெடுத்துச் ஜெபித்தார்.

குசினிக்குச் சென்றவர், சூடாக இருந்த கோப்பியை ஒரு கோப்பையில் ஊற்றிக்கொண்டார். கோப்பையோடு சாப்பாட்டு மேசைக்குச் சென்றவர், அதை அழகாக அலங்கரித்தார். தட்டு நிறைந்திருந்த உணவுகளையும், பழங்களையும் கொண்டு வந்து வைத்தார். அவருக்குப் பிடித்தமான வான்கோழி வறுவலும், அவித்த சோளமும் அதிலிருந்தன. அமைதியாக - மிக அமைதியாக - இருக்கையில் அமர்ந்தவர், ஏதோ ஒன்றை மறந்து விட்டவராக இருக்கையிலிருந்து எழுந்து கொண்டார். மறுபடியும் நிலவறைக்குச் சென்றவர் அந்த அறையின் இடதுபக்கமிருந்த மூலையில், அடுக்கப்பட்டிருந்த பழைய பெட்டிகளை ஒவ்வொன்றாகத் துழாவி அதைக் கண்டுபிடித்தார். அதுவொரு காகிதக் கிரீடம். தளர்ந்து போயிருந்த கைகளால் அதைத் தூசிதட்டியவர் முகத்துக்கு நேராகப் பிடித்து அதில் வரையப்பட்டிருந்த நீலநிற வைரக்கல்லையே சிறிது நேரம் உற்றுப் பார்த்தவராக நின்றிருந்தார். பின், மேலே வந்து சாப்பாட்டு மேசையின் இருக்கையில் அமர்ந்து, தலையில் கிரீடத்தினை அணிந்து கொண்டார். அது அவருக்கு எடுப்பாகவும், ஒரு ராஜாவினைப் போன்ற தோற்றத்தினையும் கொடுத்தது. அச்சு அசலாகத் தாவீது ராஜாவைப் போலவே!

•

அடவியின்

இழுவை

நிலம்

வனத்தின் மீது அமரும் வெயிலை
நிழல் விரித்து உடைத்தெறிகிறது பருந்து
வேட்டைக்காரனின்
கண்களிலிருந்து பனிக்கின்ற கணம்
காடுகளை மேய்ந்து திரும்பும் பகல்
ஒரு செடி இலையின் பனிக்குமிழியில் கரைந்தது
அச்சம் கொணர்ந்த இரவு
விலங்குகளை நீர் வேட்டைக்குத் திரும்புகிறது.

இலையின் பச்சைய நெடியை
கணத்திற்குக் கணம் முகர்ந்து விலகும்
வண்ணத்துப்பூச்சி
காடுகளின் சூழல் தட்ப வெப்பத்தை
காற்றின் அடர்த்தித் தன்மையில் அளவிடுகிறதா?
பிரபஞ்சத்தின்
ஈர்ப்பு விசை சேர்க்கை உதிர்ந்த
இறகுகளின் உடையும் துகள்களின் வண்ணக் கலவைகள்
நிலமடைந்த சிதறலில் கலியுகத்தின் அழிவா?

கோ.நாதன்

அடவியிலிருந்து தற்கொலைக்கு நகர்ந்த
சிறகுகள் முளைத்த பூச்சிகள்
இருள் மக்கிய கிராமங்களூடே கடந்து
மின் ஒளியின் விசாலத்துள் வீழ்ந்ததும்
மரண உடல்களால் மிளிர்ந்தது நிலம்
மின்மினிப்பூச்சி அரிக்கும் மின் துளி
பிரபஞ்ச சக்தி பீடங்களின் மூலமா?

மரத்திலேறும் ஓணான்
தலையசைத்து அசைத்து ஏதோ
சிந்தனையை தூண்டி மெதுவாக நகர்கிறது.
மரத்தின் இலைகளில் படர்ந்திருக்கும்
ஓணானின் விம்பம்
கோள்களின் மையங்களூடான ஈர்ப்பு விசையா?

பெருமழையில்
காட்டின் சருகுகள் மேவிய நதி
களிமண், குறுமணல் நெருடலில்
சூழ்ந்திருக்கும் வெள்ளப் பெருக்கு
ஈர்க்கும் காற்றின் அகோரப் பிசுபிசுப்பு
உடலைக் குளிரின் விறைப்பு ஊடறுத்து
காயும் பறவை
சூரியனின் கதிர்வீச்சு தீக்கொழுந்து ஆதி யோதியா?



ஓவியம் - ஷமீலா யூசுப் அலி

புத்தகவிமர்சனம் :

இருள் மிதக்கும் பொய்கை

உமா -ஜேர்மனி

இருளைத்தன் உற்ற தோழியாக அரவணைத்துக்கொண்டு தர்மினியின் 'இருள் மிதக்கும் பொய்கை' என்ற தொகுப்பிலுள்ள 51 கவிதைகளும் நேர்த்திமிக்க வலிய சொற்களினூடாகத் தனியொருத்தியின் அகம் சார்ந்த தேடல்கள், வாழ்வுச்சிக்கல்கள், ஏக்கங்கள், இயற்கை மீதான ஈர்ப்பு, புறம் சார்ந்த கோபங்கள் என்பவற்றைத் தொட்டு நிற்கின்றன.பெண் விடுதலைக்கான அறை கூவல்களோ, சமூகவிடுதலை நோக்கிய முன்னெடுப்புகளோ இக்கவிதைகளில் இல்லை. அவை தான் சார்ந்த வாழ்வியலை, இயற்கையின் வார்ப்பை, மானுடத்தின் நேசிப்புடன் ஸ்பரிசிக்கின்றன. தர்மினியின் முதலாவது தொகுப்பான 'சாவுகளால் பிரபலமான ஊர்' கவிதைகளுடன் ஒப்பிடுகையில் இக்கவிதைகளில் மொழியின் செறிவு ,கருப்பொருட்களை அழகான கவிதைகளாக உருப்பெறச் செய்கின்றன.

இலக்கியத்திலும் நாளாந்த வாழ்விலும் பொதுவாகவே, நேர்மறை- எதிர்மறை நிகழ்வுகளுடன் பொருத்திப் பார்க்கும் படிமங்களைத் தர்மினியின் கவிதை வரிகள் புரட்டிப்போடுகின்றன. ஆங்கில இலக்கிய வர்ணனை மரபில் லைட்மோடிவ்(Leitmotiv) என்ற குறியீட்டு வடிவத்தை அதிகமான கவிதைகளில் காணக்கூடியதாக இருக்கிறது.

இரவு, இருட்டு, கனவு போன்ற படிமங்கள் பெரும்பாலான கவிதைகளின் கருப்பொருளாக அமைகின்றன. பொதுவாகத் துயரம், அபாயம், கெட்டவை என்பவற்றைக் குறித்து நிற்கும் இருள் - இரவு - கருமை என்பவை ஆளுமைமிக்க, நம்பிக்கை தரும் குறியீட்டுப் படிமங்களாக இங்கு பார்க்கப்படுகின்றது. இருளை வாழ்தல், இப்போது முடிகிறது இரவு, இருளோடு, இருளைத்தரிசிக்க , இரவோடு, இருள் மிதக்கும் பொய்கை போன்ற கவிதைகள் இக்குறியீடுகளைக் கொண்டமைந்துள்ளன. எமது சமூகத்தில்; இரவு- இருட்டு என்பவை ஒரு பெண்ணிற்கு அச்சம் தரக்கூடிய ஆபத்து நிறைந்த பொழுதாகவே காலங்காலமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளன. பெண்ணின் கண்ணீர்க் கதைகளை எழுதும் இரவுப் பொழுதுகள், தனிமையின் சுதந்திரவெளியில் அவள் கனவுகளையும் வாழ வைக்கின்றன.

அந்த உன்னதக் கணத்தின் சாட்சியாக 'இப்போது முடிகிறது இரவு' எனும் கவிதையைக் கொள்ளலாம்.

மாலை மெல்ல மெல்ல முடிந்து இரவு கனிந்து உருகுகின்றது
கரும்வேலி படர்ந்திருக்க இருள் அளைந்து விளையாடி
தனிமை பருகுகிறாள்
தன்னைத்தின்னும் கருமையினுள் கரைய வேண்டுமாம்
இரவு கடுஞ் சத்தத்துடன் இவளைத்துரத்துகிறது
இப்போது முடிகிறது இரவு
விடிந்துவிட்ட இந்த நாளில் என்ன செய்வது?
இவள் ஒளிந்து கொள்ள
இருளுக்காக இன்னும் எவ்வளவு நேரம் காத்திருப்பது?

இரவின் ஸ்தூலமான நிசப்தத்தையும் ஸ்திரத்தன்மையையும் கவிதா மொழிக்குள் அடுக்க முனைகையில் காலகாலமாய் நேர்மறையான விடியல், புத்துணர்வு என்பவற்றைக் குறிக்கும் படிமங்கள் எதிர் மறையான மொழியுருவாக்கம் செய்யப்படுகின்றன. 'இருளை வாழ்தல்' என்ற கவிதையில்...

தன்னைப்பருகச் சொல்கிறது இரவு
உறங்கி எழுவதற்குள்
ஒரு காலை விடிந்து விடுமெனப் பயமாயிருக்கிறது.

இதே போன்று 'சூரியச் செருக்கு' எனும் கவிதையிலும் இருளின் ரம்மியத்தை அழிக்கும் அதிகார விம்பமாகச் சூரியன் வருகிறது.

இறுக்கிக் கண்கள் மூடி
மெது மெதுவாய் அமைதி
இருட் கருமையின்
பெருங்கருணை உறக்கம்!

சூரியச் செருக்கு
இரவைக் கொன்றது!

குறித்த சொற்களை, படிமங்களைக் கொண்டு நிகழ்வுகளைக் கவிதைக்குள் அடக்கும் பொதுமைப்படுத்தப்பட்ட ஒரு மொழியை, தர்மினி மறுதலித்துத் தொடர்ச்சியான இப்படிம மாற்றங்களினூடாகச் சமூகத் தாரப்பரியங்களை (social prejudices) மாற்றியமைக்கும் புதிய சொல்லாடல்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். இதன் மூலம் ஒடுக்கப்படுகின்ற, நிராகரிக்கப்படுகின்ற அடையாளங்கள் இலாவகமாக கவிதை மொழிக்குள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இத்தொகுப்பிலுள்ள அனைத்துக் கவிதைகளும் இந்த சமூகக்கட்டமைப்பின் மானுட ஏற்றத்தாழ்வுகளையும் மனித நேசிப்புடன் விசாரணை செய்கின்றன.



இயற்கையின் வனப்பை வர்ணிக்கும் போதும், தன் வாழ்வியலில் கற்றறிந்த சமய சித்தாந்தங்களைக் கட்டுடைக்கும் போதும் அடிநாதமாக நசிக்கப்படுகின்ற மனிதக் குரல்களே ஒலிக்கின்றன. விவிலியத்தில் கூறப்பட்டிருக்கும் கதைகளை மையமாகக் கொண்டு சமகால அநீதிகள், இலங்கையின் யுத்தச்சூழல் தந்த அனுபவங்கள், பெண் மீதான ஒடுக்குமுறை என்பன பல கோணங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன.

'மழையும் நெருப்பும்' என்ற கவிதையில் உலகப்பேரழிவு (ஜெனசிஸ்) வெள்ளப் பெருக்கத்தின் போது நோவாவினால் கட்டப்பட்ட படகின் சித்திரத்துடன் இலங்கையில் நடந்து முடிந்த யுத்தச் சம்பவங்கள் ஒப்பீடு செய்யப்படுகின்றன. ஜெனஸிசில் குறிப்பிடப்படும் வெள்ளம் குண்டுத் தாக்குதல்களில் எழுந்த நெருப்பாக உருமாறுகிறது. நோவாவின் குடும்பத்தினரையும், உலகத்தின் அனைத்து உயிரினங்களிலும் ஒவ்வொரு சோடியையும், கிராமத்தில் எஞ்சியிருந்த அனைத்தையும் படகில் ஏற்றி 150 நாட்கள் கடலில் பயணம் செய்கிறது நோவாவின் படகு. இறுதியாக அரராத் மலைச்சாரலில் கரை சேர்கிறது. அப்போது வெள்ளப்பெருக்கு வற்றும் நிலைக்கு வருகின்றது. கிராமத்தின் பாதுகாப்புப் பற்றி அறிந்து கொள்வதற்கு நோவாவினால் அனுப்பப்பட்ட காகம் திரும்பி வரவில்லை. இறுதியாக அனுப்பப்பட்ட புறா மட்டும் நீண்ட நாட்களிற்குப் பின் ஒலிவ் கிளையை அலகில் ஏந்தி வந்து சேர்கிறது.

வானம் நெருப்பைப் பொழிந்ததைப் போல
நீரையும் பொழிகிறது
நோவாவின் படகில் தப்பித்த ஜீவராசிகள்

உலகைப் புதிதாக்கினர் என்றானாம்.
இனி;
நீரால் உலகை அழிக்க மாட்டேன் என்பதும் ஒப்பந்தமாம்
நோவா விட்ட காகம் திரும்புமா? திரும்பாதா?

……..

கடலில் கப்பல் நிற்கிறது.

நிர்க்கதியற்று நின்ற மக்களின் துயர் தீர்க்க நோவாவிடம் திரும்பி வராத காகம் திரும்புமா என்ற ஆதங்கம் குறியீடாக முன்வைக்கப்படுகின்றது. ஒப்பந்தத்தில் சமரசம் செய்ய வழியில்லை எனும் கவிதை விவிலியத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சம்மனசாக இருந்த சாத்தானின் சொர்க்கத்திலிருந்து பூமி நோக்கிய வீழ்ச்சியைக் கேள்விக்குள்ளாக்குகிறது. டயரின் மன்னன் என்று கருதப்படும லுசிபர்; தனது அழகு, அறிவு, ஆளுமை என்பவற்றால் கவரப்பட்டுக் கடவுளிற்கு உரித்தான மரியாதையையும் மகிமையையும் அடைய ஆசைப்பட்டுக் கிளர்ச்சி செய்தாரெனக் குற்றம் சாட்டப்பட்டுச் சாத்தானாகப் பூமிக்கு வீழ்த்தப்பட்டார்.

திரும்பச் சொர்க்கத்தில் சேர்க்காத
கடவுளின் ஒப்பந்தத்தில்
சமரசம் செய்ய வழியில்லை
நிலமிறக்கி
இக்குட்டிச் சம்மனசைச் சாத்தானாக்கிய
அனைவருக்கும் எச்சரிக்கை!

தர்மினியின் இவ்வெச்சரிக்கை பூமியில் நிகழ்த்தப்படும் அனைத்து அநீதிகளையும் நோக்கியெழும் கண்டனக்குரலாக ஒலிக்கின்றது. மதநூல்களும் வரலாறுகளும், மனித இனத்தின் வீழ்ச்சிக்கும் சமூகத்தில் இழைக்கப்படும் அனைத்துத் தவறுகளுக்கும் பெண்ணே குற்றவாளியாக்கப்படுகிறாள். ஏதேன் பூங்காவில் விலக்கப்பட்ட கனிகளை உண்ணத் தூண்டியமைக்காக ஏவாள் மீதே முழுக்குற்றமும் சுமத்தப்பட்டது. 'விலக்கப்பட்ட கனி' , ' பாவம்' ஆகிய கவிதைகளில் ஏவாளின் பாத்திரம் இரு கோணங்களில் உருவமைக்கப்பட்டுள்ளது...

'விலக்கப்பட்ட கனி' கவிதையில்...
பாதி அப்பிளையாவது
தின்னத் தந்திடுவாள்
ஆதாம் ஒளிந்து கொண்டான்
அவளோ
முழுப்பாவத்தையும்
தானே கட்டிக்கொள்வதாக
ஒப்பந்தத்தோடு அவனையழைக்கிறாள்
அவள் கைகளில் விலக்கப்பட்ட கனி

முதற்கவிதைக்கு மாறாக ஏமாற்றப்பட்டவளான ஏவாள் தப்பித்துச் சென்ற ஆதாமை அழைத்துக் கனியின் பாதியையாவது கொடுக்க முனைகிறாள். 'பாவம்' கவிதையில்...

வெய்யிற் சூட்டில்
தகிப்பதாய் நினைத்த என்னுடல்
அப்பாம்பின் தழுவலில் கிறங்கி
அப்பிளைத் தின்னச் சொன்னது
மிகுதியை
கூப்பிட்டு ஆதாமிடம் கொடுத்தேன்.

கவிதைகளைச் சொல்வதற்கு தர்மினியால் பயன்படுத்தப்படடிருக்கும் இலக்கிய நவீன மொழிக் கூறுகள் *(Stylistic devices)* கவிதைகளின் கருத்துச் செழுமைக்கும், சம்பவங்களின் தாக்கங்களிற்கு அழுத்தம் கொடுப்பவையானவையாகவும், அவை மறைபொருளாக இயங்கி அடியாளத்தில் பொதிந்திருக்கும் மையக்கருத்தோட்டத்தைக் கண்டறியும் தெரிவை வாசகர்களின் சுயதேடலிற்கு விடவும் வாய்ப்பளிக்கின்றன. இந்த அணுகுமுறைக்கான சில உதாரணங்களைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

1995 ஒக்டோபர் மாதம் முப்பதாம் திகதி என்ற கவிதை 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கையின் போது வடமாகாணத்திலிருந்து தமிழ்மக்களின் வெளியேற்றத்தைப் பேசும் அதேசமயம் 1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து விடுதலைப் புலிகளால் பலவந்தமாக முஸ்லீம் மக்கள் வெளியேற்றபட்டதையும் நினைவுகூருகின்றது. வரலாற்றில் சில விடயங்கள் போற்றப்படப்படுவதும், சில சம்பவங்கள் திட்டமிட்டு மறைக்கப்படுவதையும் மறுதலிக்கின்றது இக்கவிதை. *'Parallelisim'* என்ற மொழி உத்தியின் பயன்பாடாக 'அதே' என்ற சொல் தொடர்ச்சியாக உபயோகிக்கப்பட்டுள்ளது. இந்த உபயோகம் இந்நடவடிக்கைகளினதும் மூர்க்கத்தைச் சமதளத்தில வைத்து நோக்குகின்றது.

அதே நாட்கள்
அதே மழை
அதே வீதி
அதே நாவற்குழிப்பாலம்
அதே சாவகச்சேரி
அதே கிளாலி
அதே கிளிநொச்சி
அதே பசி
அதே அந்தரிப்பு...
நாங்கள் கிட்டத்தட்ட ஐந்து லட்சம் சனங்கள்.

இருள் மிதக்கும் பொய்கை
தர்மினி
கவிதைகள்
கருப்புப் பிரதிகள்

இயற்கையின் வார்ப்புகளைக் கொண்டு சமூக ஏற்றத்தாழ்வுகள், பெண்ணொடுக்குமுறை, பெண்ணுடலரசியல் எனும் ஆழமான விடயங்களை இலகுவாக வெளிப்படுத்தப்படுகின்றன. 'Pesonification' என்ற குறியீட்டு வடிவம் மூலம் உயிரற்ற பொருட்கள் இங்கே, மனிதப் பண்புகள் கொண்டவையாக உருவகப்படுத்தப்படுகின்றன. பயணம், கரை, பூவண்ணம், மணற்பெண், பாறையும் பனியும் மற்றும் இலையின் பிழை எனும் கவிதைகள் இந்த வகைப்படுத்தல்களிற்குள் அடங்குகின்றன.

'கரை' என்ற கவிதை இவ்வாறாக...
அலைகளை அனுப்பிவிட்டு
அமைதியானது நடுக்கடல்.
மோதிய அலைகளின் சிதைவுகளில்
கரைந்து கொண்டிருப்பது
நான்.
கடலுக்கென்ன?
அது ஆழமாய்
அழகாய்
பச்சையாய்
நீலமாய்
மௌனமாய்
கொந்தளிப்பாய்
அவ்வப்போது தோற்றமளிக்கின்றது.
கரையில்
ஒரு போதும் இல்லாத முனகல்களோடு
தேய்வதென் காலம்.

பெண்ணின் பருவ மாற்றத்தோடு பெண்ணுடல் அவளிடமிருந்து பறிக்கப்பட்டுச் சமூகத்திற்கேற்ற நுகர்வுப் பண்டமாக மாற்றப்படுகின்றது. யுவதியாய் கிளர்ச்சியேற்படுத்தும் அவளது முலைகள் முதிர்ச்சியின் பிற்பாடு புறக்கணிக்கப்பட்டுப் பெறுமதியற்றதாய் கட்டமைக்கப்படுகின்றது. இந்த சமூகநோக்கு, பெண்களின் உளவியலில் பெரும்பாதிப்பை உண்டாக்குகின்றது. அவள் தன்னனைத்தானே தாழ்த்திக்கொள்ள முனைகிறாள். 'மணற்பெண்' கவிதை மணல்மேட்டின் அழிவைப் பெண்ணுடல் சார்ந்த இந்த உளவியலோடு பொருத்திப் பார்க்கின்றது.

என் உதடுகளின் திட்டு இப்போது சரிகிறது
மார்புகளின் மேடு தளர்கிறது
வயிறு சிதைந்து போகிறது
கால்கள் துவள விரல்கள் அழிகின்றன
நான் மெல்ல மெல்ல இல்லாமல் போகின்றேன்
உதிர்ந்து கொண்டிருக்கும் துகள்களின் முடிவில்
எதுவாயிருப்பேன்?
என்ற கேள்வி அவளது இருப்பை முன்னிட்டதாகின்றது.

'இலையின் பிழை' கவிதை ஆதிக்கத்தின் அனைத்து அதிகார வடிவங்களிற்கும் அடிபணிதலைச் சாடி நிற்கின்றது.

கிளைகளை அசைப்பதும்
இலைகளை உதிர்ப்பதும்
காற்றின் கலை!
மனங்கனிந்தே வீழ்வது
இலையின் பிழை.

குடும்ப வாழ்வில் ஆண்- பெண் பாத்திரம், அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ள ஆண்களின் உத்திகள், பாலியல் தேவைகளிற்கு மாத்திரம் பெண்களை அணுகுதல் போன்றவை சாதாரண வாழ்வு அனுபவங்களுடனான நாட்குறிப்புகள் போல் வெளிப்படுத்துவது தர்மினியின் கவிதைகளின் ஒரு அம்சம்.
'சாவுகளால் பிரபலமான ஊர்' தொகுப்பில் வெளியான 'தொனி' போன்ற கவிதையைப் போலொன்று 'குரல்கள்'.

தலையை விரிச்சுப் போட்டு
பேய் மாதிரிப் படுத்திருக்கிறாய் எழும்பு
நேற்றிரவு
ஏஞ்சலைப் போலிருக்கிறாய் கொஞ்சிய குரல்தானது
ஒன்றின் மேலொன்றாய்
உயர்த்திய தலையணைக்கடியில்
நசிபட்டுப் போன வார்த்தைகள் எக்கச்சக்கம்.

புகலிட வாழ்வின்; அந்நியச் சூழலில் வாழ முற்படுகையில், தாம் வாழும் நாட்டில், இயந்திர வாழ்வில், நாட்களைத் தொலைத்து, சொந்த நாட்டு ஞாபகங்களுடனான ஏக்கங்களுடன், அடையாளங்களைத் தொலைத்து ஒன்றிலும் ஒட்ட முடியாது கழியும் நாட்கள் என்பவற்றை, வீடென்பது என் ஞாபகங்கள், பனிக்காலச்சோம்பல், இனியொரு காட்சியில்லை, என் நாவு பிளந்தது, சத்தமில்லாத மழை, நாட்களைக் கழித்தல் எனும் கவிதைகள் பேசுகின்றன.

யுத்தத்தின் போது தாம் குடியிருந்த வீடு ஒவ்வொரு

காலக்கட்டத்திலும் அழிந்தும், மீளக்கட்டியெழுப்பப்பட்டும், பின் முற்றாக அழிக்கப்பட்ட போதும் வீடுபற்றின நினைவுகள் அழியாது பசுமையாக நிலைத்திருப்பதை...

கோடை விடுமுறைக்கு வீடு போகவில்லையா?
நட்புகள் விசாரணை.
அங்கிருக்கும் ஊரில் எங்கிருக்கிறது என் வீடு?
வீடென்பது
என் ஞாபகங்கள்.

அதேவேளை பாதுகாப்பாக வாழ ஸ்திரமான வீடிருந்தும் சலிப்பாக கழியும் நாட்களை...

தேய்ந்து
கறுக்கத் தொடங்கியது நாள்.
அங்கங்கே அலைந்த மனிதர்கள்
வீடு நுழைகின்றனர்.
தனித்த வெளி
என் கதவினூடு தெரிகிறது.

இனியொரு காட்சியில்லை பல்கனியில்.
கருமென்ற வீட்டினுள் ஓடப்போகின்றேன்
இனியொரு காட்சியில்லை.

இயற்கையை இரசித்தலும், அதனுடானான எமது ஒட்டுதலும் கூட, சொந்தத் தேசத்திலும், அந்நியச் சூழலிலும் எவ்வாறு மாறுபாடான உணர்வுகளை ஏற்டுத்துகின்றது என்பதன் பிரதிபலிப்பாய்... மழைச்சத்தத்தின் வரிகள்.

முன்னொரு காலம்
மழை சத்தமிடுவதைக் கேட்டேன்

*****

மழைக்குதியோசை
நடுக்கூரையொழுக
டப் .... தொப்.... டப் . . தொப் சட்டியிலும் சத்தம்....
கூதலும் சத்தமுமாக மழை...

என்பதாகவும் மறுவிதமாக,
கதவைத் தாளிட்டு பூட்டி
திரைகள் இழுத்து
மூடிச்சாத்திய சன்னல்களுடன்
உள்ளே என் வாசம்
மின்னி ஒரு வெளிச்சம்
என் முன் விழ
திரை விலக்கி வானம் பார்த்தால்
மழைக் கயிறுகள்
மண்ணில்
கரைந்து கொண்டிருந்தன.

****

எனச் 'சத்தமில்லாத மழை'யில் வரும் வரிகளும் விளங்குகின்றன.

கலாசாரம் என்ற வரையறைக்குள் நாம் வளர்க்கப்படுவதன் விளைவாக, தனி மனிதச் சுதந்திரமும், அவர்கள் சக உறவுகள் மீது அன்பை வெளிப்படுத்துவதும் கட்டுப்படுத்தப்பட்டே வருகின்றது. தமக்குத் தாமே போலித்தனமான கட்டுப்பாடுகளை விதிக்கும் ஒரு சமூகத்திலிருந்து சற்றுச் சுதந்தரமான வெளியைத் தரிசிக்கும் போது, சகஜமாகவும் இலேசான மனநிலையுடனும் மனிதர்களுடன் உறவுகொள்ள முடிகிறது.

தன் சொந்த மண்ணில் அனுபவித்தவை, இழந்தவை என nostaligic (பழையவற்றை நினைத்தல்) தன்மையுடன் நினைவு படுத்தகையில் தன் தாயைப் பிரிந்து வருகையில் தாய்க்குக் கொடுக்காத முத்தத்திற்காக வருந்துகிறார் தர்மினி. அதேவேளை, ரயில் பயணத்தில் இயல்பாக ஒரு ஆணிடமிருந்து கிடைத்த முத்தங்களைப் பற்றி இப்படி நினைவுகொள்கிறார்...

முகம் மறந்துவிட்டது
பெயர் கேட்டறியவில்லை
இரு முத்தங்கள் மட்டும்
அத்தருணத்தின் நினைவாக
என்னுடன் பயணிக்கின்றன

கவிதைக்குள் மொழியை நேர்த்தியாக கையாளும் தர்மினியின் சில கவிதைகளில் தேவைக்கதிகமாகச் சொற்கள் சேர்க்கப்பட்டிருப்பதால், அவற்றின் நயம் குன்றி, அவை வசனக்கோர்வைகளாக வெளிப்படுகின்றன என்பதையும் இங்கு சுட்டிக்காட்டலாம்.

இனி வரும் தொகுப்புகளில் இக்குறையை நிவர்த்தி செய்து, படைப்புலகத்திற்கு, பெண்ணாளுமையாய் இன்னும் நிறையக் கவிதைகளை, தர்மினி தருவார் என்று எதிர்பார்க்கின்றேன்.

| வெளியீடு: கருப்புப்பிரதிகள் (ஏப்ரல் 2016)
விலை: ரூ 60.00

மரியாள்

நஸீஹா முகைதீன்

முன்பிருந்தே மாமாவின் வீட்டு சமையலறையின் முன் பக்கத்தை அண்டியதாக ஒரு நிலைக்கண்ணாடி இருக்கும். பழங்காலத்துத் தேவதைக் கதைகளில் வரும் சாயலில் நீள் வட்டமான முகப்பைக் கொண்ட அதைச் சூழவும் அரேபியா எழுத்து வடிவிலான அலங்காரமிருக்கும். அதன் வழியே மாமாவின் வரவேற்பு அறையில் இருக்கும் கணக்கு எழுதும் மேசை தெளிவாக விளங்கிக் கொண்டிருக்கும்.

நான் பார்க்க நேர்ந்த பொழுதெல்லாம் மாமாவின் மீசையில்லாத ஒடுங்கிய முகம், மெலிந்த, காயங்கள் வாட்டிய உடல் மட்டுமே விம்பமாகத் தெரிந்திருக்கிறது. சீனி வியாதி மிக இளவயதில் வந்ததிலிருந்து அவருக்கு உடலெங்கும் ஒருவித நமைச்சல் ஒட்டிக்கொண்டது. சொறியும் போதெல்லாம் கீறல்களாகி மெல்ல மெல்லக் காயங்களாகிய அவற்றைச் சொறிவதை அவர் நிறுத்தவேயில்லை. நிறுத்தவும் முடியாது என்றளவுக்கு அவை அவரைத் தின்றும் இருந்தன. சில நேரங்களில் சீழ் வடியும் காயங்களைப் பார்க்க இயலாதும் இருக்கும்.

இன்று அவருக்குப் பதிலாக வெள்ளைத் துணியொன்று கண்ணாடியில் பிரதிபலிக்கிறது. கணக்கு எழுதும் மேசை வெளியே ஓரமாக நிற்கும் மாமரத்தின் கீழே போடப்பட்டிருக்கிறது. வழமையாக மாமாவிற்கு நேரம் தாழ்த்தியே சீனியில்லாத பால்கோப்பி ஊற்றப்படும் என்பதால் அதிக நேரங்களில் கடைகளில் மில்க்மைட் டீ குடிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்.



ஓவியம் - ஷமீலா யூசுப் அலி

இதனாலேயே மாதத்திற்கு இரண்டு மூன்று நாட்கள் வோர்டில் போய் படுத்துக் கொள்ள நேரிடும். அதுவும் அரசாங்க வைத்தியசாலை என்றால் அவருக்கு ஆகாது. எவ்வளவு செலவளித்தாவது தனியார் வைத்தியசாலையில் போய் இருப்பது தான் மாமிக்கும் அக்கம் பக்கத்தவர்களிடம் சொல்ல பெருமையாக இருக்கும்.

ஆனால் இப்போது சீனியில்லாத பால்கோப்பி அவசரப் பால்கோப்பிகளாக மேசையை நிறைத்து இருக்கின்றன. மாமாவுக்காக இல்லை என்பதால் இனிப்பும் தூக்கலாகவே இருக்கிறது. நீண்டு உயரமாகத் தெரியும் மாமாவின் உடலைச் சுற்றி, பழைய நண்பர்கள் இருக்கிறார்கள். வாப்பாவும் இருக்கிறார். மாமியை உள்ளறையில் வைத்திருக்கிறார்கள்.

எங்கோ ஒரு மணல் திட்டிலோ, கடல்படு திரவியமாகவோ புதைபடப்போகும் மாமாவிடம் மாமி மன்னிப்புக் கேட்க வேண்டும். மச்சி மன்னிப்புக் கேட்க வேண்டும். ஒன்றுக்குமே உதவாத மூத்த மச்சான்

மன்னிப்புக் கேட்க வேண்டும்.நானும் மன்னிப்புக் கேட்டிருக்க வேண்டும்.பழைய நண்பர்களும் மன்னிப்புக் கேட்கட்டும்.மாமாவின் காதுகளில் விழாமல் பேசியவர்களுக்கும் விலக்கு இல்லை. கடைசியாக அவரை உயிருடன் பார்த்தபோதுதான், முதல் முதலாக என்னிடம் சரளமாகப் பேச ஆரம்பித்தார். எங்கள் குடும்பத்தில் நல்ல வசதிக்காரரான மாமாவின் வீட்டில் அப்போது லேண்ட் லைன் தொலைபேசி இணைப்பு எடுத்திருந்தார்கள்.பக்கத்தில் நின்று ஃபோனைப் பார்ப்பதென்றாலே அலாதியாக இருக்கும். ஆனால் தொட்டுப் பார்க்க அனுமதியும் இல்லை,அவகாசமும் இல்லை. மாமா வந்துவிட்டால் குசினியறைக்குள்ளே தஞ்சம் புகுந்து விடுவேன். மாமா அரிசி ஆலை வைத்திருந்ததால் முன்அறை முழுவதும் மூட்டை மூட்டையாக அரிசி அடுக்கியிருப்பார்கள்.அவ்வறைச் சுவரில் இருபக்கங்களும் அகன்ற சித்திரங்கள் வரைந்திருப்பார்கள்.அதில் ஒரு தண்ணீர் ஊற்று ஓடிக்கொண்டே இருக்கும்.

மாமி கொஞ்சம் அகம் பிடித்தவள். ஆனாலும் அவ்வளவு கொடூரமாக என்னால் கற்பனை செய்ய முடியாது. மாமாவைப் பார்க்க ஒருவர் மாறி ஒருவராக வந்து கொண்டிருக்கும் போதெல்லாம் தேயிலையும், கேக்குமாகப் பரிமாறியே அவள் களைத்துப் போய்விடுவாள்.பெருநாள் காலங்களில் பால்கோப்பியும் , கறுத்த ஏலம் போட்ட அலிவாவுமாக இந்தச் சம்பவம் மாறிப்போயிருக்கும்.

மாமா வெளிர் நிறங்களிலேயே மேல்சட்டை போடுவார். கீழே வெள்ளையும் நீலமுமாகக் கட்டம் போட்ட சாரம். சிலநேரங்களில் கழுத்தைச் சுற்றி ஒரு துண்டு போட்டுக் கொள்வார். கடிகாரமோ,தொப்பியோ அணிவதில்லை. ஆனால் யாராவது வெளிநாட்டு நண்பர்கள் அல்லது ஹஜ் பயணம் சென்ற அவருடைய வியாபாரச் சேர்க்கைகள் கொடுத்தால் கடிகாரங்களை வாங்கி அவரது உடுப்புப் பெட்டியில் அடுக்கி வைத்து விடுவார்.

ஒருவழியாக மச்சானுக்கும் பெரிய இடத்துப் பெண்ணுக்கும் ஊரே வியக்கும் படியாகத் திருமணம் நடந்து முடிந்தது.நிறச்சாயங்கள் தெளிக்கப்பட்ட புடவைப் பந்தலை அந்தத் திருமணத்திற்குப் பிறகு நான் காணவில்லை. ஊரிலிருந்தே அந்த வழக்கம் கொஞ்சம் கொஞ்சமாக மாறிப் போய்விட்டது. இற்றைக்கெல்லாம் திருமண வீடுகள் கொச்சி பல்புகளால் அலங்கரிக்கப்பட்டாலும் புடைவைப் பந்தலின் அலாதி இருப்பதில்லை. என்றாலும் இந்த விசயத்தினால் உம்மா ரொம்பவே கவலைப்பட்டிருந்தாள். வாப்பா இது பற்றி மூச்சு விடவில்லை.அவரை முதிர்ச்சியானவர் என்று சொல்வதை விடக் கடந்து விடுபவர் என்று சொல்வது தான் சாலவும் பொருத்தம்.

மாமா மேலும் வளரத்தொடங்கினார். அவர் வீடு இருந்த நாற்சந்தியில் பாடசாலை,பள்ளிவாசல்,ஹோட்டல்கள்,சில்லறைக் கடைகள் என்பனவும் வளரத்தொடங்கின. அந்த வீதியின் நேராகவே சென்றால் கடற்கரை வந்துவிடும்.அங்கே தான் ஒவ்வொரு பின்னேரங்களும் மாமாவின் பொழுது கழியும்.கிழங்குப் பொரியலும்,இஞ்சிப் பிளேன்டியும் அங்கே அமுதமாக இருக்குமென்பார்.எப்போது பார்த்தாலும் அரசியல் தான்.கிட்டத்தட்ட அந்த நாட்களில் பிரபல்யமான ஒரு அரசியல்வாதியின் நிதி வழங்குனராகவும் மாமா இருந்தார். தொண்ணூறாம் ஆண்டு பள்ளிவாசல் படுகொலையின் போது இருவரும் சேர்ந்து வேலை செய்து மக்களின் வாக்குகளைச் சம்பாதித்துக் கொண்டார்களாம்.மூத்தம்மா சொல்லியிருக்கிறாள். இப்போது இரவில் வீட்டைப் பாதுகாக்க இரண்டு காவலர்களும் நிறுத்தப்பட்டிருந்தனர். மாமியின் முகத்தில் மேலும் பளபளப்புக் கூடியது.மச்சி காரிலேயே பாடசாலைக்குப் போனாள்.வீடு முழுக்க ஆட்கள் நிறையத் தொடங்கினர். கண்ணாடியில் இப்போது மாமாவின் கணக்கு மேசையில் புதிதாக வேறு சில லெட்ஜர்கள் குவிந்திருந்ததைக் காணமுடியும்.அவர் புதிதாக ஆரம்பித்திருந்த இரண்டு துணிக்கடைகளினதாக இருக்கலாம்.

ஒருவழியாக எனக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்ததும் மாமாவிடம் கூறினேன்.'வீடு இருக்கிற நிலமைல படிப்பு தேவதானா? அஞ்சு,ஆறு வருசம்னு இழுத்தடிப்பானுகள்'

பெண்கள் படிப்பதால் புனிதம் ஒன்றும் பிறந்து விடுவதில்லை என்பதுவே அவருடையதும் மச்சியினுடையதுமான கருத்து.தோளிலே ஹேண்ட் பேக்கைப் போட்டுக்கொண்டு என் மகளின் ஆங்கில வகுப்புக்காக இன்னொருத்தியின் காலிலேயே போய்க்கிடக்க வேண்டும் என்ற மனநிலை வகையறாக்களில் இருந்து விடுபட்ட நான் விடாப்பிடியாகப் படிக்கத் தயாராகினேன்.
இரண்டு வருடங்கள் வேகமாக முடிவடைந்தன.

மாமாவின் வீட்டில் அரிசி மூட்டைகள் இருந்த இடம் காலியாக இருந்தது.மச்சானும் உழைப்பதற்குத் தகுதியில்லாதவராகி விட்டார்.இரவில் கடற்கரையில் சோடாவுடன் ஏதேதோ கலந்து குடிப்பதால் பெரிய இடத்துப் பெண் அடிக்கடி அவரை ஓங்கி அறைய எத்தனிப்பதாகவும் கேள்விப்பட்டேன்.மாமி பெரும்

அழுகையை அடக்கியபடி நகைகளை பேங்கிற்கு கொடுத்திருந்தாள்.வீட்டிலிருந்த ஒளி குறையத் தொடங்கியது.காலத்தின் கால்நடை முன்பை விட வேகமாக அழுக்குத் தோய்ந்த நதிகளை கடலுக்குள் அமுத்திக் கொண்டிருந்தது.'பைத்தியக்காரன் வாய மூடிக்கிட்டே இவ்வளவு வட்டிய வாங்கிருக்கான்.வட்டி வாங்கின யாரு நல்லா இருக்கா.இந்த மனிசன் எங்க நாம சொல்றதக் கேக்காறு.கலியாணம் முடிச்ச காலத்துக்கு ஆக்கிப் போட்டது தான் மிச்சம்'
மாமி புலம்புகிறாள்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு மாமியின் சமையலறை வெறிச்சோடிக் கிடந்தது.பழைய பளபளப்பைத் தக்க வைக்க மாமி கிறீம் பூசுகிறாள் எனத் தெரிகிறது.மாமா கணக்கு மேசைக்கு முன்னே கிடக்கும் சாய்மனைக் கதிரையில் முகட்டைப் பார்த்தபடி தூங்கிக் கொண்டிருந்தார்.

அவ்வளவு பாவமாகவோ, பரிதாபமாகவோ தெரியவில்லை.தூரிகைகள் உடைந்த காகிதங்களின் வெண்மை அவரிடம் படர்ந்திருந்தது.இப்போது சட்டபீட மாணவியைக் கண்ட சாட்சியங்கள் தீர்க்கமான குற்றவாளியாக இருந்தார்.முதல் இப்படி இருந்ததில்லை. நான் கதவைத் திறந்து மாமாவின் வீட்டிற்கு போனேன். மாமாவின் முன் கதிரையைப் போட்டு அமர்ந்தேன். மழை தூற ஆரம்பித்தது.இனி வெளியே இருக்கும் மாமரம் சரியுமளவிற்கு இடி முழக்கம் வரலாம்.பின் நடந்தவை எனக்கு ஒன்றும் உரையாடலாகத் தெரியவில்லை என்பதால் அதை ஒருவகையாகவே சொல்லத் தோன்றுகிறது.

மாமா: எப்ப படிப்பு முடியும்?

«ரொம்ப சுருக்காவே»

மாமா:காலம் ஓடிட்டு.வட்டி,கடன்னு எல்லாம் சமாளிக்கலாம் என்டு நெனச்சன்.ஒத்தர்ட கதையும் கேக்கவும் நேரமிருக்கல

«ம்ம்...»

மாமா:அண்டைய கடன முடிச்சா சரி.ஒன்டு மாறி ஒன்டு வாங்கி அண்டைய வட்டியக் குடுத்தா சரி.நித்திரை போகும்.இல்லாட்டி பைத்தியக்காரன் போல முழிச்சிக்கிட்டே இருப்பன்.சீனி கூடிடும்.

«ஒருநாள் தூக்கத்துக்காக ஒட்டுமொத்த நிம்மதியையையும் அடகு வச்சிருக்க தேவல்லயே. இப்ப தலைக்கு மேல கடன்.சுத்தி யாருமில்ல. மில்லையும் கொடுத்தாச்சி.JK றைஸ் மில் என்டா எல்லோருக்கும் உங்களத்தான் ஞாபகம் வரும்»

மாமா:இவளோட தங்கச்சி மாரு மூணு பேருக்கு ஊடு கட்டிக் கல்யாணம் முடிச்சுக் குடுத்திருக்கன்.இவகட உம்மாக்கு இருக்க வசதி செஞ்சிருக்கன்.இவகட நாநாட மகளுக்குக் கிணறு,வேலி எல்லாம் அடிச்சுக் கொடுத்த நான் தான்.இப்ப நாயென்டும் கணக்கில்ல.

«ம்ம்.....»
உம்மா பக்கத்தில் அமைதியாக இருந்தாள்.

மாமா:எல்லாம் அவசரமாவே முடிஞ்சு.சீனி என்னத் தின்னுட்டு.ரெண்டு கிட்னி வேற பழுதாகிட்டு,கண் தெரியல.பாதி நடப்பிணம்.இதுக்குள்ள உன்ட சின்ன மச்சானுக்கு இருபத்திமூன்றாம் வயசிலயே கல்யாணம் கேக்குது

«இப்ப கல்யாணத்துக்கு என்ன அவசரம்.பொம்புளப் புள்ளைகளே வயசாகித்தான் முடிக்காளுகள்.எல்லாம் கூட இருக்கிறவனுங்க படுத்துறபாடு.தங்கச்சி ஒருத்தி இருக்காள் வா»

மாமா:அவருக்கு கூட இருக்குறவங்க எல்லாருக்கும் பேசி வச்சாச்சி.விடிய விடிய ஃபோனிலயே குடும்பம் நடத்துறானுங்க.வெள்ளிக்கிழமையானா பொண்டாட்டி மாற ஏத்தித் திரியிரதும், வெளிநாட்ல போன் பேசுறதும் தான் கல்யாணம் இவனுகளுக்கு.என்ட தல எழுத்தப் போல கடசி வரைக்கும் அன்புன்னா இன்னதுன்னு தெரியாமலேயே சண்டையோடையும் மல்லுக்கட்டிக்கிட்டும் வாழ்ந்துட்டு போய்டுவானுங்க.

«ம்ம்...»

மாமா:யார்லயும் எனக்கு நம்பிக்கை இல்ல. இப்போதைக்கு சின்னவள உன் தம்பிட கைல பிடிச்சிக் குடுத்தா சரி.மௌத்துட கவல குறஞ்சிடும்.

«சரிவராது மாமா.நான் அதுக்கு உடமாட்டன்.அவன் வேற யாரையோ விரும்புறான்னும் கூட்டாளிமாருக்குள்ள சொல்றாங்க.இனி அவன் டொக்டர் என்டதால படிச்ச புள்ளயத்தானே முடிச்சுக் குடுக்கனும்» எவ்வளவு படித்திருந்தாலும் ஏதோவொரு சீரியல் கில்லரின் குரூரமான புத்தி என்னுள் இருந்தது. பழைய ஏமாற்றம்,ஏக்கம் என்பன முதல்முறையாகப் பழி தீர்க்க வேகமாகப் புறப்பட்டு இருந்தன.பக்கத்தில் இருந்த உம்மா என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அடுத்த ஆறுமாத விடுமுறைக்கு வீடு வந்த போது மாமாவை பார்க்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டேன்.இந்தச் சந்திப்பிற்கு என்ன பெயர் வைப்பது என்று விளங்கவில்லை.நேரம் இரவு எட்டு மணி.மாமா கட்டிலில் தலை குனிந்தபடி இருந்தார். பேச்சு வரவில்லை.கை-கால்கள் உதறல் எடுத்திருந்தன. சுவாசம் இழுத்து இழுத்து மிகச் சிரமத்திற்கு மத்தியில் வெளிவந்தது.கைகளைப் பிரார்த்தனை செய்வது போல உயர்த்தியிருந்தார்.

மொத்தமாக நாங்கள் பன்னிரண்டு பேர் அவரைச் சூழ இருந்தோம்.அவர் மரணிக்கும் வரை எண்ணிக்கை மாறவில்லை.முதலில் சின்ன மச்சான் மருந்து வாங்கிவரப் போனதும் வாப்பா சேர்ந்து கொண்டார். பின்னர் வாப்பா போனதும்,மாமாவின் நண்பர் இணைந்து கொண்டார்.
வாப்பா,மச்சான்மார்,அவரின் பால்ய கால நண்பர்கள் யாரையும் நிமிர்ந்தும் பார்க்கவில்லை.நேரம் கடந்து கொண்டேயிருந்தது.

«ரெண்டு நாளா ஒன்னும் தின்னல.இரணமே இறங்கல» மாமி காதினுள் கிசுகிசுத்தாள்.நான் கைகளை அகலவிரித்து இருந்தேன்.மாமா மெதுவாகத் தலை நிமிர்ந்ததும் ஆண்களெல்லோரும் பேச ஆயத்தமாகினர். மாமா உதடுகளை நீட்டி என்னிடமே பசிக்கிறது என்றார். உடனே ஒரு சிறிய உணவு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது.ஆப்பிள்களைத் துண்டாக மச்சி வெட்டினாள்.நான் போத்தலில் இருந்த பால் கோப்பியை ஒரு பெரிய பரிசுத்தமான கோப்பையில் ஊற்றினேன். மச்சான் மாமாவின் பிரியமான உணவான அப்பமும்,மாசிச் சம்பலும் தட்டில் வைத்தார்.உம்மா என்னையே கொடுக்கும்படி கேட்டுக்கொண்டாள்.ஒரு துண்டு அப்பத்தையும்,பால் கோப்பியையும் அவர் முன் வைத்தேன்.

இப்போது இடது கை நெஞ்சத்தை நோக்கி உள்ளது. அவரது வலது கை குசினியறையை நோக்கி இருந்தது. அதில் பெருவிரலும் ஆட்காட்டி விரலும் மச்சியைச் சுட்டிக்காட்டுகின்றன.அவள் சமையலறையில் கழுவிய பாத்திரங்களைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.தன் மகள் தொடர்பான அவர் இறுதிப் பிரார்த்தனைக்கு நான் செவி சாய்க்கவில்லை.பதில் கூறவும் இல்லை. எல்லோருக்கும் என் மீது அச்சம், ஆச்சரியம், கோபம், நம்பவியலாத் தன்மை, மறுப்பு, ஐயம்... போன்ற பல உணர்வுகள் வெளிப்பட்டது.எனக்கு மௌனம் போதுமானதாகவிருந்தது.அடிமன வெளிப்பாட்டியம் தோற்றுப்போக அப்படியே கட்டிலில் சாய்ந்தார். பிறகு அவர் எழும்பவே இல்லை.

இரண்டு நாட்கள் கழிந்தது. பூமி கொஞ்சம் காய்ந்திருந்தது. அனைவரும் கண்ணைக் கசக்கிக் கொண்டிருந்தனர். சிலர் என்னைப்போல் புகைந்து கொண்டிருந்தனர். விடிந்ததும் பள்ளிவாசலில் மரணச் செய்தியை அறிவித்தார்கள்.இன்னாரது மாமா என என் பெயரும் கூறப்படுகிறது.என் வார்த்தை அவரைக் கொன்றிருக்கலாம் எனப் பலர் பேசிக் கொள்வது கேட்கிறது.ஆனாலும் உம்மா தெளிவாக இருந்தாள். வந்திருந்த ஆட்கள் மெல்லமாகக் கலைந்தார்கள். உள்ளறையில் கூடியிருந்த பெண்கள் எனக்குச் சாதகமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.உம்மா திடீரென எழுந்தாள்.அவள் வெளிச்சமாகி இருந்தாள்.

«என்ன நடந்தாலும் என்ட புள்ளக்கி என்ட தம்பிட மகளத்தான் முடிப்பன்» என்கிறாள்.நான் அவளைச் சற்றும் நிமிர்ந்து பார்க்கவில்லை.

மாமா வேறு இடத்திற்குச் சென்று விட்டார்.உண்மையில் மாமாவினுள் இருந்த தீமைகளை மேய்க்கும் இடையனை அல்ல மாமா என்ற உடலையே தண்டித்து இருக்கிறேன்.மரணத்தின் வலி,தொய்வு,இழப்பு என்பதை விட முன்னாடி எனக்கு நேர்ந்தவைகளைத் தூக்கிப் பிடித்திருக்கிறேன்.

ஒரு படிக்காத மர்யத்திடம் மரணம் பற்றிய கருணை இருந்தது.மர்யத்திடம் கட்டிலில் மூச்சுத்திணறத் திணற கடைசிப் பால்கோப்பியும் குடிக்காத நாவொன்றினை மன்னிக்கும் கர்ப்பப்பை இருக்கிறது.அவள் ஆடு-குதிரையைச் சேர்ந்தவள்.மர்யம் எல்லாப் பெண்களிலும் மேன்மை பெற்றவளாக இருக்கிறாள்.இதனாலேயே மர்யம் தேர்ந்தெடுக்கப்பட்டவளாய் இருக்கிறாள்.

«மர்யமே சொல்லியாச்சு இனி என்ன» என்பதுபோல இருந்தாலும் எல்லோருக்கும் என் மீதான பயம் இருந்தது.ஆனால் நான் மௌனமாக எழுந்து போகிறேன். எனக்கு அந்தக் கண்ணாடியில் என்ன தெரிகிறது என்பதை பார்க்க வேண்டும் போல இருக்கிறது.

நிலைக்கண்ணாடியை யாரோ துடைத்து வைத்திருந்தார்கள்.என் புதிய கண்களில் இப்போது மேசை தெரிகிறது.மாமாவின் கிறிஸ்தவ நண்பரொருவரும்,வாப்பாவும் கடன்காரர்களையும்,அவர்களது மனதையும் இந்த மரணம் என்ன செய்யப்போகிறது என்பதைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பக்கத்திலே மாமாவின் நண்பர் தன் மகளுக்குப் பிறந்தநாள் பரிசாக வாங்கியிருக்கும் மேரி மாதாவின் புகைப்படமும் இருக்கிறது.

•

மலையக இலக்கியமும் வரலாறு எழுதியலும்:

மலையக நவீன இலக்கிய வரலாற்றாக்க எழுத்துக்கள்

சுதர்சன் செல்லத்துரை

(தமிழ்நாடு, திண்டுக்கல், காந்திக்கிராம கிராமியப் பல்கலைக்கழகத்தில் 08.09.2017 அன்று நடைபெற்ற 'இலங்கை மலையகத் தமிழ் இலக்கியம்' எனும் சர்வதேச மாநாட்டில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் செல்லத்துரை சுதர்சன் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கமான எழுத்து வடிவம்)

அனைவருக்கும் வணக்கம்.
இலங்கை மலையக இலக்கியம் தொடர்பான முதலாவதும் வரலாற்று முக்கியத்துவம் மிக்கதுமான இந்தச் சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த வாய்ப்பினை நல்கியோருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1948ல் இலங்கை அரசு பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய மலையகத் தமிழருக்கு எதிரான குடியுரிமைச் சட்டத்தினால் குடியுரிமையும் பதவியும் ஒருங்கே இழந்த, மலையக இலக்கியத்தின் அடிப்படை அடையாளமான சி.வி.வேலுப்பிள்ளை அவர்கள், பாராளுமன்றத்தில் கூறிய கூற்றொன்றை, அறிஞர் எம்.ஏ.நுஃமான் மலையக இலக்கியம் பற்றிய தனது ஆய்வொன்றில் அண்மையில் வெளியிட்டார். சி.வி. வேலுப்பிள்ளையின், வராலாற்று முதன்மைமிக்க அக்கூற்றினை மீளவும் இங்கே கூறி எனது உரையை ஆரம்பிக்கலாம் என்று எண்ணுகிறேன்.

'சபாநாயகர் அவர்களே எனது மூதாதையர் 85 ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டுக்கு வந்தார்கள். நான் இந்தியாவுக்குப் போனதே இல்லை. நான் பாக்கு நீரிணையைக் கடந்ததே இல்லை. இந்த நாட்டின்மீது எனக்குள்ள பற்று பிரதம மந்திரியின் பற்றை விடக் குறைந்ததல்ல. ஆனால், இங்கு ஒரு வேறுபாடு உண்டு. நான் இந்த நாட்டின் அருவிகளை, மலைகளை, மரங்களை, புற்களை நேசிக்கிறேன். ஆனால், கௌரவ பிரதமர் அவர்கள் இந்த நாட்டின் வளங்களை, அதிகாரத்தை நேசிக்கிறார். அதுதான் வேறுபாடு.'

இலங்கை நாட்டின் அருவிகளை, மலைகளை, மரங்களைப், புற்களை நேசித்த, 'இங்கெவர் வாழவோ தன்னுயிரீந்த' மலையகத் தோட்டத் தொழிலாளரின் வாழ்வுதான் மலையக இலக்கியம். துயரம் தோய்ந்த அந்த மக்களது இலக்கியங்களின் வரலாறுதான் மலையக இலக்கிய வரலாறு. இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு என்ற பெருநதியின் கிளை நதியாக விளங்குவது மலையக இலக்கிய வரலாறு. மலையகம் என்ற அடையாளத்தை இலங்கையின் ஏனைய சமூகத்தினருக்கும் இலங்கைக்கு அப்பால் பிறநாட்டவருக்கும் தெரிவிப்பதிலும் பிரதிநிதித்துவம் செய்வதிலும் மலையக இலக்கியமே பெரும்பங்கு வகிக்கிறது. இத்தன்மைவாய்ந்த மலையக இலக்கியங்களின் வரலாற்றாக்க எழுத்துக்கள் பற்றியதாக எனது உரை அமைகிறது.

அந்தவகையில் மலையக இலக்கியம் தொடர்பான வரலாற்றாக்க முன்னோடி முயற்சிகளை இனங்காண்பதையும் அம்முன்னோடி முயற்சிகளில் நிரப்பப்படாத இடைவெளிகளை அடையாளம் காண்பதையும் வரலாற்றாக்க முயற்சிகளில் ஏற்படும் பிரச்சினைகளை அடையாளம் காண்பதையும் வரலாற்றாக்கத்திற்கான கருத்துநிலை அடிப்படையைக் கண்டுதெளிவதையும் இங்கு அதிகம் முதன்மைப்படுத்த விரும்புகிறேன். மலையக இலக்கியம் தொடர்பாக வெளிவந்த வரலாற்றாக்க முயற்சிகள் மலையக இலக்கிய வரலாறெழுதியலுக்கு உகந்தவை என்ற கருதுகோளைப் பரீட்சிப்பதாய் அமையும் எனது இவ் ஆய்வுரை மலையக இலக்கியம் தொடர்பாக வெளிவந்த வரலாறுசார் கட்டுரைகள், நூல்கள் ஆகியவற்றை எல்லையாக வரித்துக்கொள்கிறது.

இலக்கியம் : வரலாற்றாக்கமும் வரலாறும்

'வரலாற்றாக்கம் என்பது வரலாற்றை எழுதும் செயற்பாடு அல்லது அச் செயற்பாட்டைப் பற்றிய ஆய்வு' என்பார், ஜான்.எச்.அர்னால்டு (2005:6) பொதுவாக 'வரலாற்றாக்கம்'என்பதில் 'வரலாற்றை எழுதும் செயற்பாடு' 'வரலாற்றை எழுதும் செயற்பாட்டைப் பற்றிய ஆய்வு' எனும் இரு நிலைகளையும் அவதானிக்க முடியும். 'இலக்கிய வரலாற்றாக்கம்' என்பது இலக்கிய வரலாற்றாசிரியனின் கருத்துநிலை சார்ந்த ஓர் ஆய்வுச்செயற்பாடு. இந்த ஆய்வுச் செயற்பாட்டின் விளைவுதான் **'இலக்கிய வரலாறு'.**

இறந்தகாலம் பற்றிய எழுதுகை மட்டுமன்று வரலாறு, மாறாகப் பொதுப்புத்தியைக் கேள்விக்குள்ளாக்கி, தருக்கத் துணை கொண்டு பிரதிகளோடும் பிரதிகள் மீதான உரையாடல்களோடும் மாறிப் பயின்று வரும் அரசியல், சமூக, பண்பாட்டுக் கூறுகளோடும் சிந்தனா ரீதியான ஊடாட்டம் கொள்வதால் நிகழ்வது.

இலக்கியப் பிரதிகள், பிரதிகளின் இடைவெளிகள், சிக்கல்கள், முரண்பாடுகள், நிச்சயமற்ற பகுதிகள் முதலியவற்றைக் கண்டுகொள்ளல், அழகியல் விபத்தாக அமையும் பிரதிகளை அடையாளங்காணல், தவறாகப் புரிந்து கொள்ளலில் இருந்து ஆரம்பித்துச் சரியானவற்றைக் காணவிளைதல், கிடைக்கும் சான்றுகளைச் சார்ந்து இருக்காமல் அவற்றின் உண்மைத் தன்மையைச் சார்ந்திருத்தல், இலக்கியப் பிரதியிலிருந்து இலக்கிய வரலாற்று எழுத்துக் கையாளுகையை வேறுபடுத்துதல் முதலியவை இலக்கிய வரலாற்றாக்கச் செயற்பாட்டுக்கு அவசியமானவை.

பெருங் குழப்பமும் ஒழுங்கின்மையும் சிக்கலும் நிறைந்த கடந்த காலத்திலிருந்து ஆர்வமூட்டக்கூடிய பயன்மிகு உரையாடலை, அர்த்தத்தை இலக்கிய வெளியில் உருவாக்கும் கரிசனை மிக்க செயற்பாடாக இலக்கிய வரலாற்றாக்கம் விளங்குகிறது.

வரலாறு மற்றும் வரலாற்றாக்கம் பற்றிச் சிந்திப்பதும் உரையாடுவதும் புலமைவெளியில் என்றும் நிகழும் பயன்மிகு செயற்பாடு. இலக்கிய வரலாற்றைக் கட்டமைப்பதற்கு மாத்திரமன்றி இலக்கியப் பரப்பில் மாற்றங்களுக்கான செயற்பாடுகளை முன்னெடுக்க இச்சிந்திப்பு முயற்சி பெரிதும் உதவும். இலக்கிய வரலாற்றாக்கம், வரலாறு பற்றிய இத்தகைய அடிப்படைப் புரிதல்களோடு மலையக நவீன இலக்கிய வரலாற்றை எழுதுதல் பற்றிய கருத்துநிலை அடிப்படை பற்றி நோக்கலாம்.

மலையக நவீன இலக்கிய வரலாற்றை எழுதுதல் - கருத்துநிலை அடிப்படை

ஈழத்துத் தமிழ் நவீன இலக்கிய வரலாற்றின் பிரதான கடமையென்பது புத்தகங்களையும் ஆசிரியர்களையும் ஆண்டுவாரியாகப் பட்டியலிடுவதல்ல. மாறாக, இலக்கியத்தின்வழி வெளிப்படும் மனித வரலாற்றினை - அந்த மனித வரலாற்றை எடுத்துரைக்கும் இலக்கியத் தன்மையைக் கண்டடைவதே. உருவ உள்ளடக்கத் தேடுதலை மட்டுமே எட்டும் இலக்கிய வரலாறுப் பிரதிகளால் புதியவற்றை என்றும் காணமுடியாது. ஈழம் என்ற பெரும் பண்பாட்டின் தனித்தன்மை மிக்க உப பண்பாடுகளாக உரையாடத் தோன்றிய ஈழத்து நவீன இலக்கியம் தொடர்பான பிரதேச அலகுகளை மையப்படுத்திய இலக்கியக் கருத்தியலும் இலக்கிய வரலாற்றுப் பிரதிகளும் அவற்றின் தொடர்ச்சியான உரையாடல்களும் அவ்வாறு நிகழாமல் குறுகிய பிராந்தியவாதநிலையை எய்தின. எனவே சிறுபான்மை இனங்களின் இலக்கிய வரலாறு பற்றிச் சிந்திப்பதற்குப் புதியதொரு கருத்துநிலை அடிப்படை அவசியமாகிறது. மலையகத் தமிழர் சுமார் இருநூறு ஆண்டுகால வராலாறு உடையவர்கள் எனில் மலையக இலக்கிய வரலாறு அதைவிடவும் மிகக் குறைந்தளவு காலப்பகுதியைக் கொண்டது. கோப்பிக் கிருஷிக் கும்மி (1869) மலையகத்தின் முதல் இலக்கியம் எனக் கொண்டால் மலையக இலக்கிய வரலாறு இற்றைவரையும் கிட்டத்தட்ட ஒன்றரை நூற்றாண்டு காலத்தைக் கொண்டது எனலாம். காலப்பகுதி சிறிதெனினும் தமிழ் இலக்கியத்தில் பேசாப்பொருளைப் பேசும்படியான புதிய பொருண்மையையும் அழகியல் அனுபவத்தையும் வழங்கியவை என்றவகையில் அவை முக்கியமானவை. எனவே அவ் இலக்கியங்களின் வரலாறு திடமான கருத்துநிலைத் தெளிவுடன் எழுதப்படவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றன. ஏனெனில், அது தனியே இலக்கியங்களின் வரலாறு மட்டுமன்று. அது அந்த இலக்கியங்களிற்கு ஆதாரமான மக்களின் வரலாறு. அவர்களது பண்பாட்டின் வரலாறு. அவர்களின் அரசியலின் வரலாறு. அவர்களின் அலைவும் உலைவும்கொண்ட வரலாறு.

'மலையகம்' என்பதை ஒரு பிராந்தியமாகக் கொள்ளாது அதனைக் கருத்துநிலை அடிப்படையில் தெளிந்து கூறிய ஆய்வாளருள் எம்.ஏ.நுஃமான், சாந்திகுமார் ஆகியோர் முக்கியமானவர்கள். எஸ்.சாந்திகுமார் 'மலையகம் - சில குறிப்புகள்' என்ற கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'மலையகம் என்பது ஒரு குறிப்பிட்ட புவியியல் எல்லையை அன்றி குறிப்பிட்ட உற்பத்தி முறையை (பெருந்தோட்டத் துறையைச்) சார்ந்து வாழ்கின்ற ஒரு

சமூகத்தின் இருத்தலை, ஒரு தேசிய சிறுபான்மை இனத்தின் எழுச்சியைக் குறிக்கிறது.'(1980:36)

ஏம்.ஏ.நுஃமான் இலக்கியம் மற்றும் வரலாற்றுநிலை நின்று பின்வருமாறு கூறுகின்றார்.

'மலையகத் தமிழர் என்பது யாழ்ப்பாணத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர் என்பது போன்ற பிராந்திய அடையாளம் அல்ல. பிரித்தானியர் காலத்தில் பெருந்தோட்டத்துறையில் உழைப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட இந்தியத் தமிழர்களின் இன்றைய சந்ததியினரையே அது குறிக்கும். மலையகத்துக்கு வெளியேயும் கணிசமான அளவு மலையகத் தமிழர் வாழ்கின்றனர். அவ்வகையில் அது முற்றிலும் ஒரு இனத்துவ அடையாளம் ஆகும்.'(2017:5)

மேற்குறித்த ஆய்வாளர் இருவரது கருத்தும் 'மலையகம்' என்பதற்கு இனத்துவ அடையாளத்தைத் தெளிவுற வரையறை செய்கிறது. பிராந்திய எல்லை நீக்கிய இந்தக் கருத்தாக்கம் பன்மைத்துவமான ஈழத்துச் சமூக அரசியல் மற்றும் இனங்களின் வரலாற்றில் முக்கியமான ஒன்றெனப்படுகிறது. இவ்வாறு கொள்ளும்போதுதான் இலங்கையின் அரசியல் தொடக்கம் பண்பாடுவரையான அனைத்துக் கூறுகளிலும் 'மலையகம்' என்பதற்கான முக்கியத்துவத்தை அவதானிக்க முடியும். அது மட்டுமன்றி இனத்துவ அடையாளம், அந்த அடையாள இருப்புக்கான போராட்ட அரசியல் முதலாயவற்றைத் தேசிய இனம் எனக் கருதி உரையாடல்களை மேற்கொள்ளவும் முடியும். ஆகையால்தான் மலையகம் என்பதற்கான இந்த இனத்துவ அடையாளம் தொடர்பான கருத்தாக்கம் முதன்மையானது.

இனத்துவ அடையாளம் என்றால் என்ன என்பதை எம்.ஏ.நுஃமான் பின்வருமாறு கூறுவார்.

'இனத்துவ அடையாளம் என்பது ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவின் சமூக, பொருளாதார, பண்பாட்டு, அரசியல் நலன்களின் அடிப்படையில் தம்மை வேறு சமூகக் குழுவினரிலிருந்து வேறுபடுத்தி அடையாளப்ப டுத்துவதைக் குறிக்கும். இச் சமூகக் குழு மரபினம், தேசியம், மொழி, மதம், நிறம் போன்ற ஏதாவது ஒன்றைச் சார்ந்ததாக இருக்கலாம். சில குறிப்பிட்ட சமூக வரலாற்று நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இந்த அடையாள உருவாக்கம் நிகழ்கின்றது.'(2017:1)

இக் கூற்றிற்கொப்ப 'மலையகம்' என்ற இனத்துவ அடையாளமும் காலனிய காலத்திலிருந்து இற்றைக்காலம் வரையான மலையகத் தமிழரின் சமூக வரலாற்று நிபந்தனைகளின் அடிப்படையில் உருவான ஒன்றுதான். காலனிய ஆதிக்கத்துடன் அது தொடங்குகிறது எனினும் பின்காலனிய காலத்திலேயே அது தீவிரத்தன்மையடைகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுச்சியடைந்த இந்து, இஸ்லாமிய, பௌத்த மறுமலர்ச்சி இயக்கங்கள் தாம் தோன்றிய சமூகங்களின் மத்தியில் அரசியல் தன்மைகொண்ட இனத்துவ அடையாளத்தை உருவாக்குவதில் தீவிரமாகச் செயற்பட்டதெனினும் இவை மலையகத்தவரை உள்ளடக்கியதாக நிகழவில்லை என்பதே கசப்பான வரலாற்று உண்மையாகும். இருபதாம் நூற்றாண்டில் இலங்கையின் அரசியல் அரங்கில் நிகழ்ந்த யாப்புச் சீர்திருத்த முயற்சிகளும் புதிய தேர்தல்முறை அறிமுகங்களும் சிறுபான்மையினருக்குப் பாதகமான சட்டமன்ற முடிவுகளும் கட்சி அரசியலின் தீவிரமும் தொழிற் சங்க அரசியற் பங்கேற்பும் இன்னும் இவை போன்ற பலவுமே மலையகத் தமிழரின் இனத்துவ அடையாளத்தை வலுப்படுத்தி வளர்க்கும் காரணிகளாய் அமைந்தன.

மலையகம் என்ற இனத்துவ அடையாளம் மலையகத் தமிழரின் தனித்துவத்தைக் காட்டுவதேயன்றி அவர்களைத் தனித்துக் காட்டுவதல்ல. அது பன்மைத்துவம் மிக்க இனத்துவ சமூக அரசியல் சூழலையும் உள்ளடக்கிய ஒரு தனித்துவநிலை என்பதை மறந்துவிடக் கூடாது. எம்.ஏ.நுஃமான் அவர்களின் பின்வரும் கூற்று இங்குநோக்கத்தக்கது.

'இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம் தமிழர் எனும் தனித்துவமான மூன்று இனக்குழுமத்தினாலும் இலங்கையில் தமிழ்மொழி தாய்மொழியாகப் பேசப்படுகிறது. அவர்களுக்கேயுரிய சில கிளைமொழி வேறுபாடுகளையும் நாம் அவதானிக்கலாம். இந்த மொழி வேறுபாடுகளும் இனத்துவத் தனிப் பண்புகளும் வேறுபட்ட பண்பாட்டு அரசியற் கூறுகளும் இவர்களின் இலக்கியப் படைப்புக்களிலும் வெளிப்படக் காணலாம். அவ்வகையில் இனத்துவ அடிப்படையில் பிளவுபட்ட சமகால இலங்கையில் தமிழ் இலக்கியம் என்று பேசும்போது இச் சொல் ஒரு பல் - இனத்துவ சமூக அரசியற் சூழலையும் உள்ளடக்குவதைக் கருத்திற்கொள்ள வேண்டும்.' (2012:74)

எனவே மலையகத் தமிழ் இலக்கியம் என்பது கருத்துநிலை அடிப்படையில் இனத்துவ அடையாளத்தின் வெளிப்பாடே. மலையக அரசியல் மற்றும் பண்பாட்டைத் தமது இனத்துவ அடையாளமாகக் கொண்டு தமது இருப்பியல் பேசும் மலையகத் தமிழரின் மொழிவழி வெளிப்பாடுகளாக மலையகத் தமிழ் இலக்கியங்கள் அமைந்தன.

பல்லின பண்பாட்டைக் கொண்ட இலங்கையில் சிறுபான்மைச் சமூகத்தினருக்கு அவர்களது இலக்கியம் பற்றிய வரலாறு ஏன் அவசியமானது என்ற வினா இங்கு முக்கியமானது. அந்த வகையில் மலையக இலக்கிய வரலாறு மலையகத் தமிழரது வரலாற்றில் பெறும் முக்கியத்துவத்தைப் பின்வரும் மூன்று அம்சங்களாகக்

குறித்துக் கொள்ளலாம்.

1. முதலாவது, மலையக இலக்கிய வரலாற்றால் கிடைக்கும் மகிழ்வூட்டல் ஆகும். மலையகத் தமிழ் இனத்தின் கடந்த காலத்தை அவ் இனத்தின் நிகழ்காலத்திலிருந்து கற்பதிலும் கடந்தகால வரலாற்றின் குறிப்பிட்ட கூறுகளை இலக்கியத்திலே வரலாற்றொழுங்கில் காண்பதிலும் உருவாகும் மகிழ்ச்சி சார்ந்ததாக இது அமையும்.

2. இரண்டாவது, மலையக இலக்கிய வரலாற்றை, மலையகத் தமிழர் எனும் இன வரலாற்றைப் பற்றிச் சிந்திப்பதற்குரிய ஒன்றாகப் பார்ப்பதும் பயன்படுத்துவதுமாகும். மலையகத் தமிழரின் இனத்துவ அடையாளத்தையும் அதன் இயங்குநிலையையும் அதில் உள்ள குறைபாடுகள் மற்றும் விலக்குகளையும் பற்றி ஆய்வறிவு ரீதியாகச் சிந்தித்தலாக இது அமையும்.

3. மூன்றாவது, மலையக இலக்கிய வரலாற்;றை வேறுவிதமாகச் சிந்திப்பது தொடர்பானதாகும். இனத்துவ அடையாளம் கொண்ட மனிதர்களாகவும் அந்த மனிதர்களின் வரலாறாகவும் ஒருமைத் தன்மையில், தூய்மை நிலையில் நோக்காது அடையாளம் என்பதிலிருந்து அடையாளங்களுக்கும் கருத்தியல் என்பதிலிருந்து கருத்தியல்களுக்கும் வரலாறு என்பதில் இருந்து வரலாறுகளுக்கும் செல்லும் மாற்றுச் சிந்தனை பற்றியதாகும்.

வரலாறு அடையாளத்தைத் தருகிறது என்பது வரலாற்றறிஞர் கண்ட முடிவாகும். 'நினைவு என்பது ஒரு மனிதனுக்கு அடையாளம் ஒன்றை அளிப்பது போல வரலாறு நமக்கு அடையாளத்தை அளிக்கிறது' *(2005:174)* என்றார், ஜான்.எச்.அர்னால்டு. எனவே மலையக இலக்கிய வரலாறு 'மலையகம்' என்ற இனத்துவ அடையாளத்தை அளிக்கிறது, வலுவாக்குகிறது, இனிவரும் வரலாற்றிலும் எடுத்துச் செல்கிறது.

மலையக நவீன இலக்கிய வரலாற்றாக்கம்சார் எழுத்துக்கள்.

மலையக நவீன இலக்கிய வரலாற்றாக்கம்சார் எழுத்துக்களை ஆய்வாளர்களும் எழுத்தாளர்களும் எழுதியுள்ளனர். மலையக இலக்கியத்தின் கருத்துநிலை, பண்பாட்டு அம்சங்கள், இனத்துவ அடையாளம் என்பவற்றின் அடிப்படையிலும் இலக்கியத்தின் பொருண்மை மற்றும் அழகியல் அடிப்படையிலும் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் முதலிய துறைசார் பிரிவுகளின் அடிப்படையிலும் ஆளுமைகள் மற்றும் நிறுவனங்கள் அடிப்படையிலும் சிற்றிதழ்கள் மற்றும் பத்திரிகைகள் அடிப்படையிலும் அவர்களது எழுத்துக்கள் அமைந்துள்ளன. மலையக இலக்கியத்தை மலையகத் தமிழர் மட்டுமன்றி மலையகம் சாராத இலங்கைத் தமிழரும் முஸ்லிம்களும் எழுதியது போல மலையக இலக்கிய வரலாற்றாக்க முயற்சியிலும் அவர்கள் மிக்க கரிசனையுடன் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. இதுவரை நடைபெற்ற மலையக இலக்கிய வரலாற்றாக்கம்சார் முயற்சிகள் அனைத்தையும் பின்வரும் நான்கு பிரிவாகக் குறித்துக் கொள்ளலாம்.

(1) மலையக இலக்கிய வரலாற்றைக் கட்டமைப்பதற்கான கோட்பாட்டு அடிப்படையை நல்கும் புலமைசார் எழுத்துக்கள்.[1]

(2) மலையக இலக்கியம் பற்றிச் சிறிய அளவில் இடம்பெற்றிருக்கும் இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பாக வெளிவந்த பொதுநிலைசார் வரலாற்று நூல்கள்.[2]

(3) சிற்றிதழ்களிலும் பத்திரிகைகளிலும் விழா மலர்களிலும் வெளியாகிய மலையக இலக்கியம் தொடர்பான வரலாறுசார் கட்டுரைகள்.[3]

(4) மலையக இலக்கிய வரலாற்றாக்க நூல்கள்.[4]

இவற்றுள் நான்காவது பிரிவான மலையக இலக்கிய வரலாற்றாக்கம்சார் நூல்கள் தொடர்பாகச் சற்று விரிவாக நோக்கலாம். இங்கு முன்னோடியான முக்கிய முயற்சிகள் மட்டுமே கவனத்திற் கொள்ளப்படுகின்றன. அந்தவகையில் க.அருணாசலம், தெளிவத்தை ஜோசப், சாரல் நாடன், அந்தனி ஜீவா, மு.நித்தியானந்தனின் ஆகியோரின் மலையக இலக்கிய வரலாற்றாக்க முயற்சிகளே நோக்கப்படுகின்றன.

மலையக இலக்கிய வரலாற்றாக்கத்தைத் தமது ஆய்வுத்துறைகளுள் ஒன்றாக வரித்துக் கொண்டு செயற்பட்டவர், க.அருணாசலம். மலையக இலக்கியத்துக்குரிய ஆய்வுசார் வெளியையும் உயர்புலமை மட்டத்தில் அதற்குரிய அங்கிகாரத்தையும் தமது ஆய்வுகளின் மூலம் ஏற்படுத்தியவர் அவர். இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றுப் பெருநதியில் ஒரு வளம்மிக்க கிளைநதியாக மலையக இலக்கிய வரலாற்றைப் பெருகச் செய்தவர், அவர். உயர் கல்விநிலையிலும் உயர் ஆய்வுநிலையிலும் மலையக இலக்கியம் அதிகம் அறியப்பட்டது அவரது எழுத்துக்களின் மூலமே என்றால் அது மிகையாகாது. மலையகத் தமிழ் இலக்கியம்*(1994)* என்ற அவரது நூல் மலையக இலக்கிய வரலாற்றாக்கம் சார்ந்த முன்னோடியும் முதலுமான முயற்சியாகும். அந்த நூலுக்கான முகவுரையில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'நீண்டநாள் கனவு!.. இப்பொழுது நனவாகத் தொடங்கியுள்ளது. ஆவல் மீதூரப்பெற்றநிலையில்

இந்த நூலை எழுத முற்பட்டபோதுதான் இதிலுள்ள சிரமங்கள் பலவற்றை உணரமுடிந்தது. இந்நூலை எழுதிக்கொண்டிருக்கும்போது திக்குத் தெரியாத காட்டுக்குள் நின்று தத்தளிப்பது போன்ற ஒரு உணர்வே எனக்கு ஏற்பட்டது. மலையகத் தமிழ் இலக்கியம் பற்றிப் பலர் 'சிதறல்களாகப்' பல கட்டுரைகளை எழுதியுள்ளனர் என்பது உண்மையே. எனினும் இதுவரை எவரும் மலையகத் தமிழ் இலக்கியத்தை முழுமையாகவும் வரலாற்று அடிப்படையிலும் நோக்கி எழுதியதாகத் தெரியவில்லை. அவ்வாறான ஆய்வுகளை முழுமையாக மேற்கொள்வதற்குப் பெரும் இடையூறாக அமைவது மலையகத்தமிழ் இலக்கியங்களைத் தேடிப் பெறுவதில் உள்ள சிரமங்களே. மலையகத் தோட்டத் தொழிலாளர் பற்றி வெளிவந்த ஆக்கங்களுள் ஒரு சிறுபகுதியே நூல்களாக வெளிவந்துள்ளன. பெருந்தொகையான ஆக்கங்கள் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் ஆண்டு மலர்களிலும் துயின்றுகொண்டிருக்கின்றன. கணிசமானவை பிரசுர வசதிக் குறைவுகளால் கையெழுத்துப் பிரதிகளாகவே உள்ளன.'(1994:11-12)

மலையக இலக்கிய வரலாற்றை எழுதப்புகும் முதல் ஆய்வாளருக்குரிய பொறுப்புணர்வையும் அவர் சந்திக்க நேரும் இடரையும் மேற்படிகூற்றுத் தெளிவுறக் காட்டுகிறது.

இவரது இந்த நூல் மலையகத் தோட்டத் தொழிலாளர் பற்றியும் அவர்களது சமூக, பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் அரசியல் முன்னெடுப்புகள் பற்றியும் விரிவாக ஆராய்வதோடு மலையகத் தமிழ் இலக்கியத்தின் தோற்றமும் அதன் வளர்ச்சியும் பற்றியும் ஆராய்கிறது. இன்னும் மலையக நாட்டாரியல் அம்சங்கள், கவிதை, புதுக்கவிதை என்பவை பற்றியும் ஆராய்வதுடன் முக்கியமான இலக்கிய ஆளுமைகளைத் தனித்தும் அடையாளம் காட்டி நிற்கிறது.

இவரது மலையகத் தமிழ் நாவல்கள்: ஓர் அறிமுகம் (1999) என்ற நூல் மலையக நவீன இலக்கிய வரலாறு குறித்த மிகப்பெரிய அளவிலான முயற்சியாகும். மலையகத் தமிழ் நாவல்கள் மலையக வரலாற்றினை அறிந்து கொள்ள உதவும் முக்கியமான இலக்கியநிலைத் தரவுகளாகவும் உள்ளன.

'இந்நூல் மலையகத் தமிழ் நாவல்கள் பற்றிய ஓர் அறிமுகம் மட்டுமே. மலையகத் தமிழ் நாவல்கள் பற்றிய காரசாரமான திறனாய்வோ ஆழ்ந்தகன்ற ஆய்வு நூலோ (பிரபல திறனாய்வாளர்களும் சிறந்த பேச்சாளர்களும் இவ்வாறு துணிவாண்மையுடன் ஒருபோதும் கூறமாட்டார்கள்) அன்று என்பதைப் பணிவுடன் கூறிக்கொள்கிறேன்.'(1999:ii)

என ஆய்வாளரால் குறிப்பிடப்பட்டாலும் மலையக நாவல் வரலாற்றை எழுதுவதற்கு ஆதாரநூல்களில் முன்வரிசைக்குரிய ஆற்றுப்படையாக இது விளங்குகிறது. மலையக நாவலுக்குரிய அடிப்படை அம்சங்களைக் கூறும் இந்நூல் மலையகத் தோட்டத் தொழிலாளர் வருகையும் அதனையடுத்த காலகட்டமும், பிரஜா உரிமைப் பிரச்சினையும் தொழிலாளர் தாயகம் திரும்பவேண்டிய நிர்ப்பந்தமும், தொழிற்சங்க நடவடிக்கைகளும் தொழிலாளர் விழிப்புணர்வும் எழுச்சியும், தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டமையும் தொழிலாளர் எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும், தோட்டத்து அதிகாரிகளின் கொடுமைகளும் தொழிலாளர்களுக்கெதிரான வன்செயல்களும் விளைவுகளும், 1983 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலநிலைமைகள் ஆகியவற்றை மலையகத் தமிழ் நாவல்களை மையப்படுத்தி அலசுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மலையக நாவல் வரலாற்றாக்க முயற்சிகளில் இந்த நூல் ஒரு மைல் கல்.

இவரது இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள் (1997) என்ற முக்கியமான நூலில் மலையகத் தமிழரியல் என்ற பகுதி மலையக இலக்கிய வரலாறு எழுதுவதற்கான பன்முகப்பட்ட அம்சங்களை ஆய்வு ரீதியாகத் தருகிறது. இலங்கையில் மலையகத் தமிழரியல் தொடர்பான விரிவானதும் ஆழமானதுமான பார்வை கொண்டதாக இந்நூல் விளங்குகிறது. பொருண்மை அடிப்படையிலும் காலகட்ட அடிப்படையிலும் மலையகம் தொடர்பான வரலாற்றாக்க முயற்சிகளை அவர் நோக்குகிறார். மலையகம் தொடர்பாக எழுதிய ஆய்வாளர்களைக் கருத்துநிலை அடிப்படையிலும் நிறுவன அடிப்படையிலும் அவர் பகுத்துக் காட்டுவதும் முன்னோடியான வரலாற்று எழுத்து முயற்சிகளை அடையாளங்காட்டுவதும் குறிப்பிடத்தக்கவை.

நிறுவனம்சார்ந்து இயங்காவிடினும் மலையக இலக்கியம் தொடர்பாக நீண்டகாலமாகத் தீவிர கரிசனையுடன் செயற்பட்டு வருபவர், தெளிவத்தை ஜோசப். கருத்தியலும் அழகியலும் ஒன்றிப்பிணையும் வகையில் கதைகளை எடுத்துரைக்கும் மலையகத்தின் முக்கியமான கதை சொல்லியாக மட்டும் இயங்காது மலையக இலக்கியம் பற்றியும் பல கோணங்களில் எழுதியவர், அவர். மலையக இலக்கியம் தொடர்பான அவரது கட்டுரைகள் பலவும் மலையக அரசியல் பண்பாட்டு வரலாற்றுடன் இணைத்து எழுதப்பட்டவை. மலையகச்சிறுகதை வரலாறு (2000) என்ற அவரது நூல் மலையக வரலாற்றாக்க முயற்சிகளில் முக்கியமானது. மலையகச் சிறுகதைப் படைப்பாளிகள் பற்றியும் அவர்களது படைப்புத் திறன் பற்றியும் மட்டுமல்லாது மலையகத் தமிழர் வரலாற்றுடன் சிறுகதைப் படைப்புகளை இணைத்து நோக்கியிருப்பதும்

சிறப்பிற்குரியது. நூலாசிரியர் தனது முன்னுரையில் நூல் பற்றிக் கூறும் ஒரு பகுதி வருமாறு.

'உயிரைப் பணயம் வைத்து ஓடிவந்த இம் மக்களின் உதிரத்தில் தோன்றிய இவர்களுடைய எழுத்துக்கள் பற்றி, இவ் எழுத்துக்களிலும் சிறப்பான இடம் வகிக்கும் மலையகச் சிறுகதை இலக்கியம் பற்றி விரிவாக ஆராய்கிறது இந்நூல். துயரம் தோய்ந்த பன்முக அலைக்கழிப்புக்கள் மத்தியிலும் தங்களை இனங்காட்டிக்கொண்டு தனித்துவத்துடன் நிலை பெற்றுள்ள இந்த மக்களைப்போலவே பலவித இன்னல்களுக்கிடையில் அரும்பி வளர்ந்து மலையகச் சிறுகதைகள் என்று செழுமை பெற்றுநிற்கும் ஒரு இலக்கியத்துறையின் வரலாறு இது.' (1995)

மலையகம் எனும் அடையாளம் : மலையக இலக்கியத்தின் வகிபங்கு (2011) எனும் தலைப்பி;ல் அவர் நிகழ்த்திய நினைவுப் பேருரை ஒன்று வெளியாகியுள்ளது. இது அளவில் சிறியதாயினும் பேசும் விடயத்தால் மிக முக்கியமான நூலாக அமைகிறது. இது கோ.நடேசையரின் காலத்திலிருந்து மலையக இலக்கிய முயற்சிகளைப் பேசுகின்றது. இந்நூலில் இவர் மலையக இலக்கிய விழிப்புக்கும் கலாசார மறுமலர்ச்சிக்கும் உருவம் கொடுத்தவற்றைத் தெளிவாக அடையாளம் காண்கிறார். முக்கியமான மலையக இலக்கிய ஆளுமைகள் பற்றியும் மலையகத்தின் இலக்கிய ஏடுகள் மலையக இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புப் பற்றியும் இச் சிறுநூல் அலசுகிறது. வரலாறு ஒன்று பல வரலாறுகளுக்கு வித்திடும் என்ற வரலாற்றாய்வாளரின் மனப்பாங்கு விருப்பத்துடன்கூடிய எதிர்பார்ப்பாக இவரிடம் காணப்படுவதை இவரின் பின்வரும் கூற்றுப் புலப்படுத்துகிறது.

'மலையகச் சிறுகதை வரலாறு என்ற இந்த நூலின் வரவு, 'மலையக மக்கள் வரலாறு', 'மலையகத் தொழிற் சங்க வரலாறு', 'மலையக இலக்கிய வரலாறு', 'மலையகச் சஞ்சிகை வரலாறு, நாவல் மற்றும் கவிதை வரலாறு என்று மேலும் சில ஆய்வு நூல்கள் வெளிவரத் தூண்டுதலாக இருக்குமேயானால் பெரிதும் மகிழ்ச்சியடைவேன்' (1995)

மலையகத் தமிழர் வரலாறு பற்றியும் அவர்களது இலக்கிய வரலாற்றாக்கம் தொடர்பாகவும் தீவிரத்தன்மையோடு செயற்பட்டவர்களில் சாரல் நாடனும் முக்கியமானவர். சாரல் நாடன் மலையகத் தமிழ் இலக்கியம் தொடர்பாகப் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவரது இலங்கை மலையகத் தமிழ் இலக்கிய முயற்சிகள் (2014) என்ற நூல் மலையகத் தமிழர் வரலாறு பற்றியும் மலையகத்தை மையமாகக்கொண்டு தோன்றிய சிறுகதைகள், பாடல்கள், கவிதைகள், கட்டுரைகள், நாவல்கள், நாடகங்கள் பற்றியும் மலையக இதழ்கள் மற்றும் ஆளுமைகள் பற்றியும் ஆங்கில மற்றும் மலையாள மொழிகளில் மலையக வாழ்வு பற்றியும் விரிவாக எடுத்துரைக்கிறது. மலையக இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (2000) என்ற நூலும் மலையக வரலாற்றாக்க முயற்சியில் முக்கியமானது.

அந்தனி ஜீவா மலையக இலக்கிய வரலாற்றாக்கம் சார்ந்து தொடர்ந்து செயற்பட்டு வருபவர்களில் ஒருவர். அவரது மலையகமும் இலக்கியமும் (1995), மலையகம் வளர்த்த கவிதை (2003) ஆகிய இரு நூல்களும் சிறியனவாக இருந்தாலும் மலையக வரலாற்றாக்கம் சார்ந்த முயற்சிகளில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை. அவரது மலையகமும் இலக்கியமும் என்ற நூல் மலையக வாய்மொழி இலக்கியங்களிலிருந்து நவீனகாலம் வரையான இலக்கிய முயற்சிகள்வரை ஆராய்கிறது. மலையக வரலாற்றுப் பின்னணியில் மலையகக் கவிதைகள், நாவல்கள், சிறுகதைகள், ஆற்றுகைக் கலைகள், பதிப்பகங்கள், இதழ்கள் முதலியவற்றையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் ஆராய்கிறது.

மலையக வரலாற்றாக்கத்தின் புதிய பாய்ச்சலாக அமைந்தது மு.நித்தியானந்தனின் கூலித் தமிழ் (2014) எனும் ஆய்வு நூலே ஆகும். பல்துறைச் சங்கம ஆய்வறிவுப் புலத்தோடும் சர்வதேச அளவில் நடைபெற்ற காலனிய ஆய்வுகளின் துணையோடும் அவற்றுக்கு ஈடாகவும் மலையகம் என்ற இனத்துவ அடையாளத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டும் எழுதப்பட்ட ஆய்வு இது. காலனிய காலத்தில் தமிழகத்திலிருந்து மத்திய மலைநாட்டிற்குக் கூலிகளாகக் கொண்டுசெல்லப்பட்ட இந்திய வம்சாவளித் தமிழர்களின் ஆரம்பகால எழுத்து முயற்சிகளை மிகுந்த ஆய்வுச்சிரத்தையுடன் இந்நூல் வரலாற்றாக்கம் செய்கிறது.

கோப்பிக் கிருஷிக் கும்மியை மலையகத்தில் தோன்றிய முதலாவது எழுத்துப் பிரதியாக இந் நூலாசிரியர் அடையாளம் காட்டுகிறார். காலனித்துவ ஆட்சி நலன்களைப் பெறும் வகையிலும் ஆளப்படும் காலனிய ஆட்சிக் கருத்தை ஏற்றுக் கொள்ளும் நிலையிலும் இக் கும்மியாக்கம் நிகழ்ந்துள்ளதை மட்டுமன்றிக் கோப்பிப் பயிர்க் கை நூலாகவும் மத மாற்று முயற்சிகளின் துணைநூலாகவும்கூட இது விளங்குவதையும் ஆராய்ந்துள்ளார். இந்நூலில் வரும் ஆபிரகாம் ஜோசப் எழுதிய தமிழ் வழிகாட்டி, துரைத்தன அடக்குமுறையும் கூலித் தமிழும், கருமுத்து தியாகராசர்: இந்தியத் தமிழர்களுக்காக் குரல் எழுப்பிய முதல் பத்திரிகையாளர்,

சுந்தரமீனாள் அல்லது காதலின் வெற்றி: மலையகத்தின் முதல் நாவல், கண்ணனின் காதலி: அதியற்புதக் கற்பனையும் யதார்த்தமும் எனும் தலைப்பிலான பகுதிகள் மலையக வரலாற்றாக்கத்தில் முக்கியமான முன்னோடி முயற்சிகள். மலையகத்தின் முதல் நாவல் தொடக்கம் பல முன்முயற்சிகளை அடையாளம் காட்டுவதாக அவரது ஆய்வு அமைந்துள்ளது. மலையகம் என்பதை இனத்துவ அடையாளமாகக் கருதி மிகுந்த புலமைச் சிரத்தையுடன் எழுதிய வரலாற்றாக்க முயற்சி கூலித் தமிழே எனலாம். இன்னும், இவர் பத்திரிகைகளில் எழுதிய, மலையக இலக்கிய வரலாற்றில் அதிகம் மறந்துபோன த.ஏஃபேல் என்பவர் பற்றிய விரிவான ஆய்வுக் குறிப்புக்களும் மற்றும் மலையக இலக்கியம் தொடர்பான பிறகட்டுரைகளும் மிகவும் ஆழமானவை. அவையாவும் நூலுருப்பெறுமாயின் மலையக இலக்கிய வரலாறு இன்னும் துலக்கமுறும்.

பிரயோக வரலாற்றாய்வு எழுத்துக்களும் பிரயோக விமர்சன எழுத்துக்களும்.

மலையக இலக்கிய வரலாற்றாக்கம் பற்றிப்பேசும்போது மலையகம் பற்றிய பிரயோக வரலாற்றாய்வின் போதாமைகளும் பிரயோக விமர்சன எழுத்துக்களின் போதாமையும் அதிகமாகத் தெரிகின்றன. மனித நடத்தை பற்றிய பொதுவிதிகளைக் காணல், சகல துறைகளையும் உள்ளடக்கிய நோக்குநிலை கொள்ளல், எட்டும் தகவல்களைத் தற்காலச் சமூக அறிவியலின் துணைகொண்டு பரீட்சித்தல் என்பன பிரயோக வரலாற்றாய்வின் முக்கிய குணாம்சங்கள். மலையகத் தமிழரின் சமூக பண்பாட்டு வரலாறு உலகப் பரப்பில் சமூகவியல் மற்றும் மானிடவியல் மொழிந்த மனித இனவரலாற்று எழுது முறையில் எழுதப்படுவதும் முக்கியமானது. அவ்வாறு எழுதப்படும்போதுதான் வரலாற்றில் உள்முகமாகப் பின்னப்பட்ட வரலாறுகளைக் கண்டறிய முடியும். எழுதாதவற்றை அடையாளங் காணமுடியும். பிற இனக்குழுக்களுடனான கொண்டும் கொடுத்தும் நிலைபெற்றதன் தொடுபுள்ளிகளைச் சுட்ட முடியும். இதனால் வரலாறு ஸ்திரத்தன்மை பெறும். இதன்மீது கட்டப்படும் இலக்கிய வரலாறு இனத்துவ அடையாளத்தின் வரலாறாக அமையும். வரலாற்றின் இயக்கவியல் ஒழுங்கில் மலையக இலக்கிய எழுத்துக்களை வாசிக்கவும் உரையாடவும் முடியும். தனித்த ஒரு படைப்போ, ஒரு காலகட்டத்தின் படைப்போ இத்தகையதொரு பிரயோக விமர்சனத்தினால் துலக்கம்பெறும். 'நாம்', 'நம்முடையவை' என்ற அகச்சார்புநிலைகளுக்கு அப்பாலான புறநிலைப்பாடுகொள்ளல் இதற்கு மிகவும் அடிப்படையானது.

இவற்றுக்கெல்லாம் அடிப்படையாகப் பின்வரும் முயற்சிகளைப் பரிந்துரைகளாக முன்வைக்கலாம்.

(1) மலையகத் தமிழர் வரலாற்றைப் பல்துறைச்சங்கம ஆய்வொழுங்கில் எழுதுதல்.

(2) மலையகச் சாதிமுறைகள் பற்றியும் வர்க்க முறைகள் பற்றியதுமான புலமைமிகு வரலாற்றாய்வுகளை எழுதுதல்.

(3) மலையகத் தமிழரின் இனத்துவ அடையாள அரசியலையும் வரலாற்றையும் எழுதுதல்.

(4) மலையகச்சமூகம் பற்றியும்சமூக அசைவியக்கம் பற்றியுமான வரலாற்றை எழுதுதல்.

(5) மலையகச் சமயம் மற்றும் சடங்குகள், ஆற்றுகைக் கலைகள் முதலியன பண்பாட்டுடன் இணைவுற்ற தன்மையை வரலாறாக எழுதுதல்

(6) மலையகம் தொடர்பாக வெளிவந்த படைப்புக்களைக் கால அடிப்படையில் பெருந்தொகுதிகளாக வெளியிடல்.

(7) மலையகச் சிற்றிதழ்களை நூலாக்கம் பெறச்செய்தல்.

(8) மலையகம் தொடர்பான பழைய ஆவணங்களைத் தொகுத்துப் பதிப்பித்தல்.

(9) மலையக ஆளுமையாளர் தொடர்பாகவும் அவர்களது பங்களிப்புக்கள் தொடர்பாகவும் தனித்தனியே எழுதித் தொகுத்தல்.

(10) மலையக நூல்கள் மற்றும் கட்டுரைகள் தொடர்பான வழிகாட்டி ஒன்றைத் துறைவாரியாகச் சுட்டியாகத் தொகுத்தல்.

(11) மலையகக் கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனம், சிற்றிதழ் முதலிய பிரிவுகள் தொடர்பாகத் தனித்தனியே வரலாறு எழுதுதல்.

(12) மலையகம் பற்றிப் பிறமொழிகளில் வெளிவந்த படைப்புக்களை, ஆய்வுகளைத் தமிழுக்குக் கொண்டுவருதல்.

இவற்றை ஆய்வாளர் ஒருவர் பரிந்துரை செய்வதன் தேவை என்ன என்ற வினா எழலாம். முன்னர் குறிப்பிட்ட, மலையக இலக்கிய வரலாற்றாக்க முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் கொண்ட சிரமங்களும் மனக் கவலையுமே காரணங்களன்றி இதற்கு வேறு பதில் இல்லை. இலக்கிய வரலாற்றாக்க ஆய்வாளர்களாக அவர்கள் அடைந்த பெருந்துயரை, ஏக்கத்தை அவர்களின் துயரம் தோய்ந்த மொழியில் பதிவுசெய்து வைத்துள்ளார்கள். அவர்களின் அத்தகைய பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு மலையக இலக்கிய வரலாற்றாக்கத்திற்குத் தடையாக அமையும் காரணிகளை (1) மலையக இலக்கியங்கள் தொலைந்து போதல், (2) அவற்றை மீளப்பெற முடியாமை, (3) மக்களிடம் வரலாற்றுணர்வு இன்மை என மூன்றாகக் குறிக்க முடியும். இதற்கு உதாரணமாக மலையக ஆய்வாளர் சாரல் நாடன் தமது 'மலையக இலக்கியம் - தோற்றமும்

வளர்ச்சியும் எனும் நூலிற்கு எழுதிய முன்னுரையின் ஒரு பகுதியைக் குறிப்பிடலாம்.

'இலங்கை மண்ணில் 19ம் நூற்றாண்டில் தொடங்கிய தோட்டப்புற வாழ்க்கையும் அதற்கு முற்பட்ட கண்டி மன்னன் காலத்தினதும் கறுவாப்பட்டைக் காலத்தினதும் வாழ்க்கையில் எழுந்த இலக்கிய வடிவங்கள் காணக்கிடைக்கவில்லை. இந்த உண்மையால்தான் இன்று அவைகளைத் தேடிக்கொள்வதில் சிரமப்படுகிறோம். இலங்கையில் கடைசி மன்னனாகக் கொள்ளப்படும் முத்துச்சாமியைப் பற்றிய அக்கறையோ அவர்காலத்துக் காவியமாகிய சின்னமுத்து கதை குறித்த அக்கறையோ நமக்கு இல்லாததால் அந்தக் காலத்தில் தோன்றிய இலக்கியங்களைப் பறிகொடுத்துவிட்டோம். தனியார் நூலகங்களிலும் விகாரைகளிலும் திணைக்களத்திலும் தேடி அலைகிறோம்' (2000: முன்னுரை)

நிறைவாக...

மலையக இலக்கியமும் வரலாற்றாக்கமும் எனும் பொதுநிலைப் பரப்பினுள் மலையக நவீன இலக்கிய வரலாற்றாக்க எழுத்துக்கள் மலையக இலக்கியத்தின் அனைத்துப் பரப்பினைத் தழுவியனவாக இருந்தமை முக்கியமான ஓர் அம்சமாகும். பெரும்பாலான எழுத்துக்கள் தகவல்மைய எழுத்துக்களாக அமைந்திருந்தாலும் அவையும்கூட வரலாற்;றாக்க முயற்சிகளில் அதிகம் வேண்டப்படுவன. இலக்கியப் படைப்புக்கள், படைப்பாளர்கள் பற்றிய அறிமுக ஆய்வுகள் பலவற்றையும் அவதானிக்க முடிந்தது. புலமைசார் வரலாற்றாக்க எழுத்துக்கள் குறைந்த அளவிலேயே வெளிவந்துள்ளன எனினும் அவை மலையக இலக்கிய வரலாறு எழுதுவதற்கான உறுதியான அடிப்படைகளாக விளங்குகின்றன. மலையக இலக்கிய வரலாற்றாக்கம்சார் நூல்கள் மலையக இலக்கிய வரலாற்றை எழுதுவதற்கான தரம்மிக்க முன்னோடி முயற்சிகளாக அமைகின்றன. பிரயோக வரலாற்று எழுத்துக்களும் பிரயோக விமர்சன எழுத்துக்களும் பெருமளவில் வெளிவரும்போது மலையகத் தமிழ் இலக்கிய வரலாற்றையும் அவ் வரலாற்றின் உள்முகமான துறைசார் வரலாறுகளையும் சமூகப் பயன்மிகு புலமைசார் வரலாறுகளாகக் கட்டியமைக்கலாம். அதற்குத் தொடர்ச்சியான விவாதம் தேவை. வரலாற்றறிஞர் ஜான் எச். அர்னால்டுவின் பின்வரும் கூற்றுடன் இந்த உரையை நிறைவுசெய்வது பொருத்தமானது.

'வரலாறு என்பது எல்லாவற்றுக்கும் அப்பால் ஒரு விவாதம். வேறுபட்ட வரலாற்றாசிரியர்களுக்கு இடையேயான ஒரு விவாதம். கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையிலான விவாதம். உண்மையில் நிகழ்ந்துவிட்டதற்கும் அடுத்து நடக்க இருப்பதற்கும் இடையில் உள்ள விவாதம். விவாதங்கள் முக்கியமானவை. அவை மாற்றங்களுக்கான சாத்தியங்களை உருவாக்குகின்றன.'(2005:19)

அடிக்குறிப்புக்கள்

1. கா. சிவத்தம்பியின் இலங்கை மலையகத்தமிழரின் பண்பாடும் கருத்துநிலையும் (1999) என்ற கட்டுரையும் எம்.ஏ.நுஃமானின் இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் இனத்துவ அடையாளம் - மலையக அடையாள உருவாக்கமும் மலையக இலக்கியமும் (2017) என்ற கட்டுரையும் முக்கிய கவனிப்புப் பெறுபவை.

2. கா.சிவத்தம்பி எழுதிய ஈழத்தில் தமிழ் இலக்கியம் (2010), துரை.மனோகரன் எழுதிய இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி (1997), சி.மௌனகுரு, மௌ.சித்திரலேகா, எம்.ஏ.நுஃமான் ஆகியோர் எழுதிய இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம் (1979), நா.சுப்பிரமணியன் எழுதிய ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் (2009), க.குணராசா எழுதிய ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வரலாறு (2009) முதலாய நூல்களில் மலையக இலக்கியம் தொடர்பான ஆய்வுநிலைசார் பதிவுகளைச் சிறிதளவு காணமுடிகிறது.

3. கா.சிவத்தம்பியின் மலையக இலக்கியம் மறக்கப்படக்கூடாத மறுபக்கம் (1995), சி.தில்லைநாதனின் மலையகமும் தமிழ் இலக்கியமும் (1978), க.அருணாசலத்தின் ஈழத்துத் தமிழ் இலக்கியங்களில் இந்திய வம்சாவளியினர் பிரச்சினைகள் (1984), மலையகச் சிறுகதைகள் சில குறிப்புகள் (1991), மலையக நாவல்கள் - ஓர் அறிமுகம் (1993-1994), மலையகச் சிறுகதைகளில் பெண் தொழிலாளர்கள் (1995) துரை.மனோகரனின் மலையகக் கலை இலக்கியப் பாரம்பரியம் (1994), மலையகத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சி (1994) சாரல் நாடனின் மலையகச் சிறுகதைகள் - ஒரு வளர்ச்சி நோக்கு (1992), எண்பதுகளில் மலையக இலக்கியம் (1992), தெளிவத்தை ஜோசப்பின் மலையகம் எனும் அடையாளம்: மலையக இலக்கியத்தின் வகிபங்கு (2011) மலையகத்தில் சிறுகதை (1991), மலையகப் பத்திரிகையியல் முன்னோடிகள் இரா.சிவலிங்கத்தின் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் மலையக எழுத்தாளர்கள் (1972), அந்தனி ஜீவாவின் மலையகத்தில் நூல்கள் சஞ்சிகைகள் வெளியீட்டு முயற்சிகள் (1990), மலையகத் தமிழ் இலக்கியத்துக்கு முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பு (1997) முதலியனவும் சு.முரளீதரன், லெனின் மதிவாணம் ஆகியோரின் கட்டுரைகளும் மலையக வரலாற்றாக்க முன்முயற்சிகளாய் அமைந்துள்ளன.

4. க.அருணாசலம் எழுதிய மலையகத் தமிழ் இலக்கியம்(1994), மலையகத் தமிழ் நாவல்கள் - ஓர் அறிமுகம்(1999), தெளிவத்தை ஜோசப்பின் மலையகச் சிறுகதை வரலாறு (2000), சாரல் நாடனின் இலங்கை மலையகத் தமிழ் இலக்கிய முயற்சிகள் (2014), மலையக இலக்கியம் - தோற்றமும் வளர்ச்சியும் (2000), அந்தனி ஜீவாவின் மலையகமும் இலக்கியமும் (1995), மலையகம் வளர்த்த கவிதை (2003) அ.சிவராசாவின் மலையகத் தமிழரின் அரசியல் வரலாறும் இலக்கியங்களும் (1992), மு.நித்தியானந்தனின் கூலித்தமிழ் (2014) ஆகியவை மலையக இலக்கிய வரலாறுசார்ந்த மிக முக்கியமான நூல்களாக அமைகின்றன.

உசாத்துணை நூல்கள்

நூல்கள்

அந்தனி ஜீவா (1995) மலையகமும் இலக்கியமும், மலையக வெளியீட்டகம்.

.... (2003) மலையகம் வளர்த்த கவிதை, மலையக வெளியீட்டகம்.

அர்னால்டு, ஜான் எச். (2005) வரலாறு – மிகச் சுருக்கமான அறிமுகம் (மொ.பெ.), சென்னை: அடையாளம்.

அருணாசலம், க. (1997) இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள், கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

.... (1992) மலையகத் தமிழ் இலக்கியம், இராஜகிரிய: தமிழ் மன்றம்.

.... (1999) மலையகத் தமிழ் நாவல்கள் - ஓர் அறிமுகம், கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

சாரல் நாடன். (2014) இலங்கை மலையகத் தமிழ் இலக்கிய முயற்சிகள், கொழும்பு: குமரன் பதிப்பகம்.

.... (2000) மலையக இலக்கியம் - தோற்றமும் வளர்ச்சியும், கொட்டகலை: சாரல் வெளியீட்டகம்.

சிவத்தம்பி, கார்த்திகேசு (2000) தமிழில் இலக்கிய வரலாறு, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

.... (ப.ஆ.)(1993) இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்துநிலையும், இலங்கை: உதயம் நிறுவனம்.

தெளிவத்தை ஜோசப் (2000) மலையகச் சிறுகதை வரலாறு, துரைவி வெளியீட்டகம்.

.... (2011) மலையகம் எனும் அடையாளம்: மலையக இலக்கியத்தின் வகிபங்கு, கொழும்பு: அமரர் சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு.

நித்தியானந்தன், மு. (2014) கூலித் தமிழ், சென்னை: க்ரியா.

நுஃமான், எம்.ஏ. (2017) இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் இனத்துவ அடையாளம் - மலையக அடையாள உருவாக்கமும் மலையக இலக்கியமும், கொழும்பு: அரச ஆலோசனைக்குழு முதலியவை.

இதழ்கள்

தீர்த்தக்கரை. (ஜீன்-ஆகஸ்ட், 1980) கண்டி.

ஞானம் - ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழ் (2012) கொழும்பு.

•

சாம்பல்களைத் தேடிய
அந்தச் சாத்தானின்
பெரும் வேட்டைக்குள்ளிருந்து
விடுவித்து அழைத்து வருகிறேன்
அபலையை

வழிந்தோடும் சிறு கீறலில்
புறப்பட்ட குருதியின் பயணத்தை
மறைக்க
சேற்றுக்குள் வீழ்த்துகிறேன்

தணிக்கவியலாப் பெருந் தாகத்தின்
நீட்சியில் விடுவிக்கப்பட்ட கடுமானென
அடர் இருளில்
முடுக்கி விடப்பட்ட சிந்தனைகள்
பறந்து கொண்டிருந்தன
கால்கள்

இடைவெளிகளைச் செறிக்கும்
புதர்களில் வலிந்து மீளும்
பசுமை யுத்தம்
ஒரு பயணத்தில் மீட்சி பெறத்துடிக்கும்
மீனை ஒத்தது
ஒரு கனவைக் கொண்டு சேர்த்திடக் காடுகளும் குறுகிக்கொண்டன

அந்த இயற்கையின் நியதியில்
விலகிய கடிகாரத்தை
வலதுபுறம் சுழற்றினேன்
அந்நாட்காட்டியைச் சரிசெய்ய
காலத்தைக் கிழிக்க வேண்டியிருந்தது

அழைப்பொலிக்குள் அத்தனையும் இடம் சேர்ந்துவிட்டன
அறைக்கதவும் தாழிடப்பட்டது
அங்கு அவள் பத்திரம்
ஆனால், கதவுகளுக்கு வெளியில் தான் உலவுகிறாள்

மின்ஹா (மின்மினி)

க ட் டு ரை

இந்திய மண்ணில் ஈழ அகதிகளின் முகாம்களும் வீடுகளும்

தொ. பத்தினாதன்

1

நவீன தொழில் நுட்பங்களுடன் கட்டப்பட்ட சொகுசான வீட்டில் வசிப்பவர்களுக்கு அவர்கள் வீடு குறித்த மனநிலை எவ்வாறு இருக்கும்?
பெற்றோர் சம்பாதித்துக் கட்டிய வீட்டில் வசிக்கும் வாரிசுகள் அவர்கள் வசிக்கும் வீடு குறித்த மனநிலை எவ்வாறு இருக்கும்? சொந்த உழைப்பில் சம்பாதித்து கட்டிய வீட்டில் வசிப்பவர்களின் மனநிலை எவ்வாறு இருக்கும்?
ஒரு பிடி நிலம் கூட இல்லாமல்; சொந்த நாட்டில், சொந்த ஊரில், வாடகை வீட்டில் வசிப்பவர்களின் மன நிலை எவ்வாறு இருக்கும்?

மேற்குறிப்பிட்டவர்களின் மனநிலை மாறுபாடுடையது. மேற்குறிப்பிட்ட எந்தப் பிரிவுக்குள்ளும் வராமல் சொந்த நாடுமில்லாமல் தொடர்ந்து தற்காலிகமாக வாழ்பவர்களுடைய மனநிலை எவ்வாறு இருக்கும்? வீடு குறித்துச் சிறிய பதிவுக்காகத் திரும்பத்திரும்ப மேற்குறிப்பிட்ட பிரிவு மக்கள் பற்றி யோசித்துப் பார்க்கிறேன், கற்பனையாகக்கூட அந்த மனநிலைக்கு அருகில் செல்ல முடியவில்லை அப்படியானால் வீடு குறித்த என் (அகதி) மனநிலை என்னவாக உள்ளது?

போரின் மறுபக்கம் எழுதிய பின்புதான் அகதி என்பதையும் அகதிமுகாமில் வாழ்ந்தேன் என்பதையும் தைரியமாகக் கூச்சமில்லாமல் வெளிப்படுத்தினேன். அதற்கு முன்பு அதை வெளிப்படுத்த நான் விரும்பியது இல்லை. காரணம் அது எனக்கு இழிவானது என் வாழ்வாதாரத்தைப் பாதிக்கக்கூடியது எனக்கு அது அவமானமானது. குடிசை மாற்றுவாரியத்தில் வாழ்பவர்கள் மற்றும் சேரிப்பகுதியில் வாழ்பவர்களும் தங்கள் இருப்பிடத்தைக் குறித்துப் பெருமிதம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், அவர்கள் இந்நாட்டவர்கள் என்ற தகுதியுடையவர்கள். துபாய் குறுக்குச் சந்து விவேகானந்தர் தெரு என்று வடிவேல் காமடி மாதிரி ஒரு பொய்யான முகவரியைப் பதட்டமில்லாமல் தெளிவாகச் சொல்லுமளவுக்கு அப்போது எனக்குப் பொய் பிரமாதமாகக் கைகூடியிருந்தது.

1990களின் நடுப்பகுதியில், மண்டபம் அகதிகள் முகாமை வந்தடைந்தபோது, முகாம் நிறைந்து வழிந்தது. மணல்மேட்டில் மூன்றுநாட்கள் தங்கவைக்கப்பட்ட பின் பேருந்தில் ஏற்றி அனுப்பினார்கள். பேருந்து எத்திசைநோக்கிப் பயணிக்கிறது என்பது தெரியவில்லை. போகும் வழிகளில் பச்சைப் பசேல் வயல்வெளிகளும் மலைகளும் கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தன. மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுகா அலுவலகத்தில் இறக்கி, சமைத்த உணவு கொடுத்தார்கள். ஆனால் அதிகமானவர்கள் சாப்பிடவில்லை. அதன்பின்பு உசிலம்பட்டியில் உள்ள கருக்கட்டான்பட்டியில் உள்ள அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளியில் ஓர் இரவும் பகலும் தங்கவைக்கப்பட்டோம். பள்ளிக்கூடத்தில் தங்க வைக்கப்பட்ட ஒரு நாளில், பள்ளிக்கூடத்திலிருந்து சற்றுதொலைவில், நீண்டநாட்கள் கோழி வளர்க்காமல் கிடந்த சுமார் 20 அடி அகலம் 60 அடி நீளம் கொண்ட இரண்டு கோழிப்பண்ணைகளையும் சுத்தம் செய்து தரையை மாட்டுச்சாணத்தால் மெழுகிச் சரி செய்திருந்தார்கள் .அதில் சுமார் 80 குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டோம் என்பதைவிட அடைக்கப்பட்டோம் என்பது பொருத்தமானது.

இரண்டடி உயரச்சுவரும் அதற்குமேல் கம்பி வலையால் அடிக்கப்பட்ட கோழிப்பண்ணையில் மூன்று மாதங்களுக்குமேல் அடைக்கப்பட்டிருந்த காலத்தில் சற்று தொலைவில் இருந்த அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பத்தாவது ஒருமாதம் படித்தேன் என்பதைவிட அந்த மைதானத்தில் பள்ளிக்கூட நேரத்தில்

மரத்தடியில் உட்கார்ந்திருந்தேன் என்பது பொய் இல்லை.

அதன்பின்பு மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகாவிற்குட்பட்ட உச்சப்பட்டியில் வரிசையாக கட்டப்பட்ட ஓலைக்கொட்டில்களில் குடியமர்த்தப்பட்டோம்.
ஆனால் அந்தக் கோழிப்பண்ணை இருந்ததற்கான எந்த அறிகுறியும் இன்றில்லை. அன்று கண்ணுக்கெட்டிய தூரம்வரை கம்பும் சோளமும் இருந்த இடமெல்லாம் இன்று காங்கிறீட் வீடுகளாக மாறியிருக்கின்றன... ஆனால் அகதிகளின் ஓலைக்கொட்டில்கள் மட்டும் மாறவில்லை.(நான் அந்த மந்தைகளிலிருந்து பிரிந்த தனியாடாக இருந்தாலும்(அகதி) பலியாடுதான்.) உலக வரலாற்றில் அகதியைக் கோழிப்பண்ணையில் அடைத்த பெருமை இந்தியாவுக்குரியது, அதில் அடைபட்ட பெருமை இலங்கைத்தமிழருக்குரியது. அகதிகளை பாதுகாப்பதும், பராமரிப்பதும் தமிழக அரசின் அதிகார வரம்பிற்குட்பட்டது.

2

அகதி என்பதும் அகதிமுகாம் என்று முகவரி சொல்வதும் ஆரம்பந்தொட்டு அவமானமாக இருந்ததற்கு எனக்கு முகாமிற்கு வெளியே இருந்த தொடர்பும் காரணமாக இருந்திருக்கலாம். முகாமிற்குத் தபாற்காரர் வீடு வீடாக வந்து தபால் தரமாட்டார் யாருக்குக் கடிதம் வருமென்று முன் தெரிந்தவர்கள் அல்லது எதிர்பார்ப்பவர்கள் ஒரு பொதுவான இடத்தில் எப்பவும் கூடி இருப்பார்கள். அந்த இடத்தில் தபாற்காரர் வந்து பெயர் வாசிப்பார் உரியவர்கள் கடிதத்தை வாங்கிகொள்வார்கள். அக்கம் பக்கம் தெரிந்தவர்களுக்கும் வாங்கி வந்து கொடுப்பார்கள். சில முக்கியமான கடிதங்கள் காணாமல் போவதுமுண்டு. கடிதம் பிரிக்கப்பட்டபின் கொடுத்து மனஸ்தாபங்கள் ஏற்பட்டதுமுண்டு. இதனால் ஏற்பட்ட அனுபவத்தால் முகாமுக்கு வெளியே நண்பர்கள் முகவரியை பயன்படுத்திய அனுபவமும் இருக்கின்றது.

இவ்வாறு அகதிகள் முகாம் என்று மறைப்பது எனது போலியான கௌரவத்தைத் தேடும் முயற்சியாகக் கொள்ளும் அதே வேளை முகாம் என்பது கேவலமானது என்ற அழுத்தமான மனப்பதிவும் மிக முக்கியம். அகதியாக ஆனதிலிருந்து வீட்டுக்கும் எனக்கும் இடைவெளி இருந்து கொண்டேதானிருக்கிறது

1917ல் கட்டப்பட்ட மண்டபம் அகதிகள் முகாம் தமிழகம் வாழ் அகதிகளின் நுழைவுவாயில் என்றே சொல்லலாம். மண்டபம் முகாம் மணல்மேட்டில் கால் வைக்காத இலங்கை அகதிகள் தமிழகத்தில் இல்லை. மண்டபம் வழியாகத் தமிழகம் வந்து அய்ரேப்பியநாடுகளுக்கு சென்றவர்களும் கணிசமாக இருக்கிறார்கள்.
தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் கப்பல் போக்குவரத்து இருந்தபோது, தமிழகத்தில் இருந்து இலங்கையின் தேயிலைத்தோட்டங்களுக்கு தொழிலாளர்களும் பயணிகளும் போய்க்கொண்டு இருந்தபோது அவர்களுக்காகக் கட்டப்பட்டது இந்த முகாம். 1983 அகதிகள் வருகையைத் தொடர்ந்து அகதி முகாமாக மாற்றப்பட்டது. 1983 அகதிகள் வருகை 1990 களில் அகதிகள் வருகை 2006 அகதிகள் வருகை போன்ற முக்கிய நிகழ்வுகளுடன் தொடர்புடைய மண்டபம் அகதிகள் முகாம் 2017 வரை நூறு ஆண்டுகள் வரலாறுடையதாக இன்னும் இருக்கிறது. 1917 முதல் 1925 வரை 125585 தோட்டத்தொ ழிலாளர்களும் 60663 பயணிகளும் தங்கிச் சென்றதாக 'மலையகத்தமிழர் வரலாறு' (சாரல்நாடன்) என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3

மண்டபம் முகாமில் பிரிட்டிஷாரால் கட்டப்பட்ட ஓட்டு வீடுகள் வரிசையாக இப்போதும் இருக்கின்றன. பழைமையான பெரிய மரங்கள் இருக்கின்றன. மருத்துவமனை, பள்ளிக்கூடம், தனித்துணை ஆட்சியர் அலுவலகம் மற்றும் சிறிய அளவில் சிறையும் இருக்கிறது 1983 ல் அகதிகள் வருகையை தொடர்ந்து 1986 ல் எம்.ஜி.ஆர் ஆட்சிக்காலத்தில் வீடுகள் கட்டப்பட்டன. பிரிட்டிஷார் கட்டிய வீடுகள், எம். ஜி.ஆர் ஆட்சிகாலத்தில் கட்டப்பட்ட வீடுகளை விடப் பெரிதாக இருப்பதால் அகதிகள் விரும்பும் வீடுகளாக பிரிட்டிஷார் வீடுகளே தற்போதும் உள்ளன. 2006 மு. கருணாநிதி ஆட்சிக்காலத்தில் பிரதான சாலைகள் மற்றும் வீடுகள் பராமரிப்புக்காக 27 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் ஒப்புதல் செய்யப்பட்டது.அதில் முகாம் உட்பகுதியின் பிரதான சாலை சீரமைக்கப்பட்டதை நான் அறிவேன். அகதிகளைப்போல முறையான பராமரிப்பு இல்லாமல் அவலட்சணமாகவே முகாம் வீடுகளும் இருக்கின்றன.. இந்த முகாமில் கால் வைத்தவர்கள் பெரும்பாலும் இன்றுவரை மகிழ்ச்சியாக இல்லை என்று சொன்னால் மிகையில்லை.
2014 தமிழ் இந்து பத்திரிக்கை செய்திப்படி மண்டபம் முகாமில் 641 குடும்பங்களை சேர்ந்த 2184 நபர்கள் வாழ்கிறார்கள்.

4

1990 ம் ஆண்டு 113456 அகதிகள் தமிழகம் வந்தார்கள். அவர்களை மண்டபம் முகாமில் தங்க வைத்துப் பேருந்துகள் மூலமாகத் தமிழகத்தின் உள்மாவட்டங்களுக்கு அனுப்பி, உணவு தானியக் கிடங்கு (கழியக்கவிளை), புயல் பாதுகாப்பு மையம்,(முட்டுக்காடு) கோழிப்பண்ணை,(உசிலம்பட்டி)

நீர் அணைகளை ஒட்டிய குடியிருப்புக்கள், (பவானிசாகர், வெம்பக்கோட்டை, தர்மபுரியில் ஒருமுகாம்) போன்ற இடங்களில் தங்க வைக்கப்பட்டார்கள். ஒரே ஆண்டில் தொடர்ந்து அதிகமாக அகதிகள் வந்ததால் அரசுக்குச் சொந்தமான இடங்கள், நீர் அணைகளை ஒட்டிய இடங்கள், உணவுதானியக் கிடங்கை ஒட்டிய காலி இடங்களிலும் ஓலை மற்றும் தார்சீட்டால் அதிகமாகத் தற்காலிக வீடுகள் கட்டப்பட்டு அகதிகள் குடியமர்த்தப்பட்டார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை உணவுதானியக் கிடங்கில் உரப்பைகளால் தடுப்புகளை உருவாக்கி அதற்குள் அகதிகள் வாழ்ந்தார்கள்.

மதுரை மாவட்டம் உச்சப்பட்டி, திருவாதவூர்,தூத்துக்குடி தாப்பாத்தி, சென்னை கும்மிடிப்பூண்டி, சேலத்தில் சோப்புமண்டி ... இன்னும் பல முகாம்கள் அரசுக்குச் சொந்தமான நிலத்தில் தற்காலிகமாக ஓலை மற்றும் தார்சீட்டுகளால் கட்டப்பட்ட வீடுகள்.

1990 ஆண்டைவிட 2006 ம் ஆண்டு குறைவாகத்தான் அகதிகள் வந்தார்கள். அப்போதும் ஏற்கனவே இருக்கும் முகாம்களை ஒட்டிய பகுதியில் ஓலைவீடுகள் கட்டிக் குடியமர்த்தப்பட்டார்கள். இங்கு வீடு என்கிற போது பத்துக்குப் பத்தடியோ பன்னிரண்டுக்கு பதினைந்தடியோ உள்ள கொட்டில் அல்லதுதகரச்சீட்டால் கட்டப்பட்ட இடம். உணவுதானியக் கிடங்காக இருந்தால் சீலை, உரப்பை பெட்சீட் ஆகியவற்றாலான தடுப்பு அவ்வளவே நீண்டகாலமாக அகதிகள் வாழ்வேண்டிய சூழ்நிலை உருவானதால் ஓலையாலும் தார்சீட்டுகளாலும் தற்காலிகமாகக் கட்டப்பட்ட வீடுகள் சேதமைடயும்போது, அகதிகளே அவரவர் வசதிக்கு ஏற்ப இருக்கும் இடத்தைப் பொறுத்துக் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளுக்கு அருகாகக் கட்டிக்கொண்டார்கள்.

5

ஓலையால் வீடு கட்டியவர்கள் நான்கு அய்ந்துமுறை அவர்களாக வீடுகட்டியவர்களும் இருக்கிறார்கள். 2006ல் மு.கருணாநிதி முதல்வராக இருந்தபோது, இவர்களுக்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதில் முதற்கட்டமாக 5982 வீடுகள் மேம்படுத்த உத்தரவு இடப்பட்டது.

அதன் பின்பு 2012ல் ஜெ. ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது அகதிகளுக்கு வீடுகட்டுவதற்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கினார். அதில் 14 மாவட்டங்களில் உள்ள 21 முகாம்களில் (மொத்தம் தற்போது 107 முகாம்கள் உள்ளன) ஒரு வீட்டுக்கு ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பில் 2500 வீடுகள் கட்ட ஜெ. ஜெயலலிதா உத்தரவிட்டார்கள். அவை இன்றுவரை கட்டப்பட்டு விட்டனவா கட்டிய வீடுகளும் அகதிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டனவா என்ற கேள்விகள் இருக்கின்றன. இந்த வீடுகளும் தாராளமான இடவசதியுடனோ பெரியவையாகவோ கிடையாது. ஒப்பந்தக்காரரின் பிடிமானம் போக ஒரு லட்சத்தில் என்ன வீடு கட்டிவிட முடியும்? அவையும் பத்துக்கு பத்தோ, பன்னிரண்டுக்குப் பதினைந்தடியுடைய வீடுகள்தான். இவ்வாறு ஒதுக்கப்படும் நிதியும் முறையாகச் செலவு செய்யப்பட்டதா? அறிவிப்பு செயற்படுத்தப்பட்டதா என்பது சம்பத்தப்பட்ட அதிகாரிகளுக்குத்தான் தெரியும்.

குடிசை மாற்று வாரிய குடியிருப்பு, சேரிப்பகுதிக் குடியிருப்பு கவுசிங்போர்டு போல் இன்று அகதிகள் முகாம்களையும் சேர்த்துக்கொள்ளலாம். அந்த மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை இருக்கின்றது. அரசியல்வாதிகள் தேர்தல் காலத்திலாவது வருவார்கள், அகதிகளுக்கு அதுவுமில்லை. நான் இந்தப்பகுதியைச் சேர்ந்தவன் என்று வெளியே சொல்லும்போது கிடைக்கும் மரியாதை என்ன என்பதை அனுபவித்தவர்களால் மட்டுமே உணரமுடியும். வீடு பாதுகாப்பானது மட்டுமில்லை கௌரவமானதும்தான். பாதுகாப்பும் கௌரவமும் இல்லாதபோது அவ்வீட்டில் வசிப்பவர்கள் வீடுகுறித்துப் பெருமிதம் கொள்ள முடியாது. மாறாக அவ்விடத்தை விட்டு வெளியேறும் மனநிலையே மேலோங்கி நிற்கும்.

6

தற்காலிகமான இடத்தில், தற்காலிகமாக அடிப்படைவசதிகள் இல்லாமல் கட்டப்பட்ட வீடுகளில், தற்காலிகமாகக் கால்நூற்றாண்டைக் கடந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட அகதிகளின் வாழ்க்கை அவ்வளவு சுலபமானது இல்லை. தமிழகத்தில் உள்ள பர்மாகாலனி போல் சிலோன் காலனி உருவாகி விடக்கூடாது. 27 ஆண்டுகளாகியும் முகாம்கள் இவ்வாறு இருப்பது நியாயமானது இல்லை. அரசுகளுக்கு எந்த அழுத்தமும் இல்லாததால் அரசுகளும் கண்மூடி இருக்கின்றன. அகதிகளின் துயர்துடைக்க வேண்டுமானால், அகதிமுகாம்களை மூடு என்ற ஒற்றைக் கோசத்தை வலுவாக, அரசாங்கத்தை நோக்கி நாம் எல்லோரும் எழுப்ப வேண்டும்

(மண்டபம் முகாம் கட்டப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவை ஒட்டி நான் நேரில் பார்த்த முகாம்களின் அடிப்படையில் இக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது) .

•

கண் அழகர்கள்

நீண்டு அகன்ற கண் வண்ணாத்திக்கள்
சிறகடிக்க
அவள் அமர்ந்திருந்த கரை
மது ஆறு ஒடுகிறது.

செக்கச் சிவந்த திராட்சை ரசம்
அவள்
கனவில் மட்டுமே
ஒரே ஒரு முறை அருந்திய மதுரச்சுவை

சுவர்க்கம் பளிங்காலானது என
அவள் நம்பிக்கொண்டிருந்தாள்.
ஒலித்தோடும் நதிகளும்
முறுகித்திரண்ட மரங்களும்
அதுவொரு பேரெழில்காடாய் இருந்ததில்
அவளுக்குச் சந்தோஷம்.

முதிர்கிளர் கொங்கைகள் கொண்டு
ஆடவர்களைப் போதையூட்டும்
ஹூருல்ஐன் கண்ணழகிகள்
அவளைக் கடந்து போனார்கள்.

அவளது
'அவன்'
எங்கிருக்கிறான்?

அவன் வந்துவிடுவான்!

அதற்கு முன் ஒரேயொரு கேள்வி கேட்டாக வேண்டும்.

மதர்த்த புஜங்களும்
மயிரடர் திடமார்பும்
யூசுபைப்போன்ற
பேரெழில் கண்களும் கொண்ட
ஹூருல் ஆண்கள் எங்கே?



ஷமீலா யூசுப் அலி

குடிமைகள் :

சாதியமும், ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டமும்

பிருந்தன்

ஓர் இலக்கியப் பிரதி சமூகத்திற்கு எதையெல்லாம் கடத்தப்போகிறது என்கிற கேள்வியில் தான் ஆரம்பிக்கிறது விமர்சகர் ஒருவரின் தேடல். வாசகர் ஒருவர் இலக்கியப்பிரதி ஒன்றினை, அதுவும் சிறுகதை, கட்டுரை, கவிதைகளுக்குச் செலவழிக்கின்ற நேரத்தின் பங்கினை விடப் பலமடங்கு அதிக நேரத்தை ஒதுக்கி நாவல் ஒன்றை வாசிக்கும் போது, அவருக்குக் கலை என்பதைத் தாண்டிய ஒன்று தேவைப்படுகிறது. மற்றைய எல்லா வடிவங்களிலும் கூறிவிடமுடியாத ஒன்றை, நாவல் கடத்தவேண்டிய தேவை ஒன்றிருக்கிறது. அது வாசகரைச் சென்றடைகிறது/ இல்லை என்பதைத் தாண்டி வரலாற்றின் ஓட்டத்தில் அது கலந்து கொள்ளப்படவேண்டும். எந்த வேறு இலக்கிய வடிவத்திற்கும் இல்லாத இந்தத் தனித்தன்மை நாவலிற்கு மட்டுமே உள்ளது. நாவல் வாசகருக்கு மட்டும் அல்ல, வரலாற்று ஆய்வாளர், பண்பாட்டு ஆய்வாளர், மாணவர், அரசியல் சார்புடையவர் என்று இன்னொரு சந்ததியின் மனிதர்களுக்கு, இன்னொரு கலாச்சாரத்தின் மனிதர்களுக்கு நாவலின் பண்பாட்டுச் சமூகத்தை கடத்த வேண்டிய பொறுப்பு உள்ளது. எம்மால் இன்றுபரவிப் பேசப்படுகின்ற தூரத்துக் கலாச்சாரங்களெல்லாம் நாவல் வழி உள்நுழைந்தவை தான். எந்தப்பண்பாடும் எழுத்துரு பெறப்படும்போது தான், நம்பிக்கையாகக் கடத்தப்படுகிறது. எனவே சமூகம் ஒன்றில் நாவல் உருவாக்கம் பற்றிய திடமான எண்ணநிலைமை வேண்டும். நாவல் ஒரு சமூகத்தையே கடத்துகின்ற வல்லமை பெற்றது. அதே சமயம், ஒரு சமூகத்தின் அடையாளத்தை அப்படியே அழித்துப் பூசிவிடக்கூடியதும்.

நாவல்களின் மூலம் கடத்தப்படவேண்டிய மிக முக்கியமான பிரச்சினை சாதியம். இது ஏன் கடத்தப்படவேண்டும்? கடத்தப்படாமல் இருந்தால் அப்படியே அழிந்து போய்விடுமே என்ற கேள்விகள் மிகவும் மேலோட்டமானவை. இன்று இலங்கை வடக்கில் யாரும் சாதிய அடிப்படையில் பிரிந்து இருக்கவில்லை, அவர்களுக்கு என்று தனித்தனி பிரதேசங்களில் வேறு வேறு சாதிய அடிப்படையில் குடியிருக்கவில்லை, இன்று எல்லோரும் சிகை அலங்கரிக்கும் கடைகளில் தான் முடிவெட்டுகிறார்கள் - இதனால் சாதியம் இறந்துவிட்டது என்பது சரியா? இன்னும் சாதியம் ஒழிந்து போய்விடவில்லை என்பதற்கு, இன்றைய மரணச் சடங்குகளும் திருமணங்களும் ஆதாரம். இன்னும் பறை அடிப்பவர்களும் கட்டாடிமார்களும் வாழ்ந்து கொண்டே தான் இருக்கிறார்கள். படித்து வளர்ந்தசமூகத்தினரிடமே சாதியவெறி இன்னும் ஒழியவில்லை. எனக்கு நெருக்கமான நண்பன், அவன் மருத்துவபீடம் படித்துக்கொண்டிருக்கிறான். அவன் என்னிடம் பேசுகின்ற போது, அவனுக்குச் சாதியினால் உண்டான தாழ்வு மனப்பான்மை குறித்து வருத்தத்துடன்குறிப்பிட்டான். என்ன தான் வளர்ந்தாலும் தாங்கள் டோபிகள் (சலவை செய்வோர்) என்ற சாதியக் கட்டமைப்பை உடைக்கவே முடியவில்லை என்று

வருந்தினான். இது இன்னமும் ஒழிக்கப்படாத சாதிய ஊடுருவலின் கூறுகள். இதைப்பற்றிய அறிவு அடுத்த தலைமுறைக்கு இல்லாமல் போனால், சாதியம் என்ற பெயர் இல்லாமல் - அதே அமைப்பு முறை உருவாகிவிடும். இது மறைத்தல் பண்பாட்டின் பெரும் சிக்கல். இந்த சாதிய அமைப்புக்கள் எல்லாம் அறிவித்தல் என்பதை காட்டிலும் கற்பித்தல் என்கிற வழியில், உண்மை நிலைகள் புலப்படுத்தப்படவேண்டும்.

இன்று ஈழத்து நாவல் ஒன்றில் அதிகம் பேசப்படவேண்டிய பொருள் யுத்தமாகவே உள்ளது. இது காலத்தின் இன்றியமையாத பிரதிபலிப்புச் செய்கை. போரிலக்கியங்கள் இன்று எதிர்பார்க்கின்ற அளவு, உள்ளடக்கத்திலும், எண்ணிக்கையிலும் கனதியானவை வெளிவந்துகொண்டே இருக்கின்றன. அதிகமாக பேசப்பட்டும் விவாதிக்கப்பட்டும் கொண்டிருக்கின்றன. உண்மையான போரின் மொழியும், அணிகலன்களும் உலக சமூகத்திற்குச் சரியாகக் கடத்தப்பட்டு க்கொண்டிருக்கின்றன. இன்னொரு பக்கம் உலகளாவிய கலாசாரம் பற்றிய நிகழ்த்துகை விவாதங்கள் இலக்கியங்களின்மூலம் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. எல்லா வகையான பருப்பொருள்களைப் பற்றியும் பேச்சுக்கள் அரங்கேற்றப்படுகின்றன. இவை அனைத்தும் பரவலாகப் பேசுகின்ற, விவாதிக்கின்ற, ஆவணப்படுத்துகின்ற ஒரு சமூகத்தில் சாதியம் பற்றிய முற்போக்கு வாதங்கள் மிகவும் குறைவு. தேசியம் பற்றியும் போரின் அழிவுகள் பற்றியும் பேசுபவர்கள் சாதியம் போன்ற உள் முரண்பாடுகள் பற்றியும் வெளிப்படையாகப் பேசி சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப்போராடும்போதே அவை முற்போக்குக் கருத்தியலாகும்.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பஞ்சமர்களில் ஒரு பிரிவான அம்பட்டர்களின் வாழ்க்கையைப் பற்றிப் பேசுகின்ற நாவல் 'குடிமைகள்'. இந்நாவல் இலங்கையின் மூத்த எழுத்தாளரான தெணியான் என்ற புனைபெயருடன் எழுதுகின்ற கந்தையா நடேசுவால் எழுதப்பட்டது. இலங்கை அரசினால் *2014*ல் 'சாகித்ய ரத்னா' என்ற உயர் விருது தெணியான் அவர்களுக்குக் 'குடிமைகள்' நாவல் மூலம் கிடைத்தது. இலங்கையின் வடக்கிலிருக்கின்ற ஒடுக்கப்படும் சாதியாகிய சிகை திருத்தும் தொழலாளர்களை மையமாக வைத்து, அவர்களின் வாழ்க்கை முறை, ஆசைகள், பிரச்சினைகள், எதிர்ப்புக்கள், போராட்டம், புறக்கணிப்பு என்று எல்லாவித அக-புற வாழ்வியலினைத் தெணியான் குடிமைகள் மூலம் ஆவணம் செய்கின்றார். தனது ஐம்பது வருட அனுபவத்தையும், காட்சிப்புல நினைவுகளையும் ஒன்றிணைத்துக்குடிமைகள் நாவலை எழுதியுள்ளார். நாவல் இலங்கையின் வடக்கே இருக்கின்ற யாழ்ப்பாணத்தின் வடமராட்சியை மையப்படுத்தி எழுதப்ப ட்டிருக்கின்றது. இதைவிட மலையகத்தின் பதுளை நகருக்கும், கொழும்பு நகருக்கும் நாவல் நகர்ந்து போய் வருகின்றது. நாவல் *1960-70* காலப்பகுதியினை மையமாகக் கொண்டிருந்தாலும், நாவலில் நடக்கின்ற சம்பவங்கள் இன்றைய சமூகத்திலும் பரவலாகக் காணப்படுகின்றன. இன்னும் கிராமங்களில் ஒவ்வொரு சமூகத்தினரையும் பிரிக்க ஒரு வீதியோ ஒரு வெறும் நிலமோ காணப்படுகிறது. வளர்ந்து நிற்கின்ற நகரங்களில் இவற்றை அவதானிக்க முடியாது. எல்லாச் சமூகத்தினரும் ஒன்றோடு ஒன்று கலந்தே வாழுகின்றனர். இருந்தும் அவர்களிடையே இருக்கின்ற உளவியல் வேற்றுமை மாறாமலேயே இருக்கின்றது. தெணியானுடைய நோக்கம் நாவலிலிருந்து அம்பட்டர் சமூகத்தின் பண்பாட்டையும் வாழ்வியலையும் போராட்டங்களையும் ஆவணப்ப டுத்துவதே ஆகும். பிறப்பின் மூலம் ஆதிக்க சாதியினர் உயர்ந்தவர்கள் என்றும் அம்பட்டர்கள் தாழ்ந்தவர்கள் என்றும் வெளியுலகத்திற்கு அடையாளப்ப டுத்தப்படுகிறது. ஆதிக்கச் சாதியினரால் பல வகைகளில் ஒடுக்கப்படும் சாதியினர் உயர்ந்து நிற்கிறார்கள் என்பதை ஆழ்ந்து பேசுகின்ற தொனியே தெணியானின் குடிமைகள்.

(01)

மிகவும் முக்கியமானதொன்று நாவல் பேசுகின்ற அழகியல். விரிந்த பண்பாட்டு அமைப்புடைய சாதியம் ஒன்றின் பண்பாட்டு வெளிப்பாடு அதிகமாகப் பௌதீக அமைப்பிலேயே தங்கியிருக்கிறது. தனக்கென்று நிலம் இல்லாமல், வேளாளர் நிலத்தில் குடியிருக்கிற குடிமைகளின் பௌதீக, உளவியல் அழகியல் மிகவும் வித்தியாசமானது. அவர்களது பௌதீகச் சூழல் முழுதாக ஆதிக்கச் சாதியினரால் ஒழுங்குபடுத்தப்பட்டதாக இருக்கிறது. ஆதிக்கச் சாதியினரின் தேவைகளுக்கு ஏற்பக் குடிமைகளின் சுற்றுச் சூழல் வடிவமைக்க ப்படுகிறது. சொந்த நிலம் ஒன்று இல்லாமல், அதில்

அடிப்படை வசதிகள் சரியாக இல்லாமல், அதை வெளிப்படுத்துவதிலும் பெரும் இடர்களைச் சந்திக்கின்ற ஆனால் அந்தச் சூழலுக்கே தன்னை இசைவாக்கப்படுத்திக் கொண்ட தாழ்த்தப்பட்ட சமூகத்தின் குரல் நாவலில் எல்லாத்திசைகளிலும் ஒலிக்கின்றது. அம்பட்டர் சமூகத்தின் நீர்ப்பிரச்சனை தான் நாவலின் தொடக்கப் புள்ளி. நீர்ப்பிரச்சனை இயற்கையானது அல்ல, அதுவும் ஆதிக்கச் சாதியின் அடக்கு முறையே என்கிறார், *‘கட்டாடிக்கு கிணறு வெட்டிக்கொடுத்திருக்கிறார்கள். கோடைகாலம் வந்துவிட்டால் மழைநீர் தேங்கி நிற்கும் துரவுகள் வற்றிப்போகும் வெள்ளாவியில் வைத்து வெளுப்பதற்கு தண்ணீருக்கு எங்கே போவது? நயினார்கள்மார் என்ன காரியம் செய்தாலும் தமக்குகிடைக்கக்கூடிய நன்மைகளை கணக்குப்போட்டுத்தான் செய்வார்கள்’ (குடிமைகள் : பக்கம் 29)*

தெணியான் கிணற்றைச் சுற்றி வரைகின்ற வரைவுகள் முக்கியமானவை. கிணற்றில் தண்ணீரே அள்ள முடியாத சமூக இளம் பெண்களை, எந்த ஆதிக்க சமூக ஆணும் தீண்டத் தகாதவர்களாகப் பார்ப்பதேஇல்லை. அவர்களுடைய காமம் சாதியைப் பார்ப்பதுஇல்லை. தாழ்ந்த சாதியினரைக் குடிமைகள் தொழில் பார்க்க மட்டும் அல்ல, தமது இச்சைகளைத் தீர்க்கவும் போகப் பொருளாக பார்க்கிறார்கள். குடிக்கத் தண்ணீர் எடுக்க நாயினார்மார்களின் கிணற்றுக்கு வருகின்ற அம்பட்ட சமூக வயதான பொன்னி அனுபவிக்கின்ற இன்னல், அவள் வயதோடு வேறுபட்டிருக்கின்றதே தவிர மாறவில்லை. ஆரம்பத்தில் உடலளவிலும் பின்னர் உளவியலாலும் நோகடிக்கப்படுகின்றாள். உயர் சாதிப்பெண்களிடம் இருந்து தண்ணீர் பெறுகின்ற நிலையைப் பிச்சை எடுக்கும் நிலையைவிட மோசமானதாகக் கருதுகின்றார்கள். அங்கே விழுகின்ற வசைகளுக்கும் வயது வித்தியாசத்திற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. வயதான பொன்னிக்குத் தண்ணீர் ஊற்றிவிட யாரும் முன்வரவில்லை, முன்வந்தவர்கள் சினக்காமல் ஊற்றிவிடவில்லை, சொந்தமாகத் தண்ணீர் ஊற்றக் கூட தகுதி அற்ற குடிமைகள். கிணற்றைச் சுற்றித் தெணியான் கட்டி எழுப்புகின்ற கேள்விகள் ஆழமானவை.

(02)

சாதியம் பிரிவினையை ஏற்படுத்துவது போலவே,அவ்வாறு பிளவுண்ட மனிதர்கள் தமக்குள்ளும் பிரிந்து நிற்கின்ற உயர்வு-தாழ்வைத் தெணியான் சித்திரிக்கின்றார். இரண்டு வெவ்வேறு இடங்களில் இதை வலியுறுத்துகின்றார்.

‘...எங்கடை சாதிக்காரர் எல்லாரும் எங்களுக்கு சமமே?

தெணியான்
கருப்புபிரதிகள்
விலை : 200

ஒரு சாதிக்குள்ள எத்தினை பிரிவு எத்தனை பகுதி இருக்குது தெரியுமா?’ (குடிமைகள்:பக்கம் 112)

இளையவர்கள் சமூகக் கட்டமைப்புகளைத் தகர்க்க முயல்கின்ற போது, அங்கு மேலெழுகின்ற சமூகத் தலைமைகள்- இதற்குப் பெரும் சவாலாக இருக்கின்றது. ஒரே சாதிக்குள் கலந்து திருமணம் செய்வது கூட ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கவில்லை. தொழில் தகைமைகள், வருமானம், வசதி போன்றவற்றை வைத்து ஒரே சாதிக்குள் பிரிவினைகள் உருவாகின்றன.ஒரே சாதிக்குள் மெலிதாக உயர்ந்தவர் மற்றவர்களை அடக்கி அதிகாரம் செய்கின்ற போக்கு காணப்படுகின்றது. நேரடியாகஇந்தமுறைமைவெளிப்படாமல்இருந்தாலும் குறித்த சந்தர்ப்பங்களில் வெளிப்பட்டுவிடுகின்றது. சரவணை முதலாளி, மணியன் இருவரையும் நாவலூடு கொண்டு செல்கின்ற அடிப்படை விடயம் இதுவாகும். மணியனை முதலாளி கொடுமைப்படுத்துகின்ற இடங்களிலும் மணியன் அடங்கிப்போகின்ற இடங்களிலும் வாசகரோடு எழுந்து பயணிக்கின்ற அனுபவங்கள், எங்கோ ஒரு நகரத்திற்குச் சிறிய தொழில் ஒன்றினைச் செய்வதற்காக வயது குறைந்த பிள்ளையை அனுப்பிவிட்டுத் தவிக்கின்ற ஒவ்வொரு பொன்னிக்கும் வலியை ஏற்படுத்துவதாக இருக்கின்றது. கூலியே இல்லாமல் வேலை செய்கின்ற மணியனின் வாழ்க்கையில் ஏற்படுகின்ற திருப்பமும் அதன் மூலம் மணியன் அடையக்கூடிய அனுகூலங்களும் வாசகர்களைத் திருப்தி அடைய வைக்கின்றது.

தெணியான், மணியனைக் கற்றலில் நாட்டம் இல்லாத ஒரு மாணவனாகச் சித்திரித்து, அதற்கான காரணத்தை ஆசிரியர்களின் சாதி பற்றிய வசைகளே என்கிறார். தெணியான் ஆவணம் இணையத்திற்கு வழங்கியிருந்த நேர்காணலில் ஆழமாகவும் உணர்ச்சிபூர்வமாகவும் பேசிய இடங்களில் அடக்கப்பட்ட சாதியப் பாடசாலை

வாழ்க்கை முறை ஒன்றாகும். பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்ப்பதில் ஏற்படும் இடர்பாடுகள் பற்றியும் சேர்க்கப்பட்ட மாணவர்களைப் பயன்படுத்துகின்ற/ வழி நடத்தப்படுகின்ற முறைகள் பற்றியும் தனது அதிருப்தியினைத் தெரிவித்திருந்தார். அடக்கப்பட்ட சாதி மாணவர்கள் பாடசாலை விளையாட்டுகளில் மிகவும் பிரகாசிக்கக்கூடியவர்கள். அவர்களின் பால்ய வாழ்க்கை அவர்கள் செய்கின்ற சிறு வேலைகள் என்பன அவர்களின் திடமான உடலுக்குக் காரணங்களாக இருக்கின்றன. இதனைப் பயன்படுத்தி பாடசாலையில் விளையாட்டுகளை வெற்றி கொள்வதில் தான் பாடசாலைச் சமூகம் கவனம் செலுத்தியதே தவிர அவர்களின் கல்வி நடவடிக்கைகளில் எந்த முன்னேற்றமும் செலுத்த எத்தனிக்கவில்லை. அந்த ஆதிக்கத்திலிருந்து மீண்டு எழுந்து வந்தவர்களில் தெணியான் முக்கியமானவர் என்பதால் அவரின் எழுத்துகளும் அதையே முன்னிறுத்தி நிற்கின்றன.

(03)

மனித வாழ்க்கை கொண்டாட்டங்களுக்கானது. ஒடுக்கப்பட்ட மக்கள் எவ்வளவு அடக்குமுறைகளுக்கு உட்பட்டாலும் அவர்களுக்கான கொண்டாட்டங்கள் இல்லாமல் போய்விடவில்லை. மாற்றுத்திறனாளிகளான அண்ணனையும் தம்பியையும் வீட்டின் ஒவ்வொரு மூலையில் இருத்தி வைத்துக் கொண்டு வெளி உலகம் தெரியாமலே வைத்திருந்த முத்தன் –பொன்னியின் கவலையும் அதுதான். முத்தனுக்கும் வள்ளிக்கொடிக்கும் திருமணமான பின்னர் வள்ளிக்கொடி மைத்துனர் இருவருக்கும் திருக்கல் வண்டிலும் மாடும் அவளின் கொடியை விற்று வாங்கிக்கொடுத்துச் சந்தோசப்படுகிறாள். மேலேயுள்ள நிகழ்வுகள் நாவலில் நடக்கும் போது வாசகர் மனதிற்குள் அளப்பெரிய சந்தோசமும் திருப்தியும் உருவாகின்றது.

கொண்டாட்டம் எவ்வளவு திருப்தியளிக்கிறதோ அதைவிடப் பன்மடங்கு கவலையையும், சோகத்தையும் குடிமைகள் சுமக்கிறது.

ஆதிக்கச் சமூகத்திற்கு எதிராகப் போராட்டம் செய்யவில்லை, மிகச் சிறிய உரிமைகளை வேண்டிக் கேட்ட போது மறுக்கப்பட்டன. ஒடுக்கப்பட்ட மக்கள் தம் போக்கில் தொழிலையும், சமூகக் கட்டமைப்பையும் ஏற்படுத்துவதற்கும் இடையூறாக ஆதிக்க சாதியினர் இருக்கின்றார்கள். நாவலின் மையப்பாத்திரமாகக் கருதத்தக்க முத்தன் சமூகக் கட்டமைப்புகளை உடைக்கவும் தமக்கென உரிய அடிப்படை மனித சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும் ஒரு சமயத்தில் முயற்சி செய்கிறார். அதற்கு அவரது நண்பர்கள் உதவுகின்றார்கள். நயினைமார்களை எதிர்த்து முத்தன் தொழில் செய்யத்தொடங்குகிறார். அதுவரை குடிமைகளாக இருந்த முத்தன் வீதிகளில் தலைநிமிர்ந்து நடக்கத்தொடங்குகிறார். அவருக்கான சுதந்திர வாழ்க்கையை, குடும்பதிற்கான அன்றாடத்தே வைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய மாற்றுத்தி றனாளிகளான அண்ணனையும் தம்பியையும் ஒரு சிறிதளவேனும் சம்பாத்தியம் செய்யக்கூடிய தொழிலினை உருவாக்கிக்கொள்கிறார். நண்பர்களான மற்றைய பஞ்சமர் சாதியைச் சேர்ந்தவர்கள் உதவி செய்யத்தொழிலைத் தொடங்குகிறார். ஆனால், இறுதியில் சப்பாணிகளான இரண்டு சகோதரங்களையும் இழக்கிறார். அவரது சலூனும் தீ வைக்கப்படுகிறது. இறுதியில் வீடும் தீ வைக்கப்படுகின்றது. முத்தனும் குடும்பமும் அந்த ஊரை விட்டே போய்விடுகின்றனர். தெணியானின் ஐம்பது வருட அனுபவம், அவரின் கூர்ந்த அவதானிப்பு, சிந்தனை என்பவை மூலம் ஒடுக்கப்பட்டவர்களது போராட்டம் ஆதிக்க சாதியின் முன்னால் நிலைத்து நிற்கமுடியாமல், தளர்ந்து போனது. ஆனால், தோற்றுவிடவில்லை என்பதில் தெணியான் உறுதியாக இருக்கிறார்.

(04)

அடிமை முறையிலும் மிகக் கொடுமையானது சாதிய முறை என்கிறார் அம்பேத்கர். ஒரு மிகச் சாதாரண அம்பட்டர் குடும்பம், கொடிய சாதிய அடக்குமுறையால் அனுபவிக்கின்ற இன்னல்கள் குடிமைகளில் பதிவாகின்றது. ‘வரலாற்றை உருவாக்குவது ஒடுக்குமுறையாளர் தான். அவர்கள் எழுதுகின்ற வரலாறு அவர்களால் ஒடுக்கப்பட்டவர்களின் வரலாறாக இருப்பதில்லை. அது சூறையாடுகின்ற, வன்புணர்ச்சி செய்கின்ற, வறுமையை உருவாக்குகின்ற அவர்களது சொந்த வரலாறே! இதற்கு மாற்றாக ஒடுக்கப்பட்டவர்களால் வேறொரு வரலாறு உருவாக்கப்படுகிறது. ஆனால், இந்த வரலாறை உருவாக்குபவர்கள் நாவலாசிரியர்களும் கவிஞர்களும் தானே தவிர தொழில்ரீதியான அல்லது கல்வித்துறை சார்ந்த வரலாற்றாளர்களல்ல’ என்று ஃபிரான்ஸ் ஃபனொன் கூறுகின்றார். அந்த வகையில் தெணியான் கடத்தியிருக்கின்ற வரலாறு அத்தியாவசியமானது. டானியலோடும் டொமினிக் ஜீவாவோடும் என். கே.ரகுநாதனோடும் சேர்ந்து சாதியத்தின் வீரியத்தை அழிக்கின்ற பணியைத் தெணியான் ‘குடிமைகள்’ மூலம்தொடர்கின்றார்.

உசாத்துணைகள்:

வேலைக்காரிகளின் புத்தகம் – ஷோபாசக்தி

அசோகமித்திரன் கட்டுரைகள் - 2

ஆவணம் இணையதளம்

•

தனிமையின் நூறு ஆண்டுகள்

தர்மு பிரசாத்

அக்கா சந்தி வேம்பில் சாரத்துணியால் கைகள் கட்டப்பட்டிருந்தபடி போராளிகளின் துப்பாக்கியை நெஞ்சிற்கு நேரே எதிர்கொண்டபோது நெடுநாளைக்கு முந்திய மூன்று கோடைகளை நினைத்துக்கொண்டார்.

முதற் கோடை; *அடித்தோய்ந்த மழையில் நனைந்து, திரி திரியாகப் புகைந்தபடியிருந்த அவ்ரோ விமானத்தின் துலக்கமான வடிவம் அலுமினியத்தின் பளபளப்பில் அக்காவிற்கு நினைவில் வந்தது. அவ்ரோ விமானம் வாழைமரங்களை முறித்து வீழ்த்தி வாழைத் தோட்டத்தின் நடுவில், உடைந்த வெள்ளை முட்டை ஓடு போலச் சிதறிக் கிடந்தது. அதனைச் சுற்றி முறிந்திருந்த வாழை மரங்களின் இலைகள் தீயில் கருகியிருந்தன. கறுப்புப் பொட்டின் அளவில் முகில்களுள் மறைந்து திரியும் அவ்ரோவின் உடைந்த பிரமாண்டம் கண்களின் முன் பேருருவமாக இருந்தது. அதன் வளைந்த முன்பக்கத்தில் தன்னிரு கைகளையும் வைத்து அமுத்தினார். எரிந்த அலுமினியச்சூடும், மழைக்குளிரும் அதில் மிச்சமிருந்தன. அவருடைய பத்து விரல்களின் அமுத்தலில் பிரமாண்ட அவ்ரோ விமானம் அசைவற்று செம்பாட்டு மண்ணுள் புதைந்திருந்தது.*

தீப்பற்றி எரிந்த அவ்ரோ விமானம் நிலாவரைக் கிணறு தாண்டியிருந்த தோட்டக்காணியினுள் வீழ்ந்து நொறுங்கிய போது பலாலியிருந்து இராணுவத்தினர் நிலாவரை நோக்கி ஷெல் அடித்தனர். வீழ்ந்த அவ்ரோவின் பாகங்களை மீட்டுப்போக இராணுவம் முன்னேறி நிலாவரைக் கிணறு வரை வரக்கூடும் என்ற அச்சத்தையும் மீறி அக்காவும் அப்பாவும் அவ்ரோ விமானத்தைப் பார்க்கச் சைக்கிளில் புறப்பட்டனர். அம்மா, அப்பாவின் கால்களைப் பிடித்துக் கெஞ்சிக் கேட்டும், கால்களை உதறிவிட்டுத் தன்னுடைய அகலக் கரியர் சைக்கிளில் வெள்ளிப்பூண் போட்ட கொட்டன் தடியையும், அக்காவையும் அப்பா ஏற்றிக் கொண்டார். அக்கா மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். பள்ளிக்கூட வெள்ளைச்சட்டையைக் கூடக் கழட்டியிருக்கவில்லை. புத்தகப்பையை விறாந்தையில் தூக்கி எறிந்துவிட்டு வெள்ளைச்சட்டைச் சிறுமியின் குதூகலத்தில் சைக்கிளில் அக்கா அவ்ரோவைப் பார்க்கப்போன நாளினை செம்பகமாச்சி இப்போதும் கதையாகச் சொல்லுவார். அன்று அக்காவின் கண்களில் அம்மாளாச்சியின் மூர்க்கம் வந்திருந்ததைப் பார்த்ததாகச் சொன்னார். ஊர்ச்சனம் ஆமிக்குப் பயந்து உரப்பை மூட்டைகளுடன் கப்பூதுத் தரவை வெளிக்கு இடம்பெயர்ந்தபோது, அக்காவும் அப்பாவும் சனங்களைக் கிழித்து எதிர்திசையில் பலாலி நோக்கி அவ்ரோவைப் பார்க்கச் சென்றனர். கிட்டினர் செதில் உதிரும் மீன்பெட்டி கட்டிய சைக்கிளை வேலியோரமாகச் சாய்த்து விட்டிருந்தார். மீன் வெட்டும் கூர் ஒடுங்கிய கத்தியுடன் உடைந்த அவ்ரோவினைச் சுற்றி நோட்டமிட்டபடியிருந்தார். சனங்கள் சுற்றி நின்றிருந்தாலும் யாருக்கும் அருகில் செல்லும் துணிச்சல் வரவில்லை. அக்கா, அப்பாவின் சைக்கிளிலிருந்து குதித்தோடி, தன்னிரு கைகளையும் பிரமாண்ட அவ்ரோவில் வைத்து அதனைத் தள்ளிப்பார்த்தார்.

பின்னொரு போதும் அக்கா, கிட்டினரிடம் மீன் வாங்கிச் சமைக்க விடவில்லை. அக்காவுக்குத் தெரியாமல் அம்மா ஒரு மதியம் வாளை மீனைக் கிட்டினரிடம் வாங்கிச் சமைத்திருந்தார். நீண்ட முட்களுடையை நேர்த்தியாக நறுக்கப்பட்டிருந்த வாளை மீனின் சிறு துண்டைக் கூட வாயில் வைக்காமலே இது கிட்டினரின் பெட்டியிலிருந்த மீன் என்றபடி சாப்பாட்டுத் தட்டை முன்னால் தள்ளி வைத்துவிட்டு எழுந்து சென்றார் அக்கா. அம்மா அச்சம் மண்டிய கண்களுடன் அப்பாவைப் பார்த்தார். அப்பா எட்டி, அம்மாவைப் பிடரியைப் பொத்தி அடித்தார். 'தோறை எண்ட பிள்ளையை ஏமாத்தப் பாக்கிறியோ' என்றபடி சாப்பிடாமல் எழுந்து சென்றார். நானும் அம்மாவுமே அன்று வாளை மீன் முழுவதையும் சாப்பிட்டு முடித்தோம். எனக்கு அந்த வாளை மீனில் எந்த வித்தியாசமும் தெரிந்திருக்கவில்லை என்று செம்பகமாச்சியிடம் கேட்ட போது 'உவன் கிட்டினன் அண்டைக்கு அவ்ரோவுக்கை செத்துக் கிடந்த

ஆமிக்காரன்ரை பத்துவிரல்களிலையும் உப்பிடிக் கொத்தாக் கிடந்த மோதிரங்களைக் கழட்டப் பாத்திருக்கிறான். எப்பிடி இழுத்தாலும் உடும்பு போல விரலோடை ஒட்டிக் கிடந்த மோதிரம் கழரேல்லை மோனை, மீன் வெட்டுற கத்தியால ஒரு நறுக்கிலை ரண்டு கைகளையும் வெட்டிக் மீன் பெட்டிக்கை வைச்சுக் கொண்டு வந்துட்டான்' என்றார் தன்னுடைய பூஞ்சணம் படர்ந்த கண்கள் விரிய. அக்காவிடம் கேட்ட போது அவள் 'நீ சின்னப் பொடியன் உனக்கு இதுகள் விளங்காது' என்றார்.



ஓவியம் - ஷமீலா யூசுப் அலி

இரண்டாம் கோடை ;

ஈரப்பிசுபிசுப்பான இருளில் புதிய மண் வாசனையில், வியர்வை வழிய இறுக்கிய கரிய தேகம் நுரையாகப் பொங்கியது. புதிதாக வெட்டப்பட்டிருந்த L வடிவ பங்கரினுள் கால் விரித்து நிலவை நோக்கிப் படுத்திருந்த போது தொடைகளின் வழி அக்காவின் பெண்குறியில் உணர்ந்த வலி அதீத கிளர்வு தருவதாக இருந்தது. பங்கரின் அருகில் நின்ற மாமரத்தில் கொழுவியிருந்த பாரமான கோல்சரின் பச்சைநிறம் நிலவொளியில் பழுத்த மாங்கனிகள் போலத் தெரிந்தன. வெண்மையான நிலவின் கரும்புள்ளித் திட்டுகள் உறுத்துவதாகத் தோன்றிய நொடியில் உச்சம் வந்த ஆண்குறி அக்காவின் யோனிப்பிளவுக்குள் வதங்கிச் சுருண்டது. அதுவே, முதுகின் கீழ் விரித்திருந்த பழைய உரைப்பையில் மிச்சமாயிருந்த நாட்பட்ட உரத்தின் மலவாசனை, வியர்வையோடு சேர்ந்து கலவியின் வாசனையாய் அக்காவின் நினைவின் மடிப்புகளில் தங்கியிருந்தது.

வீட்டையொட்டிக் கிடந்த வெள்ள வாய்க்காலின் முடிவில் போராளி பங்கர் வெட்டத் தொடங்கியபோது அவன் தண்டனையில் வந்திருக்கும் போராளி என்றே ஊரில் எல்லோரும் பேசிக் கொண்டனர். தெருவில் மண்வெட்டியும், சிறிய நார்க்கூடையுடனும் அவர் இரவு பகலாக L வடிவத்தில் மிக மெதுவாக நிலத்தைக் கொத்தியபடி இருந்தான். நார்க்கூடையில் சேர்ந்த மண்ணை வெள்ளவாய்க்காலின் முடிவிலிருந்த பள்ளத்தில் இட்டு நிரவினான். தன்னுடைய பச்சை நிறக் கோல்சரை மாமரத்தில் கொழுவிவிட்டிருந்தான், அவன் கோல்சர் கட்டியிருந்ததை ஊரார் ஒரு போதும் பார்த்திருக்கவில்லை. பின்னேரங்களில் தோட்டக் கிணற்றில் நீர் அள்ளிக் குளிக்க வாளி வாங்க வீட்டிற்கு வருவான். மண் அழுக்கும் புழுதியும் அப்பிக் கிடக்கும் தொளதொளப்பான நீளக் கால்சட்டையும், வெளுறிய வட்டக் கழுத்து பெனியனும் அவனைப் போராளியாகவே நம்ப முடியாத தோற்றத்தைக் கொடுத்திருந்தது. பலம்பொருந்திய, அதீத புனைவுகளால் பின்னப்பட்ட போராளிகள் குறித்த கதைகளிலிருந்து தப்பி வந்துவிட்ட தோற்றத்தில் அவனது உடல் மெலிந்திருந்தது.

இருபத்தியேழு பங்கர்களை வெட்ட வேண்டியது அவனது தண்டனை என்று ராணாசிங் பேக்கரியில் வைத்துச் சொன்னார். இரவில் ராணாசிங் அவனுடன் பங்கரையொட்டி நிற்கும் ஒற்றை மாமரத்தின் கீழ் சாய்ந்திருந்து உரையாடுவதையும், சேர்ந்து சாப்பிடுவதையும் பார்த்திருக்கிறேன். வாளி வாங்க வந்தபோது இது எத்தனையாவது பங்கர் என்று கேட்டேன். சிரித்தபடியே இருப்பதியேழாவது பங்கர் என்றவன், 'மெல்லமா வெட்டுறன் களத்திலை இரத்தமும் ஓலமும் சலிப்பையே தருது இந்தப் பங்கரைச் சாகும்வரை வெட்ட விட்டாலே நல்லா இருக்கும்' என்றான்.

'சாகும் வரை பங்கர் வெட்டினால் ஊரில் மண்குழிகள் தான் மிச்சம் இருக்கும்' என்றேன்.

'எங்களுக்கு இப்ப குழிகள் தான் கனக்கவேணும் ஒளிஞ்சு இருக்கிறதுக்கு இல்லாட்டி அழுகுற வித்துடல்களைப் போட்டு மூட' என்றபடி வாளியுடன் திரும்பி நடந்தான். அன்றிரவு அக்கா நெடுநேரமாகியும் வீடு திரும்பியிருக்கவில்லை. ஊர் முழுவதும் தேடியும் எங்கும் கிடைக்கவில்லை. அக்காவின் சைக்கிள் பள்ளிக்கூடத்தின் தேமா மரத்தின் கீழ் நின்றிருந்தது. அப்பாவும் அம்மாவும் ஊரைச் சுற்றியிருந்த இயக்கக் காம்புகள் எல்லாம் ஏறி இறங்கினார்கள். பொறுப்பாளர்களின் கால்களில் விழுந்து எழுந்தார்கள். அக்கா எந்தத் தடயமும் இல்லாமல் ஊராரின் கண்களிலிருந்து மாயமாக மறைந்து போயிருந்தார். அக்காவையும், பங்கர் வெட்ட வந்த பெடியனையும் தொலைதூர பஸ் ஸ்ராண்டில் பார்த்ததாகச் சில நாட்களின் பின்னர் சுப்பு சொன்னார். அப்பா கண்கள் சிவக்க, மீசையில் வழியும் கள்ளைப் புறங்கையால் துடைத்தபடி 'எளிய சாதி தன்ரை சாதிப்புத்தியக் காட்டிட்டான்' என்று கால் கெண்டைத்தசை துடிக்க உறுமினார். தன் கொட்டன் தடியை எடுத்துக் கொண்டு சுப்பு சொன்ன தொலைதூர ஊருக்கு அக்காவைத் தேடிப்போகப் போவதாக இரைந்தார். அம்மா அவருடைய காலைப் பிடித்து அழுது குழறினார். 'அவளை எண்டாலும் நிம்மதியா இருக்க விடுங்கோ'

என்று கத்தியதையும் கேட்காமல் அம்மாவை வேலியோரமாக உதைத்து வீழ்த்திவிட்டுப் புறப்பட்டு போனார்.

மூன்றாம் கோடை; *பச்சை வோக்கிடோக்கியின் மிகச் சிறிய கம்பி வலையுள்ளிருந்து கரகரத்து ஒலித்த குரல்கள் தடித்துப் புகையாகிக் கரைந்தன. அக்காவிற்கு குரல்களின் வசீகரம் குறித்த அதீத கற்பனைகள் கிளர்வு தருவதாய் இருந்தன. வோக்கிடோக்கியில் கட்டளையிடும் குரல்கள், உதவி கோரி இறைஞ்சும் குரல்கள், பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நடுங்கும் குரல்கள், பாடலை இசைத்தபடி தாக்குதல் அனுமதிக்காகக் காத்திருக்கும் குரல்கள், உடைந்த குரல்கள், தேம்பி அழும் குரல்கள், நீண்ட மௌனங்களைக் கலைக்கும் கரகரப்பு ஒலிகளின் அரூப ஸ்பரிசம் வோக்கிடோக்கியின் கம்பிவலையுள்ளிருந்து கசியும் போதில் பாடலைப் போல ரசித்துக் கேட்டபடியிருந்தார்.*

அக்காவை, அப்பா ஊரிற்கு இழுத்து வந்தபோது அவருடன் இரண்டு பேர் துணைக்கு வந்திருந்தனர். அப்பாவின் கொட்டன் தடியில் ரத்தம் காய்ந்து இறுகிக்கிடந்தது. அக்காவை, அம்மம்மா எழுபது வருடங்களாகக் குனிந்திருந்து கூன் விழுந்த முதுகுடன், புகையூதிச் சமைத்துப்போட்ட பழைய குசினிக்குள் தள்ளிப் பூட்டினார். தாழ்ந்த கூரையுடன் அடுப்புக்கரி படிந்த பழைய குசினி வீட்டையொட்டிய பத்தியுள்ளிருந்தது. அக்கா கால்கள் இடறி நூற்றாண்டின் பழைமைக்குள் விழுந்துவிட்டது போல உணர்ந்து கொண்டார். அப்பா குசினிக்கதவை அடித்துச் சாத்தி, இறுகப் பூட்டி கதவருகில் தன் வெள்ளிப்பூண் போட்ட கொட்டன் தடியையும் நிறுத்தி வைத்திருந்தார். அம்மம்மாவின் குசினியில் அடைக்கப்பட்ட பின்னர் அக்கா நிலத்தை, கதவை, பழைமைபடிந்த சுவரை நகங்களால் பிறாண்டும் சத்தம் கேட்டபடியிருந்தது. வேலுப்பிள்ளைப் பரியாரியின் மகனும் ஒட்டாவி வைத்தியரும் அக்காவின் மஞ்சள் படிந்த நாக்கை நீட்டச் சொல்லிப் பரிசோதித்தும், பச்சைக்களி உருண்டைகளைச் சாப்பிடக் கொடுத்தும் அக்கா இரவுகளில் பிறாண்டுவது நிற்கவில்லை.

இந்தியாவிலிருந்து அம்மன் கோயிலில் சின்னமேளம் ஆடவந்து ஊரின் மிகவும் நம்பிக்கையான வைத்தியரும், நாட்பட்ட நோய்களைக் குணப்படுத்துவதில் வல்லவருமான வேலுப்பிள்ளைப் பரியாரியின் அறைக்குள் பல வருடங்களாக அடைபட்டுக்கிடந்து ஆடுவதையும், பாடுவதையும் மறந்து உடல் பருத்து நடக்கவே சிரமப்படும் ருக்குமணி தான் அக்காவின் பிறாண்டும் பழக்கத்திற்கு மருத்துவம் சொன்னார். நீர் கோத்திருக்கும் வெளிர் கால் மூட்டுக்கள் வரை சேலையை உயர்த்திவிட்டுக் கால்களுக்கு எண்ணெய் பூசியபடி அக்காவின் பிறாண்டலிற்கான மருத்துவத்தைச் சொன்னார். அவர் எங்களூர் ஊர் அம்மன் கோயிலில் கடைசியாக ஆடிய ஆட்டம் ஊராரின் நினைவுகளில் இப்போதும் இருக்கிறது என்று நான் சொன்னபோது. அந்த ஆட்டத்துக்குத் தான் வேலுப்பரியாரியார் தன்னுடைய சொத்தில் பாதியை எழுதி வைத்திருக்கிறார் என்று சிரித்தார். ருக்குமணியின் ஆலோசனைப்படி - ருக்குமணியைக் வேலுப்பரியாரிக்காகக் கடத்தி வந்து கொடுத்த - அப்பா இரவுகளில் அக்கா அடைக்கப்பட்டிருந்த குசினிக்கதவைத் திறந்துவிட்டார்.

அதன் பின்னர்தான் இரவில் ஊர்ச் சந்திவேம்பு தாண்டிக் கப்பூதுத் தரவைவெளி, மஸ்கன் சீற் கொம்பனியொட்டிய வெங்காயத் தோட்டங்கள், கைத்தொழிற்பேட்டையின் குட்டைப் பத்தைகளில் எல்லாம் அக்காவைப் பார்த்ததாக ஊரார் பேசிக்கொண்டனர். அம்மன் கோயிலின் கருவறைக்குள்ளும், வைரவர் கோயிலின் சூலத்திலும் குருதிக்கறை படிந்த துணித் துண்டுகள் தொங்கத் தொடங்கியதும் அதன் பின்னர்தான். அதை அச்சத்தின் குறியீடாக்கி செம்பகமாச்சி 'இது மூதன்னை வெளிக்கிருக்கும் காலம்' எனச் சொன்னார். நிலம் வெளுக்க முன்னர் அக்கா வீட்டு முற்றத்தைக் கூட்டுவதையும், நித்தியகல்யாணிப் பூக்களைக் கொய்வதையும் படிக்க வேளைக்கு எழும்பும் நாட்களில் பார்த்திருக்கிறேன். நிலம் வெளுக்கத் தொடங்கியதும் அக்கா குசினிக்குள் நுழைந்து உட்பக்கமாகப் பூட்டிக் கொள்வார். இரண்டு நாட்களாக வீடு திரும்பியிருக்காத அக்கா திரும்பிவந்தபோது அவரிடமிருந்து நீரின் பாசி வாசனை வந்தது. அவர் கையில் செய்தித்தாளில் சுற்றப்பட்டிருந்த வோக்கிடோக்கி ஒன்றையும் கொண்டுவந்திருந்தார். அக்கா தொலைந்து போனதை முற்றம் கூட்டாமல் இருப்பதையும், கொய்யப்படாத நித்தியகல்யாணிப் பூக்கள் வாடி உதிர்வதையும் வைத்தே நாங்கள் அறிந்து கொண்டோம். மணியம்மாமா குட்டியபுலம் செம்பாட்டுத்தறையைத் தாண்டிப் பலாலிப்பக்கமாக பத்தைகளை விலத்தி விரிந்த முடி காற்றில் பறக்க அக்கா போவதைப் பார்த்திருந்ததாகப் பலகாலம் கழித்து என்னிடம் சொன்னார். அப்போது அக்கா பலரின் நினைவுகளிலிருந்தும் அழிந்து போயிருந்தார். என்னிடம் வோக்கிடோக்கியிருந்து வரும் குரல்களைக் கேட்டபடி அதன் முன்னால் தன்னிரு கால்களயும் விரித்து அமர்ந்திருக்கும் வாடல் உருவமாகவே மிஞ்சியிருந்தார்.

***

தாக்குலுக்குத் தொடக்கக் கட்டளையிடும் தளபதியின் குரலைக் கேட்கும் நாட்களில், வோக்கிடோக்கியின்

முன்னால் தன்னிரு கால்களையும் விரித்து புழையில் விரல்களை நுழைத்து மைதுனம் செய்யும் வேட்கை துப்பாக்கிப் படையை நெஞ்சிற்கு நேர எதிர்கொண்ட அன்றும் அக்காவிற்கு அரூபமாய் எழுந்தது. அக்காவின் மைதுனம் செய்யும் கைகள் சந்திவேம்பின் தாழ்ந்த கிளைகளில் கிழித்த சாரத்துணியால் மடக்கிக் கட்டப்பட்டிருந்தன. வற்றியுலர்ந்த தேகத்தின் எலும்புகளில் முழு நீளக் கத்தரிப்பூ நிறச் சீத்தைத் சட்டை படிந்து போயிருந்தது. நிமிர்ந்த தலையில் அடர்த்தியான செம்பட்டை மயிர் முகத்தில் பிரியாகப் படர்ந்திருந்தன. விரிந்த கால்களின் தளர்வான விரல்கள் நிலத்தில் கோடுகளாக இழுபட்டன. உச்சியில் வெய்யில், உக்கிரமாக எரித்த கோடையின் தகிப்பில் ஊரே முச்சந்தியில் கூடியிருந்தது. அச்சமும், கிளர்வும் உச்சியில் எரிக்கும் வெய்யிலை இன்னும் உக்கிரமாக்கின. பின்னிருக்கைகளில் ஆயுதம் தாங்கிய மோட்டார் சைக்கிள்கள் வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. வீட்டையொட்டிச் சரிந்து கிடந்த கல்லில் அப்பா அமர்ந்திருந்தார். அவருடைய காலின் கெண்டைத்தசை துடித்துக் கொண்டிருந்தது. ஆளுயரமான பூண் போட்ட கொட்டன் தடி அவரருகில் வேலியில் சாய்ந்து கிடந்தது. அதன் பழைமைமையின் வழுவழுப்பில் வெய்யில் எண்ணெய் போல வழிந்தது. கிணற்றடி வேலிகளில் பெண்களின் அடுப்புக் கரிபடிந்த முகங்கள் இருளடைந்து கிடந்தன. கிட்டினர், ஒற்றைக் காலை நிலத்தில் ஊன்றியபடி சைக்கிளில் சரிந்து நின்றார். கரியரில் கட்டப்பட்டிருந்த செதில்கள் உதிரும் மர மீன் பெட்டி சரிந்து அதிலிருந்து சிவந்த நீர்க் கோடுகளாக ஒழுகியபடியிருந்தன. சுப்பு வெற்றிலையை மென்ற வாயைத் தூக்கி கிரவல் வீதியில் எட்டித் உமிழ்ந்தார். வெள்ளைச்சட்டைச் சிறுவர்கள் கிணற்றடி வேலியை ஒட்டிக் கிடந்த நீண்ட சீமெந்துக் குந்தில் நெருக்கி அமர்ந்திருந்தனர். செம்பகமாச்சி நெடுநாட்களுக்கு முந்திய வைரவர் வேள்வியை குருதிப் பிசுபிசுப்பில் நினைவு கூர்ந்தார். பண்டா பேக்கரியின் கடைசி எச்சமாக ஊரில் மிஞ்சியிருக்கும், வலதுகை முடமாகிப்போன சுதுபுஞ்சே மேவாயைத் தடவியபடி, குந்தியிருக்கத் தோதான இடம் தேடினார். விமலா அன்ரி வீட்டோடு தங்கிவிட்ட ‘கூர்க்காஸ்’ ராணாசிங் தன்னுடைய அழுக்குப்படிந்த பச்சைநிற ‘டர்பன்’ துணியை தலையிலிருந்து அவிழ்த்து, கைகளில் பந்தமாகச் சுற்றினார். அறுக்கப்படாத நீளக் கூந்தல் வெள்ளை முதுகில் கறுப்பு அருவியாய் சரிந்து இறங்கியது. முதுகின் ஓரமாக, வலது தோள்பட்டைக்கு மேலாக, நெடுநாளாக ஆறாத வெட்டுக்காயம் சிவந்து, வாய்பிளந்தபடி வெய்யிலில் காய்ந்தது. காயத்தைச் சுற்றிச் செதில்களாய் சீழ் இறுக்கிக் கிடந்தது.

அக்கா பிரிபிரியாக முகத்தில் படர்ந்திருக்கும் மயிரை விலத்தி வீதியைப் பார்த்தார். போராளி மிகவும் பழைய மொடலான சி-ஸட் 75 பிஸ்ட்ரலின் விசையை இழுத்துச் சரி பார்ப்பது கலங்கலாகத் தெரிந்தது. போராளிகளும், துவக்குகளும் தூரத்திலிருப்பது போல தடித்த திரையொன்று அக்காவின் கண்களுக்கு அருகில் கலங்கலாக அசைந்தது. செத்தல் மிளகாய் வரும் சாக்கினால் முகத்தை மறைத்துக் கழுத்தில் சணல்கயிறால் சுருக்கிட்டிருந்த போராளியின் கண்கள் சிறிய துளைகளின் ஊடே அக்காவை ஊடுருவிப் பார்த்தது. மிளகாய் சாக்கின் துளை அவனுடைய முகத்தில் சுருங்கிக் கிடந்தது. சுருக்கை இழுத்துச் சரி செய்த போராளி துப்பாக்கியை வான் நோக்கித் தூக்கி, அமைதியாக இருக்கும் படி விரல்களால் ஊராரைப் பார்த்துச் சைகை செய்தான். கூட்டத்தில் கடும் இரைச்சலும், கத்தலும் அலையாய் எழுந்தன. ’வெடிக்காத துவக்குக்கு ஆரும் பயப்பிட மாட்டினம்’ என்றார் அக்கா. செருப்புக்கால்களை தரையில் ஓங்கி உதைத்தபடி வான் நோக்கி இரண்டு முறைகள் சுட்டான். சனங்களின் இரைச்சல் இன்னும் அதிகமாகியது. போராளியின் துவக்கு அக்காவின் நெஞ்சிற்கு நேராயிருந்து. அவருடைய தலையைக் குறி பார்த்தது.

சிறிய தாளில் கவனமாக எழுதப்பட்டிருந்த சொற்களை அழுத்தம் திருத்தமாக வெள்ளைச் சட்டைச் சிறுவன் வாசித்தபடியிருந்தான். ஊரின் இரைச்சலையும் விலத்தி மிகக் கூர்மையாகக் கேட்டபடியிருந்தது அவனது குரல். அக்கா உதட்டைச் சுழித்துச் சிரித்தார். வெண்மையான பற்கள் அழகாக இருந்தன. சீத்தைத் துணி காற்றில் அசைந்தது. துவக்கின் விசை இழுபடும் சத்தம் இரைச்சலிலும், வெள்ளைச் சட்டை சிறுவனின் குரலூடும் துல்லியமான ஓசையாக் கேட்டது. அக்கா ‘இது இனி ஒருக்காலும் வெடிக்காத துவக்கு என்றார்.’ அவருடைய கண்கள் துவக்கின் முனையை ஊடுருவிப்பார்த்த படியிருந்தது. துவக்கினுள் சுருள் விசை உடைந்த சத்தம் கேட்டது. வெள்ளைச் சட்டை சிறுவன் தாளிலிருந்து கண்களைத் தூக்கி துவக்கைப் பார்த்தான். அப்பா வேலியில் சாத்தி வைக்கப்பட்டிருந்த கொட்டன் தடியை எடுத்துப் போராளியிடம் நீட்டினார். ‘ஒரடீல கனக்க நெத்திச் சில்லுகளை தேங்காய் சிரட்டை மாரி உடைச்சிருக்கு உவளுக்கு ஒரு அடி போதும் சீவன் போய்டும்’ என்றார். கிட்டினர் மீன் பெட்டியில் கையை விட்டு முனை ஒடுங்கிய கத்தியை எடுத்து மர மீன் பெட்டியின் மீது வைத்தார். செம்பகமாச்சி துவக்கு வெடிக்காதது அம்மாளாச்சியின் அருள் என்றார். அம்மாளாச்சி தன் கண்களின் முன்னால் இரத்தப்பலியை எடுக்க ஒருநாளும் விடமாட்டாள் என்று நிலத்தில் அடித்துச் சத்தியமும் செய்தார். இனி ஒருபோதும் மூதன்னை அம்மாளாச்சி ஊருக்குத் திரும்பி வரமாட்டாள் என்றும், அந்தக் காலம் மலையேறிப்

போய்விட்டது என்றபடி எழுந்து சென்று அக்கா கட்டப்பட்டிருந்த சந்திவேம்பின் வேரில் தொட்டு 'எண்ட அம்மாளாச்சி' என்று கண்களில் ஒற்றிக் கொண்டார்.

சுருள் வில் உடைந்த துப்பாக்கியை அவர்களால் சரி செய்யமுடியவில்ல. அதை அவர்கள் தூக்கி வீசிடாமல் மிகவும் பத்திரமாக செய்தித்தாளில் பொதிந்து வைத்தனர். அக்காவுக்கான மாற்றுத் தண்டனை வகைகள் பலராலும் உரத்துச் சொல்லப்பட்டன. போராளிகளால் அந்தத் தண்டனை முறைகள் மூர்க்கமாகவும், உடனடியாகவும் நிராகரிக்கப்பட்டது மட்டுமில்லாது அவை காட்டுமிராண்டித்தனமான முறைமைகள் எனவும், மீறி முயற்சிப்பவர்கள் பாரிய விளைவுகளைச் சந்திக்கவேண்டி வரும் என்று எச்சரிக்கவும்பட்டனர். 'துவக்குகளைத் விட துல்லியமான கருவி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை புதுத் துவக்கு நாளைக்கு வந்துவிடும் ஒரு நாளில் இந்த அழகிய உடலுக்கு ஒன்றும் நடந்துவிடாது' என்றான் மிளகாய்ச்சாக்கைப் போர்த்தியிருந்த போராளி. அக்காவின் தண்டனை அடுத்த நாளுக்குத் தள்ளி வைக்கப் பட்டிருப்பதை அறிவித்த போராளிகள் மோட்டார் சைக்கிள்களில் ஏறிச் சென்றனர். ஊரார் சந்திவேம்பை விட்டுக் கலைந்து சென்ற போது இருளத் தொடங்கியிருந்தது. புதிய கைத்துவக்கைப் பெரிய காம்பிலிருந்து எடுத்துவர இருவர் மோட்டார் சைக்கிளில் உடனடியாக விரைந்து சென்றார்கள். விரைந்து சென்றவர்கள் பின் ஒரு போதும் ஊர் திரும்பிவரவில்லை. அவர்கள் சென்ற மோட்டார் சைக்கிள் நெடுநாட்களின் பின்னர் ஊர்ச் சுடலையின் தூர்ந்த கிணறைத் தூர் வாரிய நாளில் ஊராரால் கறள் பிடித்துக் கண்டெடுக்கப்பட்டது. அதில் கட்டப்படிருந்த வெள்ளிச் சிலுவையை வைத்து மொறிஸ் அண்ணன் தன்னுடைய அப்பாவின் மோட்டார் சைக்கிள் தான் அது என்பதை உறுதிப்படுத்தினார். ஆனால், ஊராரின் நினைவுகளில் இருந்து துப்பாக்கி எடுத்து வர விரைந்து சென்றவர்களின் முகங்கள் முழுவதுமாக அழிந்து போயிருந்தன.

அக்கா, அக்குளிர் இரவில் வேம்பின் கிளைகளில் கட்டப்படிருந்த கைகளில் முழுப்பாரத்தையும் கொடுத்து ஆழ்ந்து தூங்கிப் போயிருந்ததைத் தான் பின் இரவில் மூத்திரம் பெய்ய வெளியில் வந்தபோது பார்த்ததாக, சுதுபுஞ்சே பஸ்ஸிற்குக் காத்திருந்த ஒரு மழைநாளில் ,கொடிகாமத்தில் வைத்து என்னிடம் சொன்னான். நான் திரும்ப ஊருக்கு போகப்போவதாக அவனிடம் சொன்னேன். இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட ஊருக்கு தான் ஒருபோதும் திரும்பிவரப்போவதிலை என்றும், வன்னிப்பக்கமாகப் போகப்போவதாகவும் சொன்னான். அதன் பின் ஒரு நாளும் அவன் ஊருக்குத்



திரும்பியிருக்கவில்லை. நான் அன்றைய பின்னிரவில் யன்னலூடே பார்த்த போது அப்பா தூக்கம் வராமல் கயிற்றுக் கட்டிலில் புரண்டு கொண்டிருந்தார். அவருடைய கொட்டன் தடி அவரருகில் கிடந்தது. அக்காவின் உடல் எடையற்று காற்றில் மிதப்பது போல தூரத்தில் தெரிந்தது. நான் அதிகாலையில் துப்பாக்கிவேட்டுகள் கேட்டுக் கண் விழித்த போது மேற்கில் பலாலிப் பக்கமாக வெடிச்சத்தங்களும், ஷெல்லும் ஓயாமல் கேட்ட படியிருந்தன. கூர்ந்து கேட்ட போது சில துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டன. அம்மா உரப்பையில் சாமான்களை மூட்டையாகக் கட்டிக் கொண்டிருந்தார். எட்டி யன்னலூடு வெளிவாசலைத் தாண்டி அக்காவைப் பார்த்தேன். சந்திவேம்பின் கீழ் தன்னிரு கைகளிலும் அக்கா ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்.

செம்பகமாச்சி தானொருபோதும் ஊரைவிட்டு வரப்போவதில்லை என்றும், உக்கி மண்ணோடு மண்ணாகப் போனாலும் அம்மாளாச்சியின் நிலத்திலேயே இருக்கப்போவதாகவும் உறுதியான குரலில் சொன்னார். குட்டியப்புலம் தோட்டாத்திற்கு நீர் இறைக்கச் சென்ற மான்மணியம் மாமா 'பெடியள் ரவோடை ரவாகவே விற்றோ பண்ணிப் போய்ட்டங்கள் ஒரு நாயளையும் காணல்ல அவங்களுக்குத் தெரியும் ஆமி வெளிக்கிடப் போறங்கள் எண்டது துலைஞ்சுபோவார்' என்று அழுவாரைப் போல சொன்னார். 'ஆமி அரைமணத்தியாலம் பிந்தி வெளிக்கிட்டிருந்தாங்கள் எண்டா செம்பாட்டுத் தறைக்கு தண்ணி கட்டி முடிச்சிருப்பன்' என்று அங்கலாய்த்தார். நான் அப்பாவின் அகலக்கரியர் சைக்கிளில் இருந்தபடி சந்திவேம்பைக் கடந்து சென்ற போது அக்கா கைகளில் முண்டு கொடுத்துத் தொங்கியபடி வீதியை வேடிக்கை பார்த்தபடியிருந்தார்.

நாங்கள் தார்வீதியைக் கடந்து, மாட்டொழுங்கை முடிந்து, சுடலை தாண்டிப் போகும் போது ஊரைத்

திரும்பிப் பார்த்தேன் அக்காவின் மெலிந்த சீத்தைத் துணிபோர்த்திய உடல் காற்றில் அப்படியே எழும்பி முகில்களோடு முகில்களாக மிதந்து முழுநிலவு போல எங்களுடனே வந்தது. பின்னர் அப்படியே மேல் எழுந்து வான் நோக்கிச் சென்று புள்ளியாய் மறைந்தது. அக்காவின் புனிதவுடல் காற்றில் எழுந்து வான்நோக்கிச் சென்ற அந்த நாள் அக்டோபர் முப்பது ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று அய்ந்து என்று சொன்னால் நீ அதை மறுத்து இல்லையது ஆயிரத்துத் தொள்ளாயிரத்தித் தொண்ணூறு அக்டோபர் இருபது என்று சொல்லக் கூடும்.

***

அப்பாவின் வெள்ளிப் பூண் போட்ட கொட்டன் தடி : கொட்டன் தடி பலரின் நெற்றிச் சில்லுகளை உடைத்ததை அப்பா கதை கதையாகச் சொல்லுவார். ஊரின் சித்திர வாத்தியாரான 'வைட் அண்ட் வைட்' துரை மாஸ்டர் தலைமையில் அம்மன் கோயில் நுழைவுப்போராட்டம் நடந்தபோது நைனார் பெரியமணியத்தின் பக்கத்தில் அப்பா தான் முக்கிய கையாக இருந்தவராம். கோயிலின் முன்வாசல் மரக்கதவுகளை இழுத்துச் சாத்தி இரும்புச்சங்கிலியால் கட்டிவிட்டு. இரவு பகலாகத் தனி ஆளாகக் கதவின் ஓரமாகக் கொட்டன் தடியுடன் குந்தியிருந்தாராம். அம்மா பெரியமணியம் வீட்டிலிருந்து இரண்டுவேளைச் சாப்பாட்டையும் கோயில் வாசலிற்கே கொண்டு போய்க் கொடுப்பாராம். பூண் போட்ட கொட்டன் தடியால் அப்பா துரை மாஸ்டருடைய நெற்றிச் சில்லைக் கோயில் வாசலில் வைத்துப் பிளந்தாராம். மாஸ்ரரின் 'வைட் அண்ட் வைட்' முழுச் சிவப்பாக ரத்தம் ஊறித் தொப்பலாக நனைந்த போதும் மாஸ்டர் ஒரு அடிகூட பின்னுக்கு எடுத்து வைக்கவில்லையாம். மாஸ்ரருடையது தான் அப்பாவின் கொட்டன் தடி, கடைசியாகப் பிளந்த நெற்றிச் சில்லு என்றார் அம்மா. அப்பாவிடம் கேட்டால் 'மூத்திரம் பெய்யப் போன இடைவெளியிலை கோயிலுக்கை போய்ட்டாங்கள் திருட்டு நாய்கள்' என்பார். பின்னொரு நாளில் வெள்ள வாய்க்காலை ஒட்டிக் கிடந்த L வடிவ பங்கரில் தேங்கியிருந்த வெள்ளத்தில் அப்பாவைச் சுட்டுப் போட்டிருந்த அன்றும் வெள்ளிப் பூண் போட்ட கொட்டன் தடியும் அவரின் பக்கத்தில் இருந்தது. பலூன் போல ஊதி பெருத்திருந்த உடலை அவசரமாகச் சுடலையில் எரித்த போது அந்தத் தூமைக் கொட்டனையும் அவருடன் சேர்த்து எரிக்க சொல்லி அம்மா இரைந்து அழுதார். காடாற்ற வேண்டி அப்பாவின் சாம்பலைக் கிளறியபோது கொட்டன் தடியின் வெள்ளிப் பூண் தீயில் எரியாமல் பளபளப்புடன் மிஞ்சியிருந்தது.

L வடிவ பங்கர் : தண்டனை பெற்ற போராளியால் நேர்த்தியாக வெட்டப்பட்ட பங்கருள் தொடக்கத்தில் குறை பீடித் துண்டுகளும், சாராயப் போத்தல்களுமே இறைந்து கிடந்தன. அடியில் கிழிந்த உரம் வந்த உரப்பையும் கிடந்தது. விமலா அன்ரி வீட்டுக் குப்பைகளை அதனுள் கொட்டுவதையும் சில தடவை பார்த்திருக்கிறேன். அடுத்து வந்த மாரிகாலத்தில் வெள்ள நீரால் நிரம்பி வழிந்த பங்கரினுள் வாற்பேத்தைகளும் தவளைக் குஞ்சுகளும் முதலில் வளர்ந்தன. கோடையில் அந்த வெள்ள நீர் பங்கரின் அடியில் சிறு குட்டையாகத் தேங்கிக் கிடந்தது. மிக உக்கிரமான கோடை நாட்களிலும் நீர்ததும்பும் மாட்டின் கண்கள் போல நீர் வற்றாமல் ஈரலிப்பாக இருந்தது. அப்பாவினது உட்பட ஆறு உடல்கள் அந்தக் குட்டை நீரில் அழுகி மிதந்திருக்கிறது. ஊர், பெயர் தெரியாத பெண்ணின் நிர்வாண உடல் நெடுநாட்களுக்குக் கவனிப்பாரற்றுக் கிடந்தது. அப்பா தான் உருக்குலைந்த அந்தப் பெண்ணின் உடலைத் தனியாளாகத் தேசிமரத்தின் கீழொரு ஊரடங்கு இரவிற் புதைத்தார். அந்தப் பங்கர் ஊரின் வீ.சிக்காணியில் இருப்பதால் யாராலும் தூர்த்திட முடியவில்லை. இப்போதும் வற்றாத நீரின் அடியாழ ஈரலிப்புடன், பச்சை மண்வாசனையுடன் படுகுழி போல அங்கே இருப்பதை ஊர்ப்பக்கம் போனால் வெள்ளவாய்க்காலின் முடிவில் காணலாம்.

பச்சை வோக்கிடோக்கி : ஓரங்களில் உடைந்து பச்சை நூல் நேர்த்தியாக வரியப்பட்டிருந்த பச்சை வோக்கிடோக்கி கனமானதாக இருந்தது. அதன் சிறிய வட்டமான கம்பி வலை தூசிபடிந்து எண்ணைப் பிசுபிசுப்பில் இருந்தது. அதன் ஒலி அச்சமூட்டுவதாயிருந்தது. அக்கா அதில் வரும் ஆண் குரல்களை ஆர்வமாகக் கேட்டபடியிருப்பார். பெண்குரல்கள் வரும் போது அவசரமாக அதன் சிறு முனையைத் திருப்பி விடுவார். வோக்கிடோக்கி இருண்ட குசினியின் ஒட்டறை படிந்த புகைபோக்கிப் பொந்திலும், பழைய காய்கறி போடும் கூடையிலும் இருப்பதைப் பார்த்திருக்கிறேன். ஒரு நாள் ஊரின் தளபதி குசினிக் கதவை உடைத்துத் திறந்து அக்காவைக் கைது செய்த போது ஊரின் முதலாவது வோக்கிடோக்கி வைத்திருந்த பெண் என்ற பெயர் அக்காவிற்கு வந்தது. அந்தப் பச்சை நூல் வரிந்த வாக்கி-டோக்கியை அக்காவிற்கு எதிரான முக்கிய சாட்சியாக ஊரின் முன் வைத்த போது அது ஒரு நாளும் வேலை செய்யாத துருப்பிடித்த வோக்கிடோக்கி என்றார் அக்கா. அதை அப்பாவும், தளபதியும், ஊராரும்... யாருமே நம்பவில்லை.

(கபிரியேல் கார்சியா மார்க்கேஸ் நினைவுகளுக்கு)

கதைகளின் அழகியலும் புதிய கதை சொல்லிகளும்

அனோஜன் பாலகிருஷ்ணன்

1

இதுதான் இலக்கியம் என்று ஒரு வரையறைக்குள் இலக்கியத்திற்கான பண்புகளை பொதுமைப்படுத்தி அடக்கிவிட முடியாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான புரிதல்கள் இலக்கியத்தின் மேல் இருக்கும். தான் நம்புவதை இலக்கியமாகக் கொள்ள அவர்களுக்கு முழுச்சுதந்திரமும் இருக்கின்றது. அதே போல் அதை மறுத்து விவாதிக்கவும் மற்றவர்களுக்கும் சுதந்திரம் இருக்கின்றது. இதனால் எப்போதும் இலக்கிய வாதிகளிடம் இலக்கியச் சண்டைகள் ஓயாமல் நிகழ்ந்து கொண்டிருக்கும். ஒருவர் சொல்வதைக் கேட்டும் மறுத்தும் அவர்களுக்கிடையில் விவாதம் நிகழ்ந்து கொண்டிருக்கும், இந்த ஓயாத செயற்பாடு சிலசமயம் வம்புதும்புகளைக் கிளறிவிட்டாலும் அதன் நீட்சி தான் இலக்கியம் என்னும் இயக்கத்தைப் புறவயமாக நிகழ்த்துகிறது. வம்பு தும்புகள் வழியே இலக்கியத்திற்குள் நுழைந்து தீவிர வாசகர்களானவர்கள் நிறையப்பேர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

சமகாலத்தில் எழுதிக்கொண்டிருப்பவர்கள் இதுதான் இலக்கியம் என்ற புரிதலில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான நிலைப்பாட்டுடன் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். புதிதாக எழுதவரும்போது இளம் எழுத்தாளர்களுக்கு இருக்கக்கூடிய முக்கிய பிரச்சினையே அனுபவம் சார்ந்ததுதான். தமது வாழ்க்கையில் நிகழ்ந்த அலைக்கழிப்புகளின் ஊடாக ஒரு பொதுப்பார்வையை பெற்றிருந்தாலே மேலதிகமாக ஒன்றைப் புதிதாகச் சொல்ல இயலுமாகவிருக்கின்றது. இலக்கியத்தின் அடிப்படையே இங்கிருந்துதான் ஆரம்பமாகின்றது.

முன்னைய தலைமுறையுடன் ஒப்பிடும் போது இன்றிருக்கக்கூடிய தலைமுறைக்கு அதிகமான அலைக்கழிப்புகள் புறவயமாகச் சாத்தியம் இல்லாமலிருக்கலாம். பெரும்பாலும் அனைத்து வசதிகளும் கைகளுக்குக் கிடைக்கின்றன. எல்லா வசதிகளும் இருக்கக்கூடிய ஒருவர், சுயமாக அலைக்கழிப்புகள் ஊடாக எதையும் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு தலைமுறையில் இருக்கக்கூடிய ஒருவர் புதிதாக என்ன எழுதிவிட முடியும் என்ற கேள்வி எழுவது இயல்பானதுதான்.

மேம்போக்காக இந்தக் கேள்விகள் எழுந்தாலும் இன்றைய தலைமுறையில் ஒரு புனைவு எழுத்தாளர் எழுந்து வருவது அத்தனை கடினமானதா என்ற கேள்விக்கான விடையைக் கொஞ்சம் ஆழமாகவே பார்க்க வேண்டும்.

அசலான கதைகள் சொந்தமாகச் சொல்வதற்கு அனுபவத்தின் ஊடாகத் திரண்ட ஒன்று இருக்கும்போதே சாத்தியமாகும். அனுபவங்கள் நேரடி வாழ்க்கையின் அலைக்கழிப்பிலிருந்து உருவாகின்றன..

புனைவுக்குத் தேவையான புறவயத் தகவல்கள் அவதானிப்பு ஊடாக உருவாகினாலும், அகவய உணர்வுகளும் இயல்பாகவே விரியும் உள்ளகத் தேடலுமே படைப்புலகத்தைத் தீர்மானிக்கின்றன. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான தனித்துவங்கள் உருவாகின்றன. இந்தத் தனித்துவமான படைப்புலகமே அவரவரின் ஒட்டுமொத்த இலக்கியப் போக்கைத் தீர்மானிக்கின்றது.

ஈழத்தில் இதுவரை இந்தப் படைப்புலகத்தை மையப்படுத்தி விவாதங்கள் நிகழ்ந்திருக்கின்றனவா என்று பார்த்தால் எனக்குத் தெரிந்து அவ்வாறு இல்லை என்றே தோன்றுகின்றது. ஈழத்து இலக்கிய உலகம் வெறுமே கோட்பாடுகளுடன் தங்கி படைப்பூக்கமற்ற பாலைவனமாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகக் கொள்ள முடியும்.

சமீபகாலமாக ஈழத்தில் புனைவுகள் எழுத ஆரம்பித்த எழுத்தாளர்களிடம் புதுவிதமான நம்பிக்கையைப் பெறக்கூடியதாக இருக்கின்றது. அழகியல் சார்ந்து அவர்களின் மீது எதிர்பார்ப்பை அதிகரிக்க முடிகின்றது.

2

தர்மு பிரசாத்

தர்மு பிரசாத்தின் சிறுகதைகள் அதிகம் படிமங்கள் ஊடாக கதைகளை நகர்த்திச் செல்கின்றன. போருக்குப் பிந்தையை மானுட மனநிலையின் சிதைவுகளைத் தான் இவரின் கதைகள் சொல்கின்றன. வன்முறையின் கொடூர அடக்குமுறைகள் தலைமுறை கடந்து எப்படிப் பயணிக்கின்றன என்பதே இவரின் புனைவு சிருஷ்டிப்பாக இருக்கின்றது. தாயகம் - புலம்பெயர் தேசம் இரண்டுக்கும் இடையில் கரைந்த அனுபவங்களின் மயக்க நிலையாகப் படிமங்கள் உருப்பெறுகின்றன. நகரங்களின் பிரமாண்டங்கள் மீது தர்மு பிரசாத்துக்கு பிரமிப்பு இருக்கின்றது. அதிகம் ஓய்ந்த நகரத்தின் களைப்பு புறவயமாக அவரால் காட்சிப்படுத்தப்படுகின்றது. ஒருவகையில் புறவயமான கதை சொல்லலையே தர்மு பிரசாத் உருவாக்குகின்றார். கதைசொல்லியின் பார்வையில் கதாமாந்தர்களின் கோணத்தில் பொறுக்கப்படும் விம்பங்கள் பக்கங்களை நிரப்புகின்றன. இந்த விம்பங்கள் ஊடாகவே கதை மாந்தர்களின் அகவய உணர்வுகளை வாசிப்பவர்களால் உருவாக்கப்பட வேண்டியுள்ளது. அகவய உணர்வுகளை வாசிப்பவர்களின் ஊகத்துக்கே தர்மு பிரசாத் விட்டுவிடுகிறார். இது தேர்ந்த மூளை உழைப்பை வாசிப்புக்குக் கோருகின்றது. சில சமயம் இதுவே கதையை வாசித்துப் புரிந்துகொள்ள களைப்பை உருவாக்குகின்றது. கட்டிறுக்கமான மொழிநடை வாசித்துப் புரிந்துகொள்ள பலசமயம் தடங்கல்களை விதித்தாலும் அதுவே சொல்முறையின் இயல்பாக இருக்கிறது. இந்த நடையின் தாக்கம் எந்த முன்னோடிகளின் பாதிப்பும் இல்லாமல் இருப்பது ஒருவகையில் அவரின் தனித்துவத்தைக் காட்டுகின்றது.

யதார்த்தன்

யதார்த்தனின் முதல் சிறுகதைப் புத்தகம் ‘மெடூசாவின் கண்களின் முன் நிறுத்தப்பட்ட காலம்’

வெளியாகியுள்ளது. பெரும்பாலும் வன்னி நிலப்பரப்பில் வாழ்ந்தவர்களை கதை நாயகர்களாகக் கொண்டு பேசும் கதைகள். மனித மனங்களின் கீழ்மையைச் சொல்லும் கதைகளாக இவை இருக்கின்றன. ஆனால், மெல்லுணர்ச்சியை *(sentiment)* சீண்டும் கதைகளாகவே இருக்கின்றன. அதைத்தாண்டி இக்கதைக் களம் உள்ளடுக்குகளில் விரியும் தளம் வெற்றிடமாகவே இருக்கின்றது. எளிய மனிதர்களின் ஆசைகளும் அவர்களின் வீழ்ச்சியும், உலகமயமாக்கலின் பின்பு சமூக வலைத்தளப் பாவனைகளின் அதிகரிப்பின் பின்பு, யுத்தம் ஓய்ந்த பின் எழுந்து வந்திருக்கும் தலைமுறையின் வாழ்க்கை மீதான அவதானிப்புகளை யதார்த்தனின் கதைகள் இயல்பாக முன்வைக்கின்றன.

பெரும்பாலான கதைகள் பேச்சு மொழியில் சொல்லப்படுகின்றன. உலகமயமாக்கல் சூழலுக்குப் பின்பு ஏற்பட்டு இருக்கும் பேச்சு மொழி ரீதியிலான மாற்றத்தை இவரின் கதைகளில் நுண்மையாக அவதானிக்கலாம். எஸ்.பொ எழுதிய யாழ்ப்பாண மொழி இன்றில்லை. அவர்களுக்குப் பின் வந்த ராகவன், ஷோபாசக்தி போன்றோர் எழுதிய பேச்சு மொழியும் இன்று மாறிவிட்டது. யதார்த்தன் சொல்லிச் செல்லும் மொழி என்பது விவிலியத்தையும், இன்றைய உருமாறிய வடக்கின் பேச்சு மொழியையும் பிணைத்து அவருக்குரிய தனித்துவத்துடன் ஒப்பேற்றும் ஒன்று.

ஒட்டுமொத்தமாக யதார்த்தனின் படைப்புலகம் மானுடர்களின் அன்பைத் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கும் சக மனிதர்களின் கீழ்மையையே சொல்கின்றது. ஆ.மாதவன் மனிதர்களின் கீழ்மையைச் சொன்னார். அவருக்கும் யதார்த்தனுக்கும் இடையில் முக்கிய வேறுபாடு உண்டு. யதார்த்தன் அதிகம் அகவய உணர்வுகளுக்குள் செல்லாதவர். புறவயமான சித்தரிப்புகளிலே தங்கிவிடுவார். இது இயல்புவாத எழுத்தின் ஒரு பங்கு. புறவயச் சித்திரிப்புகள் ஊடக எளிமையாக அன்றாட நிகழ்வுகளை இணைத்துக் கதை சொல்லுதலை, எஸ்.பொ. மற்றும் பூமணி போன்றவர்களிடமும் இதே வகையான இயல்புகளைக் காணமுடியும். அதனாலே இன்றும் அவர்கள்

இயல்புவாத எழுத்தின் முன்னோடிகளாக அடையாளப் படுத்தப்படுகின்றார்கள். இலங்கைத் தமிழ் இலக்கியம் சார்ந்து நுண்சித்திரிப்புகளை அதிகம் வெளிக்கொணர்ந்த வர்களில் எஸ்.பொவும் தெளிவத்தை ஜோசப்பும் முக்கியமானவர்கள்.

யதார்த்தனும் தர்முபிரசாத்தும் யுத்தத்தின் பின் ஏற்பட்ட விளைவுகளை அகழ்ந்து எடுத்துக் கதைகளை எழுதுவதில் ஒத்த தன்மையைக் கொண்டிருக்கிறார்கள். யதார்த்தன் தனியே மனிதர்களின் உணர்வுகளைப் பேசவே எத்தனிக்கின்றார். அரசியல் தளத்தை அதிகம் துளைப்பதில்லை. தர்மு பிரசாத்தின் கதைகள் அரசியல் தளத்தையும் கேள்வி கேட்க முனைகின்றன. இறுதி யுத்த காலமும் முகாம் வாழ்க்கையும் யதார்த்தனின் கதைகளில் ஊற்றெடுகின்றன. பதின்ம வயதுச் சிறுவன் ஒருவனின் பார்வையில் பெரும்பாலும் அப்புனைவுகள் நகர்கின்றன. தர்மு பிரசாத்தின் புனைவுகள் பல்வேறு இயக்கங்கள் இயங்கிய எண்பதுகளின் காலத்தைத் தொட்டு ஊசாவி விடுதலைப்புலிகளால் ஏனைய இயக்கங்கள் தடைசெய்யப்பட்ட சம்பவத்தின் எச்சத்தை மீட்டி முற்றிலும் யுத்தம் ஓய்ந்த இக்காலத்தில் நின்று விசாரணை செய்கின்றன. இங்கே வெறுமே அரசியல் பேசாமல் கதைகளின் ஊடாக அவற்றை இயங்கச்செய்வதில் தர்முவின் இலக்கிய வெற்றி தங்கியிருக்கின்றது.

செந்தூரன்

செந்தூரன் சில கதைகளை எழுதியிருக்கிறார். சிறுகதைகள் என்ற வட்டத்தில் அடக்கக்கூடியதாக இருந்தாலும் பெரும்பாலும் அவை நீள்கதைக்கான வடிவத்தைக் கொண்டிருக்கின்றன. கட்டங்க ட்டங்களாகச் சம்பவங்களைக் கோர்ப்பதின் ஊடாக முழுமையான ஒரு சித்திரத்தை நோக்கி நகரும் கதைகள். சம்பவங்களை ஊசி - நூலினால் தைப்பது போல அனைத்தையும் இணைக்கும் தையல் கோடுகளே கதைகளின் மையப்புள்ளியை நோக்கிக் குவிக்க வைக்கின்றது. அதிகம் உணர்வுகளையோ, கழிவிரக்கத்தையோ உண்டு பண்ணாமல் மனித அவலத்தின் கடைந்தெடுத்த சிறுதுளிகளை ஊதிப்பெருப்பித்துக் காட்டும் சொல்முறை. உவமைகளும் சம்பவ விபரிப்புகளும் ஷோபாசக்தியை நினைவு படுத்துகின்றன. உணர்ச்சிகரமான ஒரு சம்பவத்தைச் சொல்லிவிட்டு அதன் முடிவில் அங்கதமான உணர்வுகளை விதைத்துச் சுயபகிடியை உருவாக்கும் ஷோபாசக்தியின் உத்தி செந்தூரனிடம் நிறையவே உண்டு. அதன் தாக்கத்தின் எச்சத்தைக் குழிதோண்டி புதைத்தாலும் வேறு கதைகளில் அவருக்கே தெரியாமல் எழுந்து நடமாடத்தான் செய்கின்றன.

சாதனா

சாதனா இதுவரை ஆறு சிறுகதைகள் எழுதியிருக்கிறார். யுத்தம் என்பதைத் தாண்டி எவையும் ஈழத்து இலக்கியத்தில் வராதா என்ற கேள்வி எப்போதும் இருப்பதுண்டு. சாதனா இந்த இடத்தில் குறிப்பிடப்பட வேண்டியவர். தர்மு பிரசாத், யதார்த்தன் மற்றும் செந்தூரன் போன்றவர்களிலிருந்து சாதனாவின் படைப்புலகம் நிறையவே மாறுபடுகின்றது. ஈழத் தமிழர்கள் பயணம் செய்த இடங்கள் மிக விரிவானவை. யுத்தத்தின் விளைவுகளால் மாத்திரமின்றி தொழில் தேடும் பொருளாதாரக் கனவுகளினாலும் விரட்டியடிக்க ப்பட்டவர்கள். எங்கெல்லாம் சென்று வசிக்க ஆரம்பித்தார்களோ அங்கெல்லாம் சங்கங்கள் அமைத்து இலக்கியக் கூட்டம் என்ற பெயரில் சபையைக்கூட்டி அரசியல் மட்டும் பேசி மாறி மாறி மண்டையை உடைத்ததுதான் வரலாறாக இருக்கின்றது. படைப்பூக்கம் என்ற வகைப்பாட்டில் உரையாடல்கள் நகரவேயில்லை. எனினும் தனிப்பட்ட குழுநிலை நண்பர்கள் படைப்பூக்கம் சார்ந்து எடுத்த முயற்சிகளும் இருக்கின்றன. எக்ஸில், அம்மா போன்ற உட்சுற்று இதழ்களின் பங்களிப்பைக் குறிப்பிடலாம். இப்போது, அடுத்த தலைமுறை சிறிதளவு படைப்பூக்கம் சார்ந்த உரையாடல்களில் ஈடுபட ஆரம்பித்திருக்கிறார்கள். இன்னும் அவை விரிவாக்கப்பட வேண்டும். சாதனா ஜேர்மனியில் எங்கோ ஊர் மூலையில் தனிமையில் வசித்தாலும் தமிழில் எழுதத்தான் செய்கிறார்.

சாதனாவின் கதைகள் நமக்கு முற்றிலும் அந்நியமான நிலப்பரப்புகளில் நகர்பவை. ரஷ்ய நிலங்களைக் கண்முன்னே விரியச் செய்பவை. கதைகளில் வரும் கதை மாந்தர்களும் நமது நிலத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை. இவையெல்லாம் சாதனாவின் சொந்த அவதானிப்பில் இருந்து உருவாகிய கூர்மையைக் கொண்டிருக்கின்றனவா என்றால் இல்லை என்றே சொல்வேன். வெவ்வேறு இலக்கிய புனைவுகளில் இருந்து கிடைத்த தாக்கத்தில் நீள்பவையாக அவை இருக்கின்றன. இது அசலான கதைக்கான தன்மையைப் பல நேரங்களில் இழந்துவிடுகிறது. இடைக்கிடையே கதைகளில் தெறிக்கும் தத்துவங்களின் சிறுதுளிகள் தாஸ்தாவெஸ்கியை நினைவுபடுத்துகின்றது. எனினும், சாதனாவின் கற்பனையாக்கம் வாசிப்பு இன்பத்தைக் கற்பனைக்கூடாக விரிப்பதில் வெற்றி பெறுகின்றது.

பழைய கிரேக்கத் தொன்மங்களின் எச்சங்களைக் கொண்டு கதைகளை இணைக்கும் முறைகள் சாதனாவின் புனைவு மொழிக்குள்ளால் அதிகம் கவர வைக்கின்றன. யதார்த்தனின் சில கதைகளும் இதே பாணியைக் கொண்டிருக்கின்றன. மொழிபெயர்ப்புக் கதைகள் ஏற்படுத்தும் செயற்கைத் தனங்கள் இவர்கள்

எழுதும் கதைகளில் இல்லாமல் இருப்பது ஒருவகையில் இக்கதைகளை மனதுக்கு அணுக்கமாக்குகின்றது. கதையின் மொழியைவிடச் சம்பவங்களே மிக முக்கியமானது. சம்பவங்களின் வலிமை சாதனாவின் கதைகளில் குறைவாகவே உள்ளது. சம்பவங்கள் இல்லாமல் அருவநிலையில் கதைகளை எழுதமுடியும். நினைவின் தொடர்ச்சியாக அவை இருக்கும். சாதனாவின் கதைகள் நினைவின் தொடர்ச்சியான எச்சங்களைப் பேசுவதோடு சில நிகழ்காலச் சம்பவங்களைக் கோர்ப்பதோடு நகர்கின்றது.

கபில் ஸ்ரனிஸ்லஸ்

கபில் ஸ்ரனிஸ்லஸ் சமீப காலத்தில் கவனிக்கத்தக்க கதைகளை எழுதும் பட்டியலில் இணைந்தவர். அவர் எழுதிய பெரும்பாலான கதைகள் மன்னார் நிலப்பரப்பில் நிகழ்பவை. இன்னும் சரிவர எழுதப்படாத மன்னார்ப் பகுதியை கபிலின் கதைகள் நிரப்பும் தன்மையைக் கொண்டிருக்கின்றன. நுணுக்கமான அவதானிப்புகள் கதைகளின் ஒவ்வொரு இழையிலும் தொத்தி அமர்ந்திருக்கின்றது. சிறுபொடியன் ஒருவனின் நினைவில் இருந்து கதைகளாக அவரின் கதைகள் விரிகின்றன. அனைத்துக் கதைகளிலும் இந்த இயல்புகளை நோக்க இயலுகிறது.

கபிலின் கதைகளை வேகம் வேகமாக வாசிக்க முடியும். காரணம் மிகுந்த குறுகிய வசன அமைப்புகளைக் கொண்டவை. சிறுகச் சிறுகச் சொற்களை அடுக்கி அரக்கு மாளிகையை நிர்மாணிப்பது போல கதைகளை உருவாக்குகின்றார். அலைந்து திரியும் மனிதர்களின் கதையை அழுதுவடியாமல் கதைகளாக்குகின்றார். துன்பத்தை இன்பமாகச் சொல்லுதல். இவரின் ஆரம்ப காலக் கதைகளில் சாரு நிவேதிதாவின் தாக்கம் அதிகம் இருந்தாலும், விரைவிலே அடுத்த கதைகளில் அவற்றைக் களைந்துவிட்டார். யதார்த்தவாதக் கதைகளாகக் கபிலின் கதைகளை முன்வைக்கலாம்.

சமகாலத்தில் எழுதிக்கொண்டிருக்கும் இவர்களின் கதைகள் தனித்தனியான படைப்புலகத்தை நோக்கிச் செல்வதை அவதானிக்க இயலுகிறது. அந்தக் கோணத்தில் உரையாடல்கள் விரித்தெடுக்கப்பட வேண்டியே உள்ளது.

எதற்கு எழுதுகிறோம் என்கிற கேள்வி முக்கியம் அல்ல. அதற்கான விடை என்னவாக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். எழுதுவதுதான் முக்கியம். அந்த இடைவிடாத செயற்பாடு பல்வேறு தளங்களைத் தொட்டு நகர ஒவ்வொரு படைப்புலகத்தையும் துழாவி முன்னோடிகளைக் கடந்து செல்லும்போதே நிகழும். ஒவ்வொரு தலைமுறைக்கும் புதுவகையான வாழ்க்கை அனுபவங்கள் உருவாகும். நாகரீகம் முன்னோக்கிச் செல்லச்செல்ல வாழ்க்கை முறையும் தடுமாற்றங்களும் மாறிக்கொண்டே இருக்கும். இதற்குள் ஏற்படும் சிக்கல்களையும் பிரச்சினைகளையும் எழுதுவதே எழுத்தாளரின் வேலையாக இருக்கும். புதுமைப்பித்தனும், பிரமிளும் எழுதியவற்றைத் திரும்பவும் மீண்டும் எழுதவேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் எழுதாதவற்றை எழுதுவதே அடுத்தடுத்து எழுத வருபவர்கள் செய்யவேண்டியது. தேவதச்சன் 'தகப்பனைக் கொள்ளுதல்' என்ற வசனத்தை உபயோகிப்பார். எப்போதும் அடுத்து வருபவர்கள் செய்யவேண்டியது முன்னுள்ளவர்களை தாண்டுதல் என்பதே அதன் சாரமாகும். ஷோபாசக்தி எண்பதுகளின் பிரச்சினைகளை எழுதிவிட்டார், சயந்தன் இரண்டாயிரத்தின் பின்னரான பிரச்சினையை எழுதிவிட்டார். யோ.கர்ணன் இறுதியுத்த காலத்தையும் அதன் பின்னரான அலைக்கழிப்பையும் எழுதிவிட்டார். இவையெல்லாம் யுத்தம் என்பதை மையப்படுத்துபவை.

கொழும்பில் வசிக்கும் தமிழர்களின் கதையை யார் எழுதப்போகிறார்கள்? அவர்களின் மனநிலையைப் பற்றி எழுதுவதற்கு யார் இருக்கிறார்கள்? ஏன் அவை எழுதப்படவேயில்லை? அவை வெற்றிடமாகவே இருக்கின்றது. இறுதியுத்தம் தீவிரமாக நடை பெற்றுக்கொண்டிருந்த போது அது பற்றி கரிசனை இல்லாமல் திரையரங்குகளில் டிக்கட் எடுக்க முந்தியடித்து அடிபட்ட கொழும்புத் தமிழர்கள் இருக்கிறார்கள். உதிரியான அவர்களின் கதைகள், மனநிலைகள் புனைவுகளில் வருவதேயில்லை. தெளிவத்தை யோசப் மலையக மக்களின் பிரச்சினையை எழுதினார். இன்றிருக்கும் மலையகம் வேறு, இருக்கக்கூடிய பிரச்சினைகள் வேறு. அவற்றை யார் எழுதப் போகிறார்கள்? ஒவ்வொரு பக்கமும் எழுதுவதற்கு நிறையவே உள்ளன. அவை நோக்கி பயணிக்க வேண்டும்; எழுச்சியாக.

மேலே குறிப்பிட்ட தர்முபிரசாத், யதார்த்தன், சாதனா, செந்தூரன் மற்றும் கபில் ஸ்ரனிஸ்லஸ் எழுதிய கதைகள் உதிரியானவை. ஒப்பீட்டு அளவில் யதார்த்தன் இவர்களில் அதிகமாக எழுதியிருக்கிறார். இவர்களின் தொகுப்புகள் வெளிவரும்போதே ஒட்டுமொத்த படைப்புலகத்தை தெளிவாக அலசி ஆராய முடியும். எனினும் உதிரியாக வாசிக்கப்பட்ட கதைகளை வைத்து மேற்சொன்ன அவதானங்களை பெறக்கூடியதாக இருக்கின்றது.

தர்மினி
கவிதைகள்

தலை பனியின் உறைநிலை
கயிறால் பிணைத்த உடல்
அசைக்க முடியாதென்ற மனம்
நோவை உணர்கின்றது

இடக்கால் உதறலோடு விழிப்பு
தொடையிலிருந்து முறுகிய நரம்பொன்று
கருநீலமாகி நீள்கின்றது

என்ன சத்தமது?
எதை உச்சரித்தேன்?
அறையில் வழக்கமான ஒலியளவில் குறட்டை
அதனுடன்
ஒரு நுளம்பின் பறப்பு

என் மீது மீண்டும் இறங்குகின்றன
சிலந்திகள்

காலை - மாலையெனப் புனைந்த வாழ்வை
எடிட் செய்த படமாக
மூளை சுழன்றெழுப்புகின்றது

பின்னிச் செல்லும் வலையில்
ஊர்கின்ற உடல்
முதற்காட்சி.

2

உடம்பை விசுக்கியெறிகின்றேன்
மினுங்கிய கீழ்வானும் தீயாய் பற்றிக்கொண்டது.

காட்டின் பசும்வாசத்தோடு
என் தசைகள் எரிகின்றன

உதடுகளின் இரத்தத் துளிர்ப்பில்
உயிர் வடிகின்றது

எலும்புகள் வெண்மரமாய் கிளை விரித்து
ஆவெனச் சிரித்த வாயோடு அதுவும் நான்.

3

வானத்தில் ஒரு சொர்க்கம் இருப்பதாக
அம்மா கதை சொன்னார்

பாம்புகளும் முட்களுமற்ற
மலர்த் தோட்டம் உள்ளதென்றும்
செந்நிறமாய் செடிகளெங்கும் பூத்திருப்பதாக
ஒரு பூவின் பெயர் சொன்னார்

நல்லவளாயிருந்தால்...
அங்கே
வயதில்லாத வாழ்வும்
பசியறியாத நாட்களும்
பூக்களின் ஆசனமும் கிடைக்குமென்றார்

அடுத்தொரு பக்கம்
நெருப்பெரியும் நரகம் உண்டென்றும்
ஆணிகளால் ஆசனமொன்றும் இருக்கென்றார்

மேகங்கள் அள்ளித்தூக்கி வைத்திருப்பதாக
வானப் பூவனத்தில் உலவும் கனவுகளின்
நித்திரையில் நான்
கோபங்களை மறைத்து
விருப்புகளை வெறுத்து
புன்னகை கீறிய வாயாய்
அப்படியொரு நடிப்பு
கதை...கதையான சொர்க்கமும் நரகமும்
பொய்யென
அம்மா சொன்ன அந்நாளில்
வளர்ந்திருந்தேன்

4.

தூரத் தெரிகின்ற வானத்தில்
மேகத் துண்டு
பறவையைத் துரத்துகின்றது

நாளை மலர்த்துகின்றது
இரவு

கடலினுள் கரைகின்றது
பகல்

சுவரில் சுழன்றபடி
வயது

விரையும் காலத்தைத் தாண்டிச் செல்ல
கனவுத் திறப்பில்
ஒரு வழி

ஆணென்றும் பெண்ணென்றும்...

சி.புஸ்பராணி

நான் எனது நாட்டில் வாழ்ந்த முறைக்கும், இப்போது ஃபிரான்ஸில் வாழ்வதற்கும் இருக்கின்ற வித்தியாசங்கள் ஆரம்பத்தில் பல விடயங்களில் ஒன்றிப்போக முடியாமல் குழப்பத்தில் ஆழ்த்தியது உண்மை. ஆனால், போகப்போக இங்குள்ளோரிடமுள்ள குணாதிசயங்கள் பல என்னை ஆட்கொண்டு மகிழ்விக்கின்றன... பாசாங்கில்லாத இங்குள்ளோரின் வாழ்க்கை முறை, மனித உணர்வுகளை மதிக்கும் மாண்பு, பாலியல் வேற்றுமையென்று பெரிதும் நோக்காது நட்புரிமை பாராட்டுதல் என்று அடுக்கிக்கொண்டே போகலாம்.

சமுதாயம், கலாசாரம், பண்பாடு, உறவினர்கள் என்று முகம் கொடுத்துக் கொடுத்தே என் வாழ்வின் இனிமைகள் அத்தனையையும் ஒன்றுமேயில்லாத சூனிய வெளிக்குத் தள்ளிவிட்டு, இழந்தவற்றைத் திரும்பப் பெறமாட்டேனா என்ற ஏக்கத்தின் தழும்புகளை மனதெங்கும் நிறைத்து வைத்திருக்கின்றேனே இன்றிருக்கும் தெளிவும், துணிவும் அப்போது இல்லாமல் போனது ஏனென்று, என்னையே நான் திட்டித் தீர்க்கின்றேன். சின்ன வயதிலிருந்தே ஏதோவொரு விதத்தில், மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ பாலுறுப்புக்கள் பற்றியே சுட்டிக் காட்டிக் காட்டி, நினைவுறுத்தி, அச்சுறுத்தி வளர்க்கப்பட்ட வீணாய்ப்போன நாட்களை மீட்டுப்பார்க்கின்றேன். அதுவும் எம் சமுதாயத்தில் பெண் பிள்ளைகளை வளர்த்த விதம் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.

மூடி மூடியே வளர்க்கப்பட்டதால், எம்மையறியாமலே கூச்சம், தயக்கம் எல்லாம் ஒரு சேரத்தாக்கி எமது இயல்பான தன்னம்பிக்கையைத் தேய்ந்து போக வைத்ததை வெறுப்போடு திரும்பிப் பார்க்கின்றேன். நான் சிறுமியாக இருந்தபோது, உட்காரும்போது, நடக்கும்போது படுக்கும்போது, ஆண்பிள்ளைகள் முன் நடமாடும்போது என்று ஒவ்வொரு தருணத்திலும் 'என் அவயவங்கள் வெளியே தெரிகின்றனவா?' என்ற அவதானத்தோடேயே காலம் கழித்ததை இப்போது எண்ணினால் கேவலாயிருக்கின்றது.

பின்னாளில் என் தன்னம்பிக்கையை மீட்டெடுத்ததற்கு பக்கபலமாய் நின்றது என் சகோதரனே. பொதுவெளிக்குப் பெண்கள் வரத் தயங்குகின்ற ஒரு காலகட்டத்தில், என் சகோதரனின் அனுசரணையோடு வீட்டை மீறி நான் அரசியலில் ஈடுபட்டதோடு, என் துணிச்சல் பட்டைதீட்டப்பட்டது தனிக்கதை.

பெண்களை ஆண்கள் ஊடுருவிப் பார்ப்பதற்கும் இந்த வளர்ப்புமுறையே வித்திட ஆரம்பித்து, ஆண் - பெண் என்ற இடைவெளியைப் பெரிதாக்குகின்றது என்ற உண்மையை உணர்வதென்பது எம்மவர்க்குக் கைவரவே வராது. நான் படிக்கும் காலத்தில் ஆண்பிள்ளைகளோடு கலந்து உட்கார வைக்கப் பட்டதே கிடையாது, எந்தவொரு நிகழ்ச்சியிலும் ஆண்கள் வேறாகவும் பெண்கள் வேறாகவும் தனித்தனியாகக் கலந்துகொண்டனர்.

இப்போது வாழும் நாடான ஃபிரான்ஸில் பள்ளி வாழ்க்கைமுறையை அவதானித்துப் பார்க்கின்றேன். சின்னக் குழந்தைகளிலிருந்தே பள்ளிச்சிறார்கள் பால் பேதமின்றிக் கைகளைக் கோர்த்துக்கொண்டு வரிசையாகப் போவது எவ்வளவு மகிழ்ச்சி தருகின்றது தெரியுமா? சிறு வயதிலிருந்தே பால் பேதமின்றி பிள்ளைகள் வளரவேண்டும். அப்போது தான் ஆண் - பெண் பிள்ளைகளுக்கு , அருகமர்ந்து பழகும்போது தேவையற்ற மருட்சியோ ,சிலிர்ப்போ தோன்ற

வாய்ப்பு குறையும். எதிர்ப்பாலார் சக மனிதர் என்ற உணர்வு தோன்றும்.

பெண்களைக் கண்டவுடன் ஊடுருவிப்பார்க்கும் அநாகரிகத்தை ஆண்கள் உணர்ந்து கொண்டால் பொது வெளியில் பெண்கள் இயல்பாய் இருக்க முடியும் . இங்கு பஸ்ஸிலோ ட்ரெயினிலோ பிரயாணம் செய்யும்போது அலட்சியமாக அமர்ந்திருக்கும் நாம், எம் தமிழர்களைக் கண்டால் மட்டும், எம்மை யறியாமலே, எமது ஆடைகள் சரியாக இருக்கி ன்றனவா என்று கவனிக்காமல் இருக்கமுடிவதில்லை. பலபெண்கள் இதுபற்றிக் குறைப்பட்டுப் பேசியதைக் கேட்டிருப்பதால், என் கருத்துடன் சேர்த்துப் பன்மையாக எழுதியுள்ளேன்...எல்லா ஆண்களும் அப்படியில்லையென்று தெரிந்தும், எம்முள் ஊறிய பொதுவான எண்ணமே எம்மையும் மீறி எச்சரிக்கை பண்ணுகின்றது.

பிள்ளைகள், வெய்யிலுக்கு ஏற்றவாறு, சிறிய ஆடைகள் அணிந்து ஆண், பெண் பேதமற்றுக் குதித்துக் குத்துக்கரணமடித்து, ஓடியாடி விளையாடும் கிலேசமற்ற சுதந்திரம் எனக்குக் கிடைக்காமல் போனதன் நெருடலை உணருகின்றேன். வளரும் பருவத்திலிருந்தே ஆண் பெரியவன், மதிப்புக்குரியவன், முக்கியமாகப் பெறுமதி வாய்ந்தவன் என்ற மமதையுணர்வும் ஊட்டி வளர்க்கப்படும் பெரும்பாலான ஆண்களுக்குத் தான் உயர்ந்தவன், ஆதிக்க பலம் கொண்டவன் என்ற உணர்வு இரத்தத்தோடு கலந்துவிடுவதால், தன்னை முன்னிலைப் படுத்துவதற்கு அவன் பாவிக்கும் உத்திகள் வன்முறையில் போய் முடிகின்றன. இதற்கு விதி விலக்கான , புரிதலோடு பெண்களை மதிக்கும் ஆண்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். விகிதாசாரத்தில் இப்படிப்பட்டோர் குறைவென்பதே என் கணிப்பு. ஆண்களைப் பலவழிகளில் கொடுமைப்படுத்தும் பெண்கள் பற்றியும் அறிந்திருக்கின்றேன்.. இப்படிப்பட்டோரும் எண்ணிக்கையில் மிகக்குறைவே.

பெண்கள் அதிவேகமாக முன்னேறிக் கொண்டேயிருக்கின்றார்கள் என்பது உண்மையாக இருந்தபோதிலும், உலகெங்கும் பெண்கள் கொடுமைக்குள்ளாகும் செய்திகள் எம்மை அதிரவை த்துக் கொண்டுதானிருக்கின்றன. ஆண் என்ற தடிப்போடு, வளர்ந்த எம் நாட்டு ஆண்கள் பலரால் ,நம் பெண்கள் படும்பாடுகள் புலம்பெயர்ந்த நாடுகளில் மோசமாக இடம்பெறுகின்றன என்பது பலர்அறியாத சோகம். இப்படிப் பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருத்தி என்று வெளியிடுவதில் எனக்கு எவ்வித தயக்கமுமில்லை.

பெற்றோர், உறவினர்கள் மத்தியில் வாழ்ந்த பெண்ணொருத்தி தெரியாத நாட்டுக்கு, அந்நாட்டு மொழியறியாத திகைப்போடு திருமணம் என்ற பேரில் இங்கு வந்து சேர்கின்றாள். இதை ஒரு வாய்ப்பாகக் கொண்டு ...தன்னை எதிர்த்துப் பேசப் பெண்ணின் உறவுகள் இங்கில்லை என்ற பலம் அதிகரிக்க, மனைவியைச் சித்திரவதைப்படுத்தும் மனோவியாதி இங்குள்ள ஆண்களிடம் பரவலாகக் காணப்படுகின்றது. எனக்குத் தெரிந்த சில குடும்பங்களிலேயே இவ்வாறான சம்பவங்களை நேரில் அறிந்து, நொந்து போயிருக்கி ன்றேன். இன்னும் வெளியில் வராமல் மறைக்கப்படும் கதைகளும் நிறைய.. இதில் சிலவற்றை இங்கு பகிரலாம் என்று நினைக்கின்றேன்.

கேட்பதற்கு எவருமில்லை என்ற துணிவில் ,வக்கிரம் பிடித்த ஆண்கள் சிலர் செய்யும் அக்கிரம அடக்குமுறைகளை , எதிர்க்கத் திராணியற்ற பெண்கள் பலர் அடங்கியே போகின்றார்கள்...சட்டங்களும், சமூக சேவை நிறுவனங்களும் பெண்களுக்கு ஆதரவாக இருந்த போதிலும் , பிரச்சனைகளை வெளியில் விடாத பெண்களின் தயக்கமும், அவர்களின் பயம் கலந்த மௌனமும், மனச்சிதைவின் பிடிக்குள் தள்ளிவி டுகின்றன. சிலபெண்கள் தங்கள் உயிரையே மாய்த்திருக்கின்றனர்.

இலண்டனில் வசிக்கும் என் உறவுப் பெண்ணொருவர் பேஸ்புக்கில் புரபைல் படமாக தனது சொந்த முகத்தைக் கொண்ட படத்தைப் போட்டதால், கோபம்கொண்ட கணவன் அவளை அடித்ததில், அப்பெண்ணுடைய வலது கை முறிந்துவிட்டது. 'கீழே விழுந்தேன்' என்று பொய் சொல்லிச் சிகிச்சை பெற்றிருக்கின்றார் இந்தப்பெண். இப்போது புரபைல் படமாகத் தானும் கணவனும் சேர்ந்திருக்கும் ஒரு படத்தைப் போட்ட பின்தான் அக்கணவன் நிறைந்துபோயிருக்கின்றான். அம்முகநூல் கணக்கு, கணவனால் நேரடியாகக் கண்காணிக்கப்படுகின்றது. இதனால் பெரும் மனுவுளைச்சலுடன். முகநூல் கணக்கை மூட நினைத்த போதிலும் அதற்கும் ஏதாவது சந்தேகப்படுவான் என்ற பயத்தில் அவ்வெண்ணத்தையே கைவிட்டு விட்டதாக என்னிடம் கூறி ஆத்திரப்பட்டார் அப்பெண்.

இன்னும் கொடுமையான இன்னொரு பெண்ணின் வாழ்வு, இதில் வரும் ஆணுக்கு வயது முப்பது. இவனும் ஊரிலிருந்தே மனைவியைக் கூப்பிட்டி ருக்கின்றான். மனைவி நல்ல அழகி. இதனால்தானோ என்னவோ, இவனுக்கு மனைவிமீது சந்தேகம்.. அது அவனுள் வியாதியாக ஊன்றிவிட்டது. மனைவியைப் படிக்கவிடவோ, வேலைக்கு அனுப்பவோ அவனுக்குப்

பிடிக்கவில்லை. அவளை வெளியில் போகவிடவே பயந்தான்.வேலைக்குப் போகும்போது கதவைப்பூட்டித் திறப்பைக் கொண்டுபோய்விடுவான்.

இன்னொன்றை இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டும் .இவர்கள் குடியிருந்த வீடு மிகச்சிறியது..கழிப்பிடம் வெளியில் இருந்தது. குழந்தைகள் மலசலம் கழிக்கும் பிளாஸ்ரிக் கழிப்பான் ஒன்றை வாங்கிவந்து மனைவியிடம் கொடுத்திருக்கின்றான் இந்த கொடுமைக்காரன். அவன் வேலை முடிந்து வந்தபின், அவனோடு சேர்ந்து போய்த்தான், வெளியிலுள்ள பொதுக்கழிப்பறையில் கழிப்பானைச் சுத்தம் செய்யவேண்டும்.இதனால் அருவருப்புக் கொண்ட பெண் தண்ணீர் அருந்தாது, உணவு கொள்ளாது இருந்திருக்கின்றாள் பல நாட்கள்.

இந்தப்பெண் வீட்டுக்குள்ளேயே பூட்டப்பட்டிருப்பதை எப்படியோ உணர்ந்த பக்கத்து வீட்டுக்காரர்கள் போலீசுக்கு அறிவிக்க அவள் மீட்கப்பட்டாள் பெரும் மனச்சிதைவுக்கு ஆளான அந்தப்பெண் நோய்வாய்ப்பட்டு இறந்ததாகச் சில மாதங்களின் முன் இந்தக் கொடுமையை அறிந்தேன், இது நடந்தது லண்டனில். இப்படி எவ்வளவோ சம்பவங்கள் தொடரத்தான் செய்கின்றன.

என் கணவனாக இருந்தவனிடமிருந்து வெளியேற நான் ஏழு வருடங்கள் அல்லாட வேண்டியிருந்தது. இதையெல்லாம் வரி பிசகாமல் புத்தகமாக எழுதிக்கொண்டிருக்கின்றேன். இயல்பாய் அமைந்த என் கம்பீரமான என் தோற்றமே அப்போது எனக்கு எதிரியாயிருந்தது. என்னை இவன் கொடுமைப்படுத்துவதை போலீசாரே,நம்பவில்லை பல தருணங்களில் பரிதாபம் வரவழைக்கும் முகபாவத்தோடு இவன் சொன்ன பொய்களே உண்மையென்று சிலர் நம்பினார்கள் ஈற்றில் நீதிமன்றமே என்னை நம்பியது. என் கணவனிடமிருந்து விடுதலை பெற்றபின்னரே நிம்மதியென்பது என்னவென்பதை உணர்ந்தேன்.. வெளியில் கொட்டிய வக்கிரம்,கோபம் ,வன்முறை எல்லாவற்றுக்கும் ,என் மீது இருந்த பொறாமையும், ,தன்மீது கொண்ட பயமுமே காரணங்களாகும். என் மீது அன்பு காட்டி அரவணைத்து நடந்தால் தன் கௌரவம் போய்விடும் என்ற ரீதியில் முகத்தைச் சிடுசிடுவென வைத்திருப்பதில் இந்த ஆள் காட்டிய சிரத்தை அதிகம் 'நான் ஆண்' என்ற மூர்க்கம்தான் இப்படியான ஆண்களை ஈவு இரக்கமில்லாதவர்களாய் ஆக்கிவிடுகின்றது.தங்களைத் தாங்களே பலிக்கடாக்களாக்கி 'இதுதான் நியதி' என்று வாழும் பெண்களும் என் பார்வையில் வெறுப்புக்குரியவர்களே.

அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்ட காலத்தில் அன்புமிக்க ,பெண்களை உயர்வாக மதிக்கும் பல ஆண்களை நட்பாகக் கொண்டவள் நான். அவர்களிடம் பெண்களைச் சிறுமைப்படுத்தும் கீழான புத்தி இருந்ததை நானறியேன். ஆனாலும் தலைமை தாங்குவதற்கோ முடிவுகளை எடுப்பதற்கோ பெண் உறுப்பினர்களை அனுமதிக்காத தன்மை அவர்களிடமும் இருந்தன.போராட்டகுணமுள்ளஇளம்பெண்ணாயிருந்த நானே, ஒரு குடும்பத்தில் மனைவி என்ற பாத்திரத்தில் இவ்வளவு துன்பத்தை, அடக்குமுறையைச் சந்தித்திருக்கின்றேன் என்பது நான் எதிர்பார்க்காதது.

பேஸ்புக், வாட்சப் போன்ற பொது ஊடகங்களையும் சில ஆண்கள் நட்புத்தாண்டி,பாலுணர்வுக்கே முக்கியத்துவம் கொடுத்துப் பாவிப்பதை அவதானிக்க முடிகின்றது. வெறும் நட்புக்கு மட்டுமே இடம் கொடுத்து அன்பின் மகத்துவத்தை உணர்ந்து மகிழ இவர்களால் ஏன் முடியாமலிருக்கின்றது? தங்கள் இனிமையையும் தொலைத்துவிட்ட வெறுமையை, அன்பைக் கொடுத்து அன்பை வாங்கத்தெரியாதவர்கள் காலங்கடந்தே உணர்கின்றனர்.

நான் முன்பு குறிப்பிட்டதுபோல பாலியல் சமத்துவமின்மை இவர்களைப் போன்றோரை முழுதாக ஆக்கிரமித்திருப்பதே காரணம் என்பேன். இந்தப் பாலியல் சமத்துவம் அற்ற மனோபாவத்திலிருந்துதான் பெண்களை உயர்வாக மதிக்க மறுக்கும்,ஆணவமும் பல ஆண்களிடம் பரவலாகத் தென்படுகின்றது. அறிவுசார்ந்த பலரிடம்கூட பெண்களை மட்டமாக எண்ணும் அலட்சியம் மிகுந்திருப்பது வருத்தத்துக்குரியது. பாலியல் தேவைக்காக தங்களது சில்லறைத்தனமான பொழுது போக்குக்காகப் பெண்களை மருட்டித் தம் வசப்படுத்தும் ஆண்களது போலித்தனமும் இதை விடக் குறைந்ததல்ல.

ஆணையும் பெண்ணையும் நிகராகக் கொண்டாடும் ஒரே பார்வை ஆணை வளர்க்கும் பெண்களுக்கும் இருக்கவேண்டும். வீட்டிலிருந்து அம்மாக்கள் மூலமே ஆண்பிள்ளைகளை உயர்வாகவும் பெண்பிள்ளைகளை கொஞ்சம் கீழேயும் வைத்துப்பார்க்கும் ஓரவஞ்சனை ஆரம்பிக்கின்றது. வீட்டில் தொடங்கி ; படிக்கும் பள்ளிக்கூடம், பழகும் நட்பு வட்டங்கள் ,வேலை பார்க்குமிடம் , ஊடகங்கள், போக்குவரத்து என்று எங்கெங்கும் பாலியல் வேற்றுமையுடன் நோக்கும் குறுகிய பார்வை மாறிட வேண்டும்.அன்பும் சமத்துவமும் இங்கேயிருந்துதான் ஆரம்பிக்கின்றன. •